மன்னா

# திருத்தந்தை பிரான்சிஸ்

## தலைமைப் பணியில் ஆறு ஆண்டுகளை நிறைவுசெய்தார்



2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் தன் எட்டாம் ஆண்டு தலைமைப் பணியின்போது திடீரென பதவி விலகினார்.

### அசிசியின் புனித பிரான்சிஸ்

2013ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி, திருஅவையின் 266வது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரண்டு நாட்களுக்குப்பின் அதாவது மார்ச் 16ஆம் திகதி ஏறத்தாழ 600 பத்திரிகையாளர்கள் புனித ஆறாம் பவுல் அரங்கில் சந்தித்தார். அப்போது அவர் கூறிய வார்த்தைகள் முக்கியமனவை. “நான் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவ்வேளையில் என் அருகில் இருந்த பிரேசில் நாட்டு கர்தினால் Claudio Hummes அவர்கள் எனக்கு வாழ்த்துத் தெரிவித்துவிட்டு ஏழைகளை மறந்துவிடாதீர்கள் என்றார்.



ஏழைகள் என்றதும் எனக்கு முதலில் நினைவுக்கு வந்தவர் அசிசியின் புனித பிரான்சிஸ் அவர்களே. அவர் அமைதியின் மனிதர், ஏழ்மையின் மனிதர் மற்றும் இயற்கையைப் பாதுகாத்த மனிதர்'', அமைதி, ஏழ்மை, இயற்கை பாதுகாப்பு ஆகிய துறைகளில் திருத்தந்தையின் பணிகள் தொடர்வதை கண்கூடாகப் பார்க்கின்றோம். இந்த புதுத் திருந்தந்தையின் கீழ் திருஅவைப் படிப்பினைகளில் அதாவது கருக்கலைப்பு முறைகள், கற்புடைமை, பெண் அருட்பணியாளர்கள் ஒரேபாலின திருமணங்கள் என்பவற்றில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறவில்லை. இருப்பினும் அவரின் புதிய அணுகுமுறைகள் பலரை திருஅவையை திருப்பிப் பார்க்க வைத்துள்ளது. பலரைத் திரும்பி வரவைத்துள்ளது. அவரின் நடவடிக்கைகளை உற்று நோக்குபவர்களுக்கே அவர் திருஅவையை எவ்வழியில் எடுத்துச் செல்ல முயல்கின்றார் என்பது புரியும். நற்செய்தி அறிவித்தலின் புதிய வழி குறித்து அவர் கூறியுள்ளதே இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. நற்செய்தி அறிவிப்பு என்பது இறைவனின் கருணையையும், இரக்கத்தையும் அறிவிப்பதாக இருக்கவேண்டும் என எடுத்துரைக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வார்த்தைகளால் மட்டுமல்ல வாழ்வு நடவடிக்கைகளாலும் அந்த அறிவித்தல் இடம்பெறவேண்டும் என எடுத்துரைத்து ஏழைகளையும், புலம்பெயர்ந்தோரையும், நோயுற்றோரையும் தேடிச்சென்று சந்திப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

➡ 13

# இலங்கை மண்ணில் வின்சென்ஷியன் சபையினரின் இல்லத்திறப்பு விழா



இந்தியாவிலிருந்து வருகை தந்த வின்சென்ஷியன் சபைக் குருக்களான அருட்பணி. றெபாயேல் கூத்தூர் V.C அருட்பணி. சஜி வர்கீஸ் V.C ஆகியோரின் அயராத முயற்சியினால் எமது மறைமாவட்ட ஆயர் அவர்களின் அனுமதியுடன் 05.03.2019ஆம் திகதி அன்று வங்காலைப்பங்கில் வின்சென்ஷியன் சபை அருட்பணியாளர்களின் இல்லத் திறப்புவிழா நடைபெற்றது. இவ் இல்லத்தை வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. ச.மாக்கஸ் அடிகளார் திறந்துவைத்தார். ஆரம்பத்தில் அருட்பணி. சீமான் மரியதாசன் அடிகளாரால் செபவழிபாடுகள் நடைபெற்று, சிறிய செபக்கூடமும் மற்றும் வதிவிடங்களும் ஆசீர்வதிக்கப்பட்டன. இவ் வைபவத்தில் பல அருட்தந்தையர்களும், பல அருட்சகோதரிகளும், வங்காலைப் பங்குமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

➡ 15

# மடு மண்ணில் திருப்பாலர் சபையின் இரண்டாம் பயிற்சிப்பாசறை



மன்னார் மறைமாவட்டத்தின் மடுத் தியான இல்லத்தில் திருப்பாலர்சபையின் ஊக்குவிப்பாளர்களுக்கான 2ஆம் பயிற்சிப்பாசறையானது மாசி மாதம் 2ஆம் 3ஆம் 4ஆம் திகதிகளில் மட்டக்களப்பு, மன்னார் திருகோணமலை ஆகிய மறைமாவட்டங்களில் இடம்பெற்றது.

இதில் 129 ஊக்குவிப்பாளர்கள் கலந்து கொண்டனர். பாசறையின் முதல்நாள் பாப்பிறை மறைபரப்புச் சபையின் இயக்குனர் அருட்பணி. பசில் ரொகான் பர்னாந்து அவர்களும், மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர். அருட்பணி. விக்ரர் சோசை அவர்களும் இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் தனது உரையின்போது அவர் ஊக்குவிப்பாளர்கள் அனைவருக்கும் கூறிய ஒரு கருத்தானது, “ஊக்குவிப்பாளர்களாகிய நீங்கள் கத்தோலிக்க மறையை சரியான முறையில் கடைப்பிடிக்க பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்.

➡ 13


# மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம்



மன்னார் மறைமாவட்டக் குருக்கள் 60 பேர் மட்டில் தமது வருடாந்தத் தியானத்தை கடந்த 10 முதல் 15ஆம் திகதி வரை கொழும்பு தேவத்தை தியான இல்லத்தில் மேற்கொண்டனர். இந்தியா OFM கப்புச்சின் சபையைச் சேர்ந்த அருட்பணி. சுந்தர் வில்சன் அவர்கள் தியான உரைகளை வழங்கினார். இத்தியான நாட்களில் எமக்காகச் செபித்த அனைவருக்கும் நன்றி. உங்கள் மேலான செபங்களில் தொடர்ந்தும் எங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். ●

# IBC இன் வாழ்நாள் உரிமைப்போராட்ட ஆளுமைக்கான விருது

## மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை பெற்றுக்கொண்டார்



IBC தமிழ் நிறுவனம் 2019ஆம் ஆண்டு ஆளுமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வை 27.02.2019 யாழ்ப்பாணம் வலம்புரி விருந்தினர் விடுதியில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் எம் தாயக பிரதேசத்தைச் சேர்ந்த சமூகப்பணி மற்றும் கலை இலக்கிய பணிகளில் முன்னணியில் திகழ்ந்த 50 ஆளுமைகள் தெரிவுசெய்யப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படடன. எமது மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் பேருட்கலாநிதி இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்கள் வாழ்நாள் உரிமைப்போராட்ட ஆளுமைக்கான விருதினை இந்நிகழ்வின் போது பெற்றுக்கொண்டார். மேலும் யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்ற இயக்குனர் அருட்பணி. நீ. மரியசேவியர் அடிகளாருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த திரு. கு. செபமாலை அவர்களுக்கு நாட்டுக்கூத்து மூத்த ஆளுமைக்கான விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. ●

# மன்னா

**பதிப்பாசிரியரின் மனப்பொழிவு**

## மன்னார் திரு அவையும் அதன் விசுவாச ஆழமும்

கத்தோலிக்கத் திருஅவையின் விசுவாசம், அதன் தோற்றம், வளர்ச்சி, இறையியல் கோட்பாடுகள், இயற்கை, மனிதன், சமூகம், நவீன கண்டுபிடிப்புக்கள் இவை அனைத்தும் இறைமகன் இயேசுக்கிறிஸ்துவை மையப்படுத்தியதாகும்.

உலகத் திருஅவையின் உயர்பீடம் வத்திக்கானில் மையம் கொண்டிருந்தாலும் உலகத் திருஅவையின் தலைவர் எம் திருத்தந்தை பிரான்சிஸ் உலகத்தின் அனைத்து விடயங்களிலும், நாடுகளிலும் அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றார். கத்தோலிக்கத் திருஅவை அனைத்து விடயங்களையும் கத்தோலிக்க விசுவாசம், ஒழுக்கவியல் மற்றும் மனித இயற்கை விதிகளைக் கொண்டு அணுகுகின்றது. முக்கியமாக உலக அமைதிக்காக எம் திருத்தந்தையும், திருஅவையும் எடுத்து வரும் முயற்சிகள் உலக அமைதிக்கு எதிரானவர்களையும் திரும்பிப்பார்க்க வைத்துள்ளது.

இலங்கைத் திருஅவையில் மன்னார் திருஅவைக்கென்று பல விசுவாச ஆழமிக்க பாரம்பரியக் குறியீடுகளும், அடையாளங்களும், வாழ்க்கைமுறையும் உண்டு. சிறப்பாக 600ற்கும் மேற்பட்ட மன்னார் வேதசாட்சிகள், வேதசாட்சிகள் இராக்கினி ஆலயம், மடு அன்னையின் ஆரம்ப இடமாகிய மாந்தை புனித லூர்து அன்னை திருத்தலம், மடுமாதா திருத்தலம், ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலயம், பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயம், கோமரசன்குளம் கல்வாரித்திருத்தலம், புனித யோசேவ்வாஸ் அடிகளார் முதல்முதலில் இலங்கையில் கால் பதித்த இடம் மன்னார் சௌத்பார், மாதோட்ட கலைவடிவங்கள், புனிதர்களை மையமாகக் கொண்ட நாட்டுக்கூத்துக்கள், நாடகங்கள், வாசாப்புக்கள், கவிகள் ஆகியன அவற்றுள் சிலவாகும்.

ஆகவே இப்படிப்பட்ட விசுவாச பாரம்பரியங்களையும், கிறிஸ்தவ விசுவாச ஆழமிக்க வாழ்வு முறையையும் கொண்ட மன்னார் மறைமாவட்ட வேதசாட்சிகளின் வாரிசுகள் பெற்றுக் கொண்ட விசுவாசத்தை எண்ணத்திலும், உணர்விலும், மூச்சிலும், பேச்சிலும், வாழ்விலும் பிரதிபலிக்க வேண்டும்.

மன்னார் மறைமாவட்டத்தின் அருட்பணி இலக்காகிய அன்பிய வாழ்வினூடாக முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வை நோக்கி மறைமாவட்டமாக அனைத்துப் பங்குகளும், பங்குகளின் இறைமக்களும், அருட்பணியாளர்களும், துறவறத்தாரும், பொதுநிலைப் பணியாளர்களும் ஒன்றிணைந்து பயணிப்போம்.

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா பதிப்பாசிரியர்.* ●

❀❀❀

## மன்னார் பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலய திருவிழா வழிபாட்டு ஒழுங்குமுறைகள் – 2019

01. 11.04.2019 அன்று மாலை 5.00 மணிக்கு சிலுவைப்பாதையும், திருப்பலியும்.
02. 12.04.2019 (ஆறாம் வெள்ளி) காலை 7.30 மணிக்கு ஆயர் தலைமையில் திருவிழாத்திருப்பலி.

- ♦ காலை 1.00 மணிக்கு இரண்டாம் திருப்பலி.
- ♦ மதியம் 12.00 மணிக்கு மூன்றாம் திருப்பலி.
- ♦ மாலை 5.00 மணிக்கு நான்காம் திருப்பலி. ●

# மன்னார் மறைமாவட்டம்

# திருவழிபாட்டு வழிகாட்டி தவக்காலம் – 2019

### மார்ச்

04. குழந்தை இயேசு ஆலயம் - தேக்கம், மடுறோட். (மாதத்தின் முதல் திங்கள்)
07. விபூதிப் புதன் - தவக்காலம் ஆரம்பம்.
19. புனித சூசையப்பர் மரியாவின் கணவர் பெருவிழா வேப்பங்குளம், இலுப்பக்கடவை, காத்தான்குளம், தாழ்வுபாடு, வளன்நகர்.
 - மறைமாவட்ட முன்னைய நாள் அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்களின் பெயர் கொண்ட திருவிழா.
27. கோமரசன்குளம் கல்வாரி திருத்தல பாதயாத்திரை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் காலை 5.00மணி திருப்பலியோடு ஆரம்பம்.
29. கோமரசன்குளம் கல்வாரி திருத்தல பாதயாத்திரை நிறைவும் திருப்பலியும்.
31. தவக்காலம் நான்காம் ஞாயிறு - வறிய மாணவர் களுக்கான தவக்கால நிதி சேகரிப்பு. (கரிற்றாஸ் வாழ்வுதயம்)

### ஏப்ரல்

05. ஓலைத்தொடுவாய் கர்த்தர் திருத்தல பாதை யாத்திரையும், திருப்பலியும்.
12. பரப்புக்கடந்தான் கர்த்தர் திருத்தல பாதை யாத்திரையும் திருப்பலியும்.
14. குருத்தோலை ஞாயிறு - புனிதவாரம் ஆரம்பம்.
15. புனிதவாரத் திங்கள் - திருத்தைலம் மந்திரித்தல் திருப்பலி மாலை 5.00 மணி புனித செபஸ்தியார் பேராலயம். குருக்களுக்கான திருமணித்தியானம் மாலை 7.30 மணி ஆயர் இல்லம்.
18. புனித வியாழன் - புனிதவார திரிதின வழிபாடுகள் ஆரம்பம்.
19. புனித வெள்ளி - சிறிய குருமடத்திற்கான காணிக்கை.
20. புனித சனி.
21. உயிர்ப்பு ஞாயிறு.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்

## வவுனியா பெரியகோமரசன்குளம் கல்வாரித் திருத்தல தவக்கால வழிபாட்டு ஒழுங்குமுறைகள் – 2019

**"நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன்" (எசே. 36:26)**

**1. திங்கள் முதல் வியாழன் வரை**
- ♦ காலை 11.30 மணிக்கு திருப்பலி.

**2. வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்**
- ♦ காலை 9.00 மணிக்கு திருப்பலி.
- ♦ காலை 10.00 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றம்.
- ♦ காலை 10.30 மணிக்கு சிலுவைப்பாதையும் திருப்பலியும்.
- ♦ மாலை 3.00 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றமும் ஆசீரும்.

**3. 4ஆம் வெள்ளி பாதயாத்திரை (29.03.2019)**
- ♦ 27.03.2019 அன்று காலை 5 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் ஆரம்பமாகும்.
- ♦ 29.03.2019 காலை 5.00 மணிக்கு நற்கருணை வழிபாடு, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயம்.
- ♦ காலை 5.30 மணிக்கு மேற்படி ஆலயத்தில் பாதயாத்திரை ஆரம்பம்.
- ♦ காலை 10.00 மணிக்கு சிலுவைப்பாதை
- ♦ காலை 11.00மணிக்கு ஆயர்தலைமையில் கூட்டுத்திருப்பலி

**4. 6ஆம் வெள்ளி வழிபாடுகள் (12.04.2019)**
- ♦ காலை 7.00 மணிக்கு திருப்பலி
- ♦ காலை 8.00 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றம்.
- ♦ காலை 11.00 மணிக்கு சிலுவைப்பாதையும், திருப்பலியும்.
- ♦ மாலை 3.00 மணிக்கு நற்கருணை ஆசீரும் சிலுவைப்பாதையும் திருப்பலியும்.

**5. பரிசுத்த வார வழிபாடுகள்**
- ♦ குருத்தோலை ஞாயிறு (14.04.2019) காலை 11.00மணிக்கு திருப்பலி
- ♦ புனித வியாழன் வழிபாடு (18.04.2019) மாலை 5.00மணிக்கு பரலோகமாதா ஆலயம்.
- ♦ புனித வெள்ளி வழிபாடு (19.04.2019) காலை 7.00மணிக்கு சிலுவைப்பாதை கல்வாரியில்.
- ♦ மாலை 5.00 மணிக்கு வழிபாடு பரலோகமாதா ஆலயம்.
- ♦ ஆசந்தி வழிபாடு மாலை 10.00 மணிக்கு பரலோகமாதா ஆலயத்திலிருந்து கல்வாரி நோக்கி.

**6. புனித சனி (20.04.2019)**
- ♦ புனிதவார திருதின வழிபாடுகளில் பங்கெடுக்க வரும் நம்பிக்கையாளர்களுக்கு சகல வழிபாடுகளும் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.
- ♦ மாலை 11.00 மணி பாஸ்கா திருவிழிப்பு வழிபாடு
- ♦ உயிர்ப்பு ஞாயிறு (21.04.2019) திருப்பலி காலை 10.00மணி

**குறிப்பு:**
- தினமும் பாவசங்கீர்த்தனம் இடம்பெறும்.
- வெள்ளிக்கிழமை தோறும் மெழுகுதிரி பவனி இடம்பெறும் மாலை 6.00 மணிக்கு
- முன்கூட்டிய அறிவித்தலுடன் குறைந்த விலையில் உணவு வசதி செய்து கொடுக்கப்படும். ●

**தொடர்புகளுக்கு :**
அருட்பணி. ம. செல்வநாதன் பீரீஸ்
கல்வாரித்திருத்தல பரிபாலகர்,
பெரியகோமரசன்குளம், வவுனியா.
தொலைபேசி இல: 077-3517707


### உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## துயர் பகிர்கின்றோம்

**நியூட்டன் அடிகளாரின் அன்புத் தந்தை**



மன்னார் கட்டைக்காடு பங்கைச் சேர்ந்தவரும் அருட்பணி. நியூட்டன் அடிகளாரின் அன்புத் தந்தையான அமரர் திரு. மத்தேசுப்பிள்ளை சூசைரெட்ணம் அவர்கள் கடந்த 25.02.2019 அன்று இறைபதமடைந்தார்.

இவரது பிரிவால் துயருறும் அருட்பணியாளருக்கும், அவரது உறவுகளுக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றது. இவரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதி அடையச் செபிக்கின்றோம். ●

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

*-மன்னா நிர்வாகம்-*

**மன்னார் மறைமாவட்டச் செய்திகள்**

# மடு மறைக்கோட்ட திருப்பாலத்துவ

## சிறார்களுக்கான சின்னஞ்சூட்டும் வைபவம்







மன்னார் மறைமாவட்ட மடு மறைக்கோட்டத்திலே அந்தோனியார்புரம் பங்கில் நடைபெற்ற பாப்பிறை திருப்பாலத்துவ சபை சிறார்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு 23.02.2019 அன்று மாலை இடம்பெற்றது. முதலாவதாக திருப்பாலத்துவ சபை மறைமாவட்ட பாப்பிறை மறைபரப்பு சபைகளின் இயக்குநர் அருட்தந்தை சல்வதோர் சவுல்நாதன் அடிகளார் பி.ப 2.30 மணியளவில் மடு மறைக்கோட்டத்தைச் சார்ந்த மூன்று பங்குகளாகிய தேவன்பிட்டி, அந்தோனியார்புரம், மற்றும் விடத்தல்தீவு ஆகிய பங்குகளைச் சேர்ந்த 283 பிள்ளைகளையும் ஒன்றினைத்து சின்னம் சூட்டும் நிகழ்வின் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஆலோசனைகளையும் அதன் விளக்கம் முக்கியத்துவம் பற்றியும் கூறினார்.

அதன் பிற்பாடு மடு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. ச. சத்தியராஜ் அடிகளாரை அன்புடன் வரவேற்று அவரிடத்திலே சிறார்களை ஒப்படைத்தார். மடு மறைக்கோட்ட முதல்வர் தற்கால சூழலில் திருப்பாலத்துவ சபை சிறுவர்கள் மறைபரப்புப் பணியைச் செய்யவேண்டியதன் முக்கியம் பற்றி உரையாற்றுகையில் எசாயா புத்தகத்திலே 6:8ஆம் வசனத்திலே ''யாரை நான் அனுப்புவேன் நமது பணிக்காக யார் போவார்'' என்ற அழைப்பின் வார்த்தையை முன் வைத்ததுடன் வேதாகமத்தில் இருந்து இன்னும் பல கதைகளையும் கூறி பிள்ளைகளுடைய பொறுப்பை மறைபரப்புப் பணியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்து உணரவைத்தார்.

பிள்ளைகளுக்கும், ஊக்குவிப்பாளர்களுக்கும் தாகசாந்தியும், சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. அதன் பிற்பாடு மறைக்கோட்டப் பகுதிகளின் பங்குத்தந்தையர்கள் தேவன்பிட்டி பங்குத்தந்தை அருட்பணி. எ.டெனி கலிஸ்ரஸ் அடிகளார், அந்தோனியார்புரம் பங்குத்தந்தை அருட்பணி நீ. மே. பெயிலன் குரூஸ் அடிகளார், விடத்தல்தீவுப் பங்குத்தந்தை அருட்பணி. ச. அருட்குமரன் அடிகளார், மற்றும் இம் மூன்று பங்குகளின் திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று திருப்பலி ஒப்புக்கொடுக்க ஆயத்தம் செய்யப்பட்டது. பின்பு கொடியேற்றத்துடன் மறைக்கோட்ட முதல்வர் தலைமையில் திருப்பாலத்துவசபை இயக்குநர், அந்தோனியார்புரம் பங்குத்தந்தை, விடத்தல்தீவுப் பங்குத்தந்தை ஆகியோர் தமிழ் கலாச்சாரத்தின்படி மாலை அணிவித்து ஆராத்தி எடுத்து பொட்டு வைத்து திருப்பலி ஒப்புக்கொடுக்க அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மறைக்கோட்ட முதல்வர் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மறைக்கோட்ட முதல்வர் தமது மறையுரையில் எபி11:1ஆம் வசனத்தில் நம்பிக்கையைப்பற்றி விளக்கிக் கூறி கடவுளிடத்திலே எப்படி நம்பிக்கை வைக்க வேண்டும் என்று 13 பிள்ளைகளைக் கொண்ட ஒரு ஏழைக்குடும்பத்தின் தந்தையின் நம்பிக்கை இல்லாத தன்மையைக் குறித்த கதையையும் கூறித் தமது மறையுரையை முடித்தார்.

➔ 13

## பள்ளிமுனைப் பங்கின் புனித வின்சென்ற் டி போல் சபை பாப்புலர் மிஷன் தியான வழிபாடு





இத் தியான வழிபாடானது இந்திய கேரள மாநிலத்தைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் ரபாயேல் கூத்தூர் அடிகளார், சஜி வர்கீஸ் அடிகளார்களின் மூலம், பள்ளிமுனைப் பங்குத்தந்தை மரியதாசன் சீமான் அடிகளாரின் அனுமதியோடு 17.02.2019 தொடக்கம் 21.02.2019 வரை இல்லங்கள் தரிசித்தலுடன் ஆரம்பிக்கப்பட்டு 24.02.2019 தொடக்கம் 01.03.2019 வரையிலான நாட்களில் நாள்தோறும் காலை வழிபாடு 5.30மணி தொடக்கம் 7.00மணி வரையும், மாலை வழிபாடு 5.30 தொடக்கம் இரவு 9.15 மணி வரையும் நடாத்தப்பட்டது. இத்தியான வழிபாட்டின்போது திருவிவிலிய வசனங்கள் வாசிக்கப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டது.

➔ 13

## தேசிய சமாதானப் பேரவையின் சமயத் தலைவர்களுக்கான ஒன்றுகூடல்





சமயத் தலைவர்களுக்கிடையில் உறவையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் தொடர் முயற்சியின் முதல் கட்டமாக தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய சமயத் தலைவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு 23.02.2019 அன்று மாலை 3.00 - 5.00 மணி வரை மன்னார் ஆகாஸ் ஹொட்டலில் நடைபெற்றது. தர்ம குமார குருக்கள் இதில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார்.●

**மன்னார் மாவட்டச் செய்திகள்**

## ஆசிய ரோல் போல் போட்டியில் இலங்கை அணியில் கலந்து வெற்றியுடன் திரும்பிய மன்னார் வீராங்கனைகளுக்கு மன்னாரில் மகத்தான வரவேற்பு

03வது ஆசிய ரோல் போல் போட்டியில் இலங்கை அணியில் பங்குபற்றி வெற்றிவாகையுடன் நாடு திரும்பிய மன்னார் வீராங்கனைகள் மற்றும் வீரர்களுக்கு மன்னாரில் மாபெரும் வரவேற்பு. 3வது ஆசிய ரோல் போல் (உருள் பந்து) வெற்றிக்கிண்ணப் போட்டி இந்தியாவில் கடந்த 21.02.2019 தொடக்கம் 24.02.2019 வரை நடைபெற்ற பொழுது இலங்கை உட்பட பத்து நாடுகள் இப் போட்டியில் கலந்து கொண்டன.

இப் போட்டியில் பெண்கள் அணியானது மூன்றாவது இடத்தையும், ஆண்கள் அணி நான்காவது இடத்தையும் தட்டிக்கொண்டது. நடைபெற்ற போட்டிகளில் இலங்கை அணி சார்பாக மன்னார் மாவட்டத்திலிருந்து பெண்கள் அணியில் மூன்று வீராங்கனைகளும், ஆண்கள் அணியில் நான்கு வீரர்களும் பங்குபற்றியிருந்தனர். இவர்கள் நாடு திரும்பியதும் மன்னார் மாவட்ட வீராங்கனைகள் மற்றும் வீரர்களுக்கு மன்னார் மாவட்ட விளையாட்டு கழகங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள், பொது மக்கள் எனப் பலரும் ஒன்றினைந்து செவ்வாய்க் கிழமை 26.03.2019 அன்று இவர்களுக்கு மன்னாரில் மகத்தான வரவேற்பு நடாத்தினர்.

இவர்களை மன்னார் தீவின் நுழைவாயிலில் மாலையிட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகனராஸ், இலங்கை ரோல் போல் சம்மேளன செயலாளர் பா.தவேந்திரன், மன்னார் மாவட்ட



மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மன்னார் நகரபிதா அன்ரனி டேவிசன், மன்னார் நகரசபை உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட சொக்கோ மாஸ்ரர் விளையாட்டுக்கழக தலைவர் ஜே.எம்.அன்ரன் பிகிராடோ, செயலாளர் கே.சிறீகாந்தன் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இவர்களை மன்னார் நகரசபை மண்டபத்துக்கு அழைத்து வந்தனர்.

இங்கு இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட சொக்கோ மாஸ்ரர் விளையாட்டுக் கழகம் வீரர்களுக்கும் இவர்களைப் பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர்களுக்கும் ஞாபக சின்னங்கள் வழங்கி கௌரவித்தனர்.●

## சமாதான நீதவானாக நியமனம்

### அருளப்பு தேவராசா



மன்னார் ஜீவநகர் கிராமத்தை வசிப்பிடமாகவும், பெரியகுஞ்சுக்குளத்தை பிறப்பிடமாகவும் கொண்ட திரு. அருளப்பு தேவராசா மன்னார் நீதிமன்ற வலயத்திற்கான சமாதான நீதவானாக 08.03.2019ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட நீதிபதி ரீ. சரவணராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மன்/ பெரியகுஞ்சுக்குளம் றோ.க.த. பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை மன்/ பெரியபண்டிவிரிச்சான் அ.த.க பாடசாலையிலும், உயர்கல்வியை மன்/ முருங்கன் மகாவித்தியாலயத்திலும் பயின்றார். சமூகமட்ட அமைப்புக்களில் இவர் பல்வேறு பதவிகளை வகித்து வருகின்றார். ஆன்மீக விடயங்களில் மிகவும் ஈடுபாடு உடையவர் நானாட்டான் பகுதி ப.நோ.கூ சங்கத்தின் ஒரு நிரந்தர பணியாளராக முப்பது வருடத்திற்கு மேலாக சேவையாற்றி வருகின்றார்.●

## மன்.அடம்பன் றோ.க.த.க. பாடசாலைக்கு அகில இலங்கை ரீதியில் இரண்டு பதக்கங்கள்





கல்வி அமைச்சினால் நடாத்தப்படுகின்ற சிறுவர் மெய்வல்லுநர் போட்டி 11.03.2019 அன்று கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

➔ 13

### மனுவேல் அன்ரனி அலோசியஸ்



திரு. மனுவேல் அன்ரனி அலோசியஸ் என்பவர் 22.02.2019 மாவட்ட நீதிபதி உயர் திரு. T. சரவணராஜா முன்னிலையில் மன்னார் மாவட்ட நீதிமன்றில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் பாலைக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் உயர்தரம் வரை பள்ளிக் கல்வியை மேற்கொண்டவர். பாடசாலையில், விளையாட்டுத்துறை, இன்னும் மாணவ தலைவர், கடேட், சாரணர் இயக்கம் போன்றவற்றில் அங்கம் வகித்ததோடு மன்/பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலை, மன்/அடம்பன் ம.ம.வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் ஆசிரியராகவும் தனது பணியை மேற்கொண்டவர். மேலும் ஆலய அருட்பணிச் சபையில் ஆன்மீக பணியையும், ஏனைய சமூகப் பணிகளிலும் பணியாற்றியதோடு இலகடிப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவின் சிவில் கொமிட்டி தலைவராகவும் பணி புரிந்துள்ளார். ●

### வர்ணகுலசிங்கம் ஆரோக்கியம் தார்சியஸ்



மன்னார் உயிர்த்தராசன் குளத்தைச் சேர்ந்த வர்ணகுலசிங்கம் ஆரோக்கியம் தார்சியஸ் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லா அவர்கள் முன்னிலையில் 07.03.2019 வியாழன் அன்று மன்னார் நீதிமன்ற வலயத்திற்கான சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் உயிர்த்தராசன்குளம் றோ.க.த.க.பாடசாலையிலும், மன்/முருங்கன் மகா வித்தியாலயத்திலும் கல்வி பயின்றார். இவர் மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம் உயிலங்குளத்தின் தலைவரும், மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினரும், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் பொதுச்சபை உறுப்பினரும் ஆவார். உயிலங்குளம் சிவில் பாதுகாப்பு குழுத்தலைவரும், கிராம மட்ட பொதுநல சேவை அமைப்புக்களில் பல பதவிகள் வகித்து வருகின்றார். சிறந்த சமூக சேவையாளர் ஆவார்.●

***மன்னா வாசகர்களே :*** *மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!*

# மாந்தை புனித லூர்து அன்னை ஆலயச் சந்தியில் நடந்தது என்ன?

# உண்மை நிலை அறிவோம்

## மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர்

## அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரின் ஊடக அறிக்கை.

***03.03.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று மன்னார் மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத்தின் முன்பாக அமைக்கப்படவிருந்த திருக்கேதீஸ்வரம் ஆலய நிர்வாகத்தின் நிரந்தர அலங்கார வளைவு தொடர்பாகவும், இதனோடு மன்னார் மறைமாவட்ட குருக்களை இணைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுடாக பரப்பப்பட்டு திரிவுபடுத்தப்பட்டுள்ளதும், உண்மைக்குப் புறம்பானதும், மத உணர்வுகளைப் புண்படுத்துவதுமாக செய்திகள் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்தினால் வழங்கப்பட்ட தெளிவு அறிக்கை.***



### நடைபெற்ற நிகழ்வுகள்

மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத்திற்கு முன்னதாக சிவராத்திரி விழாவிற்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவிற்கு நல்லெண்ண அடிப்படையில் நல்லிணக்கப்பாடு இருந்தது. இந்த நிலையில் இதனை உதாசீனம் செய்வது போன்று புதிதாகவும், நிரந்தரமாகவும் அலங்கார வளைவினை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், மாந்தை புனித லூர்து அன்னை ஆலயப் பங்குத்தந்தை 02.03.2019 சனிக்கிழமை திருக்கேதீஸ்வர ஆலய சபை பொறுப்பாளர் திரு. இராமகிருஸ்ணன் மற்றும் இளைப்பாறிய அதிபர் திரு. தயானந்தராஜா ஆகியோரோடு ஒரு உரையாடலை மேற்கொண்டு ஏற்கெனவே இருக்கும் தற்காலிக வளைவினை பயன்படுத்துவதென்று கலந்துரையாடப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு இருக்க, சமய நல்லிணக்கத்திற்கு எதிராக 03.03.2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் 75 பேருக்கும் மேற்பட்டவர்கள் கனரக வாகனங்கள், ஏற்கெனவே பொருத்தி அமைக்கப்பட்ட இரும்பினாலான அலங்கார வளைவு, மற்றும் ஆயத்தம் செய்யப்பட்ட சீமெந்து கொங்றீட் கலவை ஆகியவற்றைக் கொண்டு வந்து மாந்தை புனித லூர்து மாதா ஆலயத்திற்கு முன்பாக ஏற்கெனவே இருந்த தற்காலிக வளைவினை தாங்களாகவே உடைத்து விட்டு புதிய அமைப்பை நிறுத்தி கொங்றீட் இட்ட போது அங்கு நின்ற பொது மக்களுக்கும், நிர்மாணப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த குழுவினருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. இதன்போது அமைதியான முறையில் இதை அமைப்பது தொடர்பாக கலந்துரையாட முற்பட்டபோது, அங்கு வளைவு அமைக்க வந்த குழுவினர் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டது போல எதுவும் இடித்துத் தகர்க்கப்படவில்லை. புதிதாக பலவந்தமாக கொங்றீட் இட்டுப் போடப்பட்ட கம்பிகளே பிடுங்கப்பட்டது.

இந்த சம்பவம் நிகழும் பொழுது ஒரு அருட்பணியாளர்களும் அந்த இடத்தில் இருக்கவில்லை. இவை அனைத்தும் நிகழ்வுற்று முடிவடைந்த நிலையில் மாந்தை புனித லூர்து அன்னை ஆலயப் பங்குத்தந்தை ஆலய வெளிவாயிலுக்கு வந்து பிரச்சனைகளை ஆராய முற்பட்டபோது அவருக்கு எதிராக சில பிரச்சனைகள் எழுந்த படியால் அங்கிருந்தவர்கள் சிலர் இதனை ஆயர் இல்லத்திற்குத் தெரிவிக்க செய்தி அறிந்தவுடன் சில அருட்பணியாளர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று மேலும் ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களைத் தடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர். இவ்வேளையில் அங்கு வந்த பொல்சார் நிலைமைகளை அவதானித்து இரண்டு பிரிவினரையும் அங்கிருந்து அகன்று செல்லும்படியும் தங்கள் பிரச்சனைகளுக்கு முடிவு காண்பதாகவும் தெரிவித்தார்கள். தற்போது மேன் முறையிட்டு நீதிமன்றத்தில் மாந்தை புனித லூர்து அன்னை ஆலயம் அமைத்த காணி தொடர்பாக திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாக உறுப்பினர்கள் காலஞ்சென்ற திரு. நீலகண்டன் திரு. ராமகிருஷ்ணன் ஆகியோரால் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. குறித்த வழக்கிலே காணி எல்லை, திருக்கேதீஸ்வர ஆலய தற்காலிக அலங்கார வளைவு தொடர்பான விடயங்கள் தீர்மானிக்கப்பட வேண்டிய நிலையில் இவ் அலங்கார வளைவை அமைக்க, புதிதாக முற்படுவது ஆரோக்கியமான விடயமல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த நிலைமையை அறிந்தவுடன் ஏனைய மக்களும், அருட்பணியாளர்களும் மீளவும் அங்கு ஒன்று கூடி மக்களை எந்த விதமான அசம்பாவிதங்களிலும் ஈடுபடாதவாறு அவர்கள் ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

இது இவ்வாறு இருக்க மீளவும் 03.03.2019 மாலை 7.30 மணியளவில் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இருந்து வளைவு கட்டப்படும் இடத்திற்கு மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் திரு. கேதீஸ்வரன் அவர்களோடு வந்த குழுவினர் மீளவும் புதிய வளைவினை நிர்மானிக்கும் பணியில் ஈடுபட்டனர். இவ்வேளையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் திரு. கேதீஸ்வரன் அவர்கள் கத்தோலிக்க மக்களுக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்து அங்கு குழுமி இருந்த கத்தோலிக்க மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தார். அவ்வேளையில் அங்கு கடமையில் இருந்த பொலிசார் செயற்பட்டு அனைத்தையும் மிகவும் சாதுரியமாக தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

கத்தோலிக்கத் திருச்சபை பல நெடுங்காலமாக அமைதிவழித் தீர்வையே விரும்பி வருகின்றது. கத்தோலிக்கத் திருச்சபை ஒருபோதும் சமய நல்லிணக்கத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்பதையும் இப்புனித சிவராத்திரியை அனுஷ்டிக்கும் சகல இந்துக்களுக்கும் எதுவித இடையூறும் ஏற்படா வண்ணம் நடந்து கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.●

## மனம் வருந்துகின்றேன்

**யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ப.யோ.ஜெபரட்ணம்**

**மாந்தை சம்பவம் குறித்து தவறாக வெளியிட்ட அறிக்கைக்காக மனம் வருந்தினார்**

மாந்தைச் சந்தியில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக நான் வெளியிட்ட அறிக்கை மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள், துறவிகள், பொதுநிலையினருக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதை அறிந்து நான் மனம் வருந்துகின்றேன். மாந்தைச் சந்தியில் நடந்த சம்பவம் பற்றிய ஊடகங்களின் செய்திகள் எனக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதால் தான் இப்படியான ஒரு அறிக்கையை எழுதினேன் அன்றி யாருடைய மனதையும் புண்படுத்துவது எனது நோக்கமாக இருக்கவில்லை.

அறிக்கையை வெளியிட முன்னதாக நடந்த சம்பவத்தின் உண்மையையும், அதன் பின்புலத்தையும் ஆராயாமல் வெறுமனே ஊடகங்களின் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கையை வெளியிட்டது தவறு என்று பலர் எனக்குச் சுட்டிக்காட்டினார்கள். அதனை நான் தாழ்மையோடு ஏற்றுக்கொள்கின்றேன்.

ஒரு குருவானவரின் வழிநடாத்தலில்தான் இச்சம்பவம் நடைபெற்றது என்று ஊடகங்களில் வந்த செய்தி தவறானது என்பதையும், மன்னார் குருமுதல்வரின் அறிக்கையில் நான் அவதானித்தேன். அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இந்து மக்களோடு நாம் சமரசமாக வாழவேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் இதனை நான் எழுதும்போது எனக்கிருந்த உணர்வாகும். மன்னார் மறைமாவட்ட மக்களும் இந்து சகோதரர்களோடு நல்லுறவில் வாழுகின்றீர்கள் என்பதும் மறுக்கமுடியாததாகும். மன்னார் மறைமாவட்ட மக்கள் விசுவாசத்திலும், நற்பண்பிலும் சிறந்தவர்கள் என்ற உண்மை எனக்கு நன்றாகத்தெரியும். இதனை மறுப்பதோ, அல்லது அங்குள்ள குருக்கள் துறவிகள், பொதுநிலையினரை குற்றவாளிகளாக சித்தரிப்பதோ எனது நோக்கமாக இருக்கவில்லை. மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் குருக்கள், துறவிகள் பலர் எனது நெருங்கிய நண்பர்களும்கூட, குருமட தோழர்களும், எனது மாணவர்களும், என்னிடம் உருவாக்கம் பெற்றவர்களுமே என்பதை நான் மகிழ்ச்சியோடு கூறவிரும்புகின்றேன். இதனால்தான் எனது அறிக்கை அவர்களைப் புண்படுத்தியது எனக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது.

யாழ்ப்பாண மறைமாவட்டமும், மன்னார் மறைமாவட்டமும் சகோதர மறைமாவட்டங்களாக தொடர்ந்து பயணிக்க வேண்டுமென்பதே எம் எல்லோருடைய விருப்பமாகும். எனவே, மன்னார் மறைமாவட்ட குருக்களே, இறைமக்களே, நான் வெளியிட்ட அறிக்கையில் ஏற்பட்ட தவறுகளுக்காகவும், அதனால் தங்கள் மனங்களைப் புண்படுத்தியதற்காகவும் நான் மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுகின்றேன். நாம் எல்லோரும் இயேசுவின் ஆசீரோடு அன்புப்பிணைப்பிலே வளர்ந்து வருவோமாக. நாம் ஆரம்பிக்கும் ஒப்புரவின் காலம் உங்கள் அனைவருக்கும் இறை ஆசீரை நிறைவாகப் பெற்றுத் தரவேண்டுமென்று உங்களுக்காகப் பிரார்த்திக்கின்றேன்.●

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*

## இந்து, கத்தோலிக்க முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீய சக்திகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம்.

**– நீதியரசர் . க.வி.விக்னேஸ்வரன், செயலாளர் நாயகம், தமிழ் மக்கள் கூட்டணி –**

மன்னார் மாந்தைப் பகுதியில் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தைக் காரணமாக வைத்து அங்கு தமிழர் என்ற அடையாளத்துடன் அன்னியோன்யமாக வாழ்ந்துவரும் இந்துக்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் விஷமத்தனமான செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்பாக இருந்துகொள்ளவேண்டும். இந்து, கத்தோலிக்க பதற்றத்தைத் தூண்டும் வகையில் சில தீய சக்திகள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக நான் அறிகின்றேன். இதன் ஒரு அங்கமாக மன்னாரில் உள்ள கத்தோலிக்க குருமார்கள் மற்றும் மக்களை அச்சுறுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக அறிந்து நான் மிகவும் கவலை கொண்டுள்ளேன். தமிழ் மக்களின் உரிமைகளுக்கான பல தசாப்தகால போராட்டத்தின் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்து, கத்தோலிக்க வேறுபாடு ஏற்பட்டது கிடையாது. எமது உரிமைகளுக்கான பல்வேறு வடிவங்களிலான போராட்டங்களில் கத்தோலிக்க மக்களும் கத்தோலிக்க மத குருமார்களும் மகத்தான பங்களிப்பை வழங்கியிருக்கின்றார்கள். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் எமது மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகத்துக்கு கொண்டு சென்று நீதி மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் அளப்பரிய சேவையை கத்தோலிக்க மத குருமார்கள் செய்திருப்பது எம் எல்லோருக்கும் தெரியும். குறிப்பாக எனது மதிப்புக்குரிய மன்னார் மாவட்டத்தின் முன்னாள் ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் உயிர் ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் எமது அரசியல் உரிமைகளை வலியுறுத்தியும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குமாக ஆற்றியுள்ள மகத்தான சேவையினை இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகின்றேன்.

அதேபோல, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான பணிகளில் ஈடுபட்டு 12க்கும் அதிகமான அருட்பணியாளர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்திருக்கின்றார்கள், பலர் காணாமல் போயிருக்கின்றார்கள். முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டபோது கத்தோலிக்க அருட்பணியாளர்கள் மக்களின் பாதுகாவலர்களாக செயற்பட்டு தமது உயிர்களை இழந்திருக்கின்றார்கள். அதேபோல, தந்தை செல்வா எந்தவித மத வேறுபாடுகளும் இல்லாமல் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக இறுதிவரை அயராது உழைத்தார். அவரை தமது தலைவனாக ஏற்று தமிழ் மக்கள் பெரும் ஆதரவை வழங்கினார்கள். பின்னர் தம்பி பிரபாகரன் எமது உரிமைகளுக்காக போராடியபோது எந்தவித மத வேறுபாடுகளும் இன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அவர் பின்னே அணிதிரண்டு அளப்பெரும் தியாகங்களைச் செய்தார்கள்.

ஆகவே, எந்த ஒரு காரணத்தையும் முன்னிட்டு தமிழ் மக்கள் மத்தியில் இந்து கத்தோலிக்க அடிப்படையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீய சக்திகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். எவரது தூண்டுதல்களுக்கும் ஆளாகி எந்த ஒரு முரண்பாட்டு நடவடிக்கைகளிலும் தயவு செய்து ஈடுபடாதீர்கள். பொறுத்தார் பூமி ஆள்வார்கள். இது இந்துக்களுக்கும், கத்தோலிக்க மக்களுக்கும் பொருந்தும் என்பதை மறவாதீர்கள்.●

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# தவக்காலம், எளிமையாக, உண்மையாக வாழ்வதற்கு வாய்ப்பு

வெளித்தோற்றத்தில் கவனம் செலுத்துகின்றவர்கள் தங்களைப் பாவிகள் என ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். இந்த தவக்காலத்தில் நோன்பு, செபம், தர்மம் செய்தல் ஆகியவற்றை கடைப்பிடிப்பதன் வழியாக வாழ்வின் எளிமையான தோற்றத்தைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பலியில் கேட்டுக் கொண்டார்.

வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் மார்ச் 08ஆம் திகதி திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கிறிஸ்தவர்கள் வெளிவேடத்தை கலைத்து உண்மையாக வாழவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இத்திருப்பலியின் முதல் வாசகத்தை (எச.58,1-9) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை எதார்த்தமான வாழ்வுக்கும் வெளிவேட வாழ்வுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கி எல்லா வகையான வெளிவேடங்களுக்கு எதிரான தன் கண்டனத்தைத் தெரிவித்தார்.

தவம், தர்மம், செபம் கிறிஸ்தவர்கள் தவச் செயல்களைச் செய்கையில் மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்றும் தேவையில் இருப்போருக்கு உதவும் வகையில் தம்பட்டம் அடிக்காமல் தாராள மனதுடன் ஆற்ற வேண்டும் என்றும் செபிக்கையில் மற்றவரின் பாராட்டைத் தேடாமல் இறைத்தந்தையிடம் உள்ளார்ந்த முறையில் ஒன்றித்துச் செபிக்க வேண்டும் என்றும் திருத்தந்தை கூறினார்.



இயேசுவின் காலத்தில் இத்தகைய வெளிவேட நடத்தை பரிசேயர் மற்றும் சதுசேயர்களிடம் தெளிவாகத் தெரிந்தது என்றும் இந்தக் கழகத்தில் உறுப்பினராக உள்ளேன் அல்லது ஞாயிறு திருப்பலிக்குத் தவறாமல் செல்கின்றேன். போன்ற காரணங்களால் இன்றும்கூட கத்தோலிக்கர் தங்களை நீதிமான்களாகவும் ஏனையோரைவிட சிறந்தவர்கள் எனக் கருதுகின்றனர் என்றும் திருத்தந்தை கூறினார். வெளித்தோற்றத்தைத் தேடுகின்றவர்கள் தங்களைப் பாவிகள் என ஒருபோதும் ஏற்கமாட்டார்கள் என்றுரைத்த திருத்தந்தை ஒவ்வொரு நாள் வாழ்வின் வெளிவேடத் தன்மை குறித்தும் மறையுரையாற்றினார்.

➡ 13

# இறைவன் செய்த நன்மைகளின் நினைவுகளை இழக்கும் ஆபத்து



வாக்களிக்கப்பட்ட நாட்டை மறந்து பாலை நிலத்தில் பல ஆண்டுகள் அலைந்து திரிந்த இஸ்ரயேல் மக்களைப்போல் நாமும் இறைவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளின் நினைவுகளை இழக்கும் ஆபத்தில் இருக்கின்றோம். மார்ச் 7ஆம் திகதி காலை, தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பலியில் வழங்கப்பட்டுள்ள முதல் வாசகத்தில் மோசே மக்களுக்கு முன் வைத்த சவால்களை மையப்படுத்தி தன் மறையுரையை வழங்கினார். வாழ்வா, சாவா? நன்மையா, தீமையா?

வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைவதற்குமுன் இஸ்ரயேல் மக்களின் முன்னிலையில் வாழ்வையும், சாவையும், நன்மையையும், தீமையையும் தான் வைப்பதாகக் கூறும் மோசே அச் சவால்கள் வழியே அம்மக்களை விடுதலை நோக்கி அழைத்துச் சென்றார் என்று திருத்தந்தை தன் மறையுரையில் எடுத்துரைத்தார்.

திசைகாட்டும் கருவி இல்லையெனில். நன்மையையும், வாழ்வையும் நோக்கி திரும்பியுள்ள திசைகாட்டும் கருவி நம் உள்ளத்தில் இல்லையெனில் தவறான வழிகளில் நம் வாழ்வு திரும்புவதோடு அத்தகைய நிலையில் நாம் சமுதாயத்திற்கும் ஆபத்தான முறையில் நடந்துகொள்ளக் கூடும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எச்சரிக்கை விடுத்தார். உயிர்த்த கிறிஸ்துவை சந்திக்கச் செல்லும் பாதை முழுவதும் தவறான திசைகாட்டிகளும் பொய்யான தெய்வங்களும் உள்ளன என்பதை தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்லும் சரியான பாதையைக் காட்ட, தவக்காலம் தகுந்ததொரு தருணம் என்று கூறினார்.

**நினைவில் கொள்ளும் வரம்**

வாக்களிக்கப்பட்ட நாட்டை மறந்து பாலை நிலத்தில் பல ஆண்டுகள் அலைந்து திரிந்த இஸ்ரயேல் மக்களைப்போல் நாமும் இறைவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளின் நினைவுகளை இழக்கும் ஆபத்தில் இருக்கின்றோம் என்று கூறிய திருத்தந்தை தவக்காலத்தின் துவக்கத்தில் இறைவனின் அருளை நினைவிற் கொள்ளும் வரத்திற்காக செபிக்கவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். ●

# அரசியல் என்பது அதிகாரமல்ல, மாறாக, சேவை



உண்மை நிலைகளை புதிய வழிகளில் நோக்கவும், மாற்றங்களை கொணரும் முயற்சியில் உண்மை மதிப்பீடுகளை இழந்துவிடாதிருக்கவும் முயலுங்கள். சமூகத்திலும், அரசியல் நிலைகளிலும் போராடும்போது ஒரு சீடத்துவ சமூகத்தின் அங்கத்தினர் என்ற உணர்வின்றியும் இறைவனின் அன்பை அனுபவிக்காமலும் இருந்தால் நல்ல அரசியல் பதவிகளைப் பெற்றாலும் தனிமையும், சோகமுமே அங்கே தங்கியிருக்கும் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

“அரசியலில் இலத்தீன் அமெரிக்க புதிய தலைமுறைக்கென திருஅவையின் கோட்பாடுகளும், அர்ப்பணமும்” என்ற தலைப்பில் 26 இளையோருக்கு பயிற்சி வழங்கும் வண்ணம் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி முதல் மார்ச் 4ஆம் திகதி வரை வத்திக்கானில் நடத்தப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபெற்றோர் உட்பட ஏறத்தாழ 35 பேரை திருப்பீடத்தில் சந்தித்து உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலத்தீன் அமெரிக்காவின் பொது நலனை மனதிற்கொண்டு இளையோருக்கு வழங்கப்படும் பயிற்சி குறித்து தன் பாராட்டுக்களை வெளியிட்டார்.

உண்மை நிலைகளை புதிய வழிகளில் நோக்கவும், மாற்றங்களை கொணரும் முயற்சியில் உண்மை மதிப்பீடுகளை இழந்துவிடாதிருக்கவும் தன் உரையில் வலியுறுத்திய திருத்தந்தை பேராயரான புனித ஆஸ்கர் அர்னுல்ஃபோ ரொமேரோ அவர்கள் திருஅவை மற்றும் அரசியல் குறித்து எடுத்துரைத்துள்ளவற்றை மேற்கோள் காட்டினார்.

அரசியல் என்பது அதிகாரத்தை நிர்வகிப்பதல்ல, மாறாக சேவைக்கானது என்ற அப் புனிதரின் வார்த்தைகளைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் நற்செய்தியின் மதிப்பீடுகளுடன், திருஅவை மேய்ப்பர்களுடன் இணைந்து பணியாற்றுவது குறித்தும் மகிழ்ச்சியைத் தெரிவித்தார். ●

# ஆண்டவரின் அழைப்புக்குப் பதிலளிப்பதில் துணிவு காட்டுங்கள்



ஒவ்வோர் அழைப்பும் வலைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு கரையில் நிற்பதல்ல மாறாக இயேசு நமக்கென குறித்து வைத்துள்ள பாதையில் பின்செல்வதாகும்.

கடவுளின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைப்பதற்கும் அவர் அமைத்துள்ள பாதையில் பின்செல்வதற்கும் மனத்துணிவும் வீரமும் தேவைப்படுகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறையழைத்தல்களுக்காகச் செபிக்கும் உலக நாள் செய்தியில் தெரிவித்துள்ளார். ‘கடவுளின் வாக்குறுதிகளுக்காக சவால்களையும் எதிர்கொள்வதற்கு துணிவு கொள்ளுங்கள்’ என்ற தலைப்பில், வருகின்ற மே 12ஆம் திகதி சிறப்பிக்கப்படும், 56வது இறையழைத்தல் உலக நாளுக்கென திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள செய்தி மார்ச் 09ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டது.

வாக்குறுதி சவால் ஆகிய இரு சொற்களை மையப்படுத்தி இச்செய்தியை வழங்கியுள்ள திருத்தந்தை, ஆண்டவரின் அழைப்புக்கு காதுகேளாதவர்போல் இருக்காதீர்கள் மாறாக அவர் அழைத்தால் அவர்மீது நம்பிக்கை வைத்து பின்செல்லுங்கள் என்று கூறியுள்ளார். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகிய இரு உடன்பிறப்புக்களைத் தம் சீடர்களாக இயேசு அழைத்தது பற்றிச் சொல்லும் மாற்கு நற்செய்திப் பகுதியை (மாற்.1,16-20) மையப்படுத்தி தன் சிந்தனைகளை வழங்கியுள்ள திருத்தந்தை ஆண்டவரின் அழைப்புக்குப் பதிலளிப்பது என்பது பெரிய சவால்களைச் சந்திப்பதற்கு நம்மையே கையளிப்பதாகும் என்றும் நம் சிறிய படகோடு நம்மைக் கட்டியிருப்பவற்றையும் இறுதியாகத் தெரிவு செய்வதிலிருந்து நம்மைத் தடைசெய்பவற்றையும் பின்னுக்குத் தள்ளுவதற்குத் தயாராக இருப்பதாகும் என்றும் கூறியுள்ளார்.

➡ 13

# தோற்கடிக்கப்பட வேண்டிய பகைவர்கள், பசி மற்றும் நோய்கள்



ஐ.நா.வின் 2030ஆம் ஆண்டில் நீடித்து நிலைத்த வளர்ச்சித்திட்ட இலக்குகளை எட்டுவதற்கு உலக அளவில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளில் இந்திய கத்தோலிக்கக் குழுமங்களும் இணைய வேண்டும் இந்திய கறிற்ராஸ் அமைப்பு இந்தியாவில் தோழமையுணர்வு, உணவுப் பாதுகாப்பு, மருத்துவ உதவி மற்றும் அனைத்துக் குடிமக்களுக்கும் மாண்புநிறை வாழ்வு ஆகியவற்றை உறுதி செய்யும் நடவடிக்கைகளில் இந்த தவக்காலத்தில் ஈடுபட்டுள்ளது இந்திய கறிற்ராஸ் அமைப்பு.

இந்திய கத்தோலிக்க ஆயர்களின் மனிதாபிமான அமைப்பான கறிற்ராஸ் இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் தலத்திரு அவையின் பல்வேறு தலைவர்கள் மற்றும் பொது நிலையினர் அமைப்புக்களை இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தியுள்ளது. ‘சத்துணவு: நம் உரிமை’ என்ற தலைப்பில் 2019ஆம் ஆண்டின் தவக்கால நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இந்திய கறிற்ராஸ் அமைப்பு இந்தியாவில் தோற்கடிக்கப்பட வேண்டிய பகைவர்கள் பசியும் நோய்களுமே என்றுரைத்துள்ளது. மக்கள் ஊட்டச்சத்துணவின்றி துன்புறுவது மனித சமுதாயத்திற்கு வேதனையளிக்கின்ற மற்றும் வெட்கத்துக்குரிய நிலை என்றும் உலகில் ஊட்டச்சத்துணவின்றி துன்புறும் சிறார் மற்றும் பெண்களின் எண்ணிக்கையை அதிகமாகக் கொண்டிருக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது என்றும் கறிற்ராஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் வெளியான புள்ளி விவரங்களின்படி 38.4 விழுக்காட்டுச் சிறார் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நோய்களாலும், 35.8 விழுக்காட்டுச் சிறார் எடைகுறைவாலும் துன்புறுகின்றனர். ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ள 2030ஆம் ஆண்டின் நீடித்து நிலைத்த வளர்ச்சித்திட்ட இலக்குகளை எட்டுவதன் ஒரு பகுதியாக உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலமையை மேம்படுத்துவதற்கு உலக அளவில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளில் இந்தியக் கத்தோலிக்கக் குழுமங்களும் இணைய வேண்டுமென இந்திய கறிற்ராஸ் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. ●

# நோயைக் குணமாக்குவது, மனிதரைக் குணமாக்குவதாகும்


நோயைக் குணப்படுத்துவதற்காக மனிதரின் உயிரியல் கூறுகள் பற்றி அறிவியல் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மருத்துவ சிகிச்சை என்பது நோயின் துன்பமான நேரங்களில் நோயாளரோடு இருப்பதாகும். நோய்களால் துன்புறும் மக்களின் வேதனைகளைக் குறைக்கும் நோக்கத்தில் இடம்பெற்றுவரும் ஆராய்ச்சிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை திருஅவை ஊக்கப்படுத்துகின்றது. மற்றும் பாராட்டுகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஓர் இத்தாலிய தேசிய அமைப்பிடம் கூறினார். இரத்த புற்றுநோய் தொடர்புடைய நோய்களால் (leukaemia-Lymphoma, Myeloma) பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு உதவும் இத்தாலிய தேசிய அமைப்பு உருவாக்கப்பட்டதன் ஐம்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மார்ச் 02ஆம் திகதி அன்று புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கத்தில் அந்த அமைப்பின் ஏறத்தாழ ஆறாயிரம் உறுப்பினர்களைச் சந்தித்து உரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

AIL எனப்படும் இந்த தன்னார்வ அமைப்பினர் கடந்த ஐம்பது ஆண்டுகளாக புற்று நோயாளர்களுக்கு மிக நெருக்கமாக இருந்து மனத்தாராளத்துடன் ஆற்றிவரும் உதவிகளையும், இந்நோயாளர்களுக்கு திருஅவைப் பணியாளர்கள் ஆற்றிவரும் ஆன்மீக மற்றும் உடன்பிறந்த உணர்வு சாட்சியங்களையும் பாராட்டி நன்றி தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.




மனிதரைக் குணமாக்குவது, மருத்துவர்கள் உயிரியல் ஆய்வாளர்கள், பரிசோதனை நிலையங்களில் பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் பணிகள் பற்றி எடுத்துரைத்த திருத்தந்தை, ஆன்மீக அளவிலும் வெறுமையை உணரும் நோயாளர்களுக்கு உடல் அளவில் மட்டுமல்லாமல் உடல் மற்றும் ஆன்மீக முறைகளிலும் உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நோயைக் குணமாக்குவது என்பது உடல் உறுப்பையோ அல்லது திசுக்களையோ குணமாக்குவது அல்ல மாறாக மனிதரைக் குணமாக்குவதாகும் எனவும் திருத்தந்தை கூறினார்.

➡ 14



# தவக்காலச் சிறப்பிதழ்



## தவக்காலத்தில் நம் வாழ்வு

ஆண்டுதோறும் தவக் காலத்தில் நாம் பலவித தவமுயற்சிகளைக் கடைப்பிடித்து வருகின்றோம். வழக்கமான தவ முயற்சிகளுடன் பின்வரும் செயல்களைக் கடைப்பிடித்து கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வோம். தவக்காலத்தில் மட்டுமல்லாது. ஒவ்வொரு நாளும் இவற்றைச் செய்தால் நாம் கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்.



### தனி வாழ்வில்

1. தினமும் அதிகாலையில் ஒருமணி நேரமாவது செபித்தல். (மாற் 1:35)
2. நாளுக்கொரு அதிகாரம் மறைநூலிலிருந்து வாசித்தல். (லூக் 2:51)
3. நம்மைவிடப் பிறரை உயர்வாக மதித்தல். (1பேது 2:17, பிலி 2:3)
4. பகைவர்க்கும் அன்பு காட்டுதல். (லூக் 6:27)
5. சபிப்போருக்கும் ஆசி கூறுதல். (லூக் 6:28)
6. தூற்றுவோருக்காகச் செபித்தல். (லூக் 6:29)
7. வெறுப்போருக்கு நன்மை செய்தல். (லூக் 6:29)
8. கீழ்ப்படிதலுடன் வாழ்தல். (பில் 2:8)
9. எரிச்சல், கோபம், தீயமனம், பகை தவிர்த்தல். (கொலோ 3:8)
10. தீங்கு செய்தோரை மனமாற மன்னித்தல். (லூக் 23:34)
11. அன்பை நமது வாழ்வின் அடிப்படையாக அமைத்தல். (எபே 3:17)
12. இருப்பதை இல்லாதவரோடு பகிர்தல். (லூக்3:11, உரோ 12:13)
13. தூய மனம், தூய வாழ்வு கொண்டிருத்தல். (மத் 5:8)
14. அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகிய ஆவியின் கனிகளைக் கொண்டிருத்தல். (கலா 5:22)
15. பிறருக்கு முன்மாதிரியாக வாழ்தல் (மத் 5:13-14)
16. தற்பெருமை நீக்குதல். (1கொரி 1:31)
17. அவமதிக்கப்படும் போது கனிவு காட்டுதல். (1கொரி 4:13)
18. கைமாறு கருதாது நன்மை செய்தல். (லூக் 6:33-34)
19. நாவடக்கமுடன் வாழ்தல். (யாக் 3:1-13)
20. பொய் பேசாதிருத்தல். (யாக் 3:14)
21. கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல். (யோவான் 15:10)

### குடும்ப வாழ்வில்

1. கணவன், மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்ப உறுப்பினரோடு நல்லுறவு கொண்டிருத்தல்.
2. குற்றங்குறைகளை மன்னித்தல், அவற்றை மீண்டும் சொல்லி வேதனைப்படுத்தாமல் இருத்தல்.
3. வீட்டுவேலைகளில் பங்கேற்றல்.
4. வீண்செலவு, ஆடம்பரங்களைத் தவிர்த்தல்.
5. தினமும் ஒன்று கூடிக் குறிப்பிட்ட நேரத்தில் செபித்தல், மறைநூலை வாசித்துத் தியானித்தல்.
6. பிள்ளைகளின் படிப்பு, ஒழுக்கம், ஆன்மீக வாழ்வில் அதிக கவனஞ்செலுத்துதல்.
7. மனைவியை அடிக்காமல், அடக்கி ஆளாமல் உரிய மதிப்புக் கொடுத்தல். (1பேது 3:7)
8. கணவருக்குப் பணிந்து வாழுதல், மதிப்பளித்தல். (1பேது 3:1)
9. பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாமலிருத்தல். (எபே 6:4)
10. பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருத்தல். (எபே 6:1)
11. முன்மாதிரியான வாழ்வில் நிலைத்திருத்தல்.
12. பிறரது முன்னேற்றத்தைத் தடைசெய்யாமல் இருத்தல்.

### சமுதாய வாழ்வில்

1. இயற்கை வளங்களைப் பேணுதல். (தொநூ 2:15)
2. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல்.
3. பொதுச் சொத்துக்களைப் பேணுதல்.
4. நாட்டுச் சட்டங்களை மதித்தல். (மத் 17:24-27)
5. வன்முறைச் செயல்களில் பங்கேற்காமலும், துணைபோகாமலும் இருத்தல். (1பேது 4:15)
6. வட்டி வாங்காமல் இருத்தல். (திபா 15:5)
7. வரதட்சினை வாங்காமலும், கேளாமலும் இருத்தல். (உரோ 15:7)
8. கையூட்டு வாங்காதிருத்தல். (லூக் 3:13, திபா 15:5)
9. கிடைக்கும் சம்பளம் போதுமென்றிருத்தல். (லூக் 3:14)
10. சாதி, சமய, மொழி, இனவெறிகளைக் களைதல். (யோவா 4:1)
11. ஏழை எளியவரில் இயேசுவைக் காணுதல். (மத் 25:31-46, யாக் 1:27)
12. பழிக்குப்பழி வாங்காமலும், தீமை செய்யாமலும் இருத்தல். (1பேது 3:4)
13. உரிய கூலி கொடுத்தல். (யாக் 5:4)
14. கடமையுணர்வுடனும், சுறுசுறுப்புடனும் வேலை செய்தல். (எபே 6:6-8) ●

## சுய ஆய்வு தவக்காலம்!





தவக்காலம் நாற்பது நாளும் இயேசுவின் பாலைவனப் பரிசோதனைகளை ஆழ்ந்து உணர்ந்து அவ்வொளியில் விடுதலை வாழ்வுக்கு அழைக்கும் அற்புதக்காலம்! இயேசு எதிர்கொண்ட மூன்று சோதனைகளும் நமக்கு மூன்று எதார்த்தங்களை எடுத்துக் காட்டுகின்றன. மனிதர் முப்பெரும் கட்டுகளால் விலங்கிடப்பட்டு வாழ்வில் அடிமைப்பட்ட நிலையில் உள்ளனர். மூன்று கட்டுக்கள் அகந்தை (Pride) money (பெருமை), ஆணவம் (Prestige) muscle (செருக்கு), அதிகாரம் (Power) manipulation (பலம்) இம்மூன்று தீய சக்திகளும் மனித குலத்தை மடியச் செய்துள்ளன என்பதை உணர்த்த இயேசு மூன்று சோதனைகளையும் சந்தித்து நமக்குத் தம் சாதனையால் விடுதலைக்கு வழிகாட்டுகின்றார்!

### முதல் சோதனை

“கற்களை அப்பமாகும்படி கட்டளையிடும்.” (மத்.4:3) உம்மால் எதுவும் ஆகும் என்பதை வெளிப்படுத்தும்! மனிதரின் ஆணவத்தைத் தூண்டும் அலகையின் தந்திரம். அப்பத்தினால் மட்டுமல்ல வாழ்வு, பொருள் மட்டும் போதாது அருள்வாக்கே அழியா வாழ்வளிக்கும் இறைபராமரிப்பு தேவை எனும் உண்மையை வெளிப்படுத்தினார். (மத்.4:4)

### இரண்டாம் சோதனை

“இறைமகன் என்றால் கீழே குதியும். தூதர்கள் உம்மைத் தாங்கிக்கொள்வர்” உம் மாட்சிமையை வெளிப்படுத்தும் என்று அலகை தூண்டிவிடுகின்றது. மனிதரின் தற்பெருமையைத் தட்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் அலகையின் மாயவலை.

இந்தச் சூழ்ச்சியை முறியடிக்க இயேசு விடுக்கும் சவால்! உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம். (மத்.4:7) தற்பெருமைக்காகக் கடவுளைப் பயன்படுத்த வேண்டாம். சுயலாபத்திற்கு மதத்தைக் கருவியாக்க வேண்டாம் என்று இடித்துரைத்து இறைப்பற்று சுயமற்றதாய் விளங்கச் செய்தார்.

### மூன்றாம் சோதனை:

“இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்” (மத்.49) ஆனால் அதிகாரம் மனிதரைக் கவர்ந்திழுக்கும் காந்தம் போன்றது. ஆட்சி செய்யும் அதிகாரம் பிறரையும், தன்னையும் அடிமைப்படுத்தும் சிறை என்னும் உண்மையை உணர்த்த இயேசு உன் கடவுளாகிய ஆண்டவர் ஒருவருக்கே பணி செய். ஏனெனில் அனைத்தும் அவரது எனும் அப்பட்டமான உண்மையை மனிதருக்கு வெளிப்படுத்தினார்.

அதிகாரம் அடிமைப்படுத்த அன்று மாறாகப் பணிபுரிந்து பிறரன்பில் நிறைவு காணவே எனும் தம் வாழ்வின் இலட்சியத்தை இயம்பி உண்மை மகிழ்வின் வழியை உணர்த்தியுள்ளார்.

இம்மூன்று சோதனைகளை எதிர்கொண்டு வெற்றி காணும்போது பூரண விடுதலை கிடைக்கின்றது என்பதை இயேசுவின் வாழ்வு பறைசாற்றுகின்றது. அகந்தை என்பதை இயேசுவின் வாழ்வு பறைசாற்றுகின்றது. அகந்தை இருள் நீங்கும்போது பிறர் பணி கனிகின்றது. இவ்விடுதலை அனுபவம் பெறுவதற்கே தவக்காலம் நமக்கு சவால் விடுக்கின்றது. நம் பதில்? இயேசுவின் சுய பரிசை நமக்கு நம்பிக்கை அளிக்கும் நட்சத்திரமாய் ஒளிர்கின்றது!. ●

## உயிர் கடவுளின் கொடை

**– சிறுகதை ஆக்கம் : ச. மாட்டீன் டயஸ் –**

அது ஒரு பெரிய நகரம். நம் அயல் நாடான இந்தியாவிலேதான் அங்கே ஒரு பெரிய காரியாலயம். அங்கிருந்த தலைமை அதிகாரி ஒரு கத்தோலிக்கர். மிகவும் கண்டிப்பானவர் சிறந்த நிர்வாகி எல்லோரையும் அவர் நேசித்தார் எல்லோரும் அவரை நேசித்தார்கள். அவர் தனது ஓய்வு வேளைகளில் குடும்பத்தரிசிப்புக்கள் செய்வார். அவர்களோடு சேர்ந்து செபிப்பார். நோயுற்றோருக்காக, வறுமையில் வாடுவோருக்காக, சிறுவர்களுக்காக, பரீட்சைக்கு முன், திருமண வீட்டில், இழவு வீட்டில், புதுமனை புகும்போது, வீட்டுத்தலைக்கல் வைக்கும்போது, பிள்ளைகள் அயல் நாட்டிற்குச் செல்லும்போது, அயல்மாநிலங்களுக்குச் செல்லும் போது, வீட்டாரின் அழைப்பின்போது சென்று பக்தியோடு செபிப்பார். அதனால் இவரை எல்லோரும் குருத்துவ ஆடை அணியாத குரு நிலையில் கண்டார்கள். பாரபட்சம் இன்றி எல்லா வீட்டுக்கும் போய்ச் செபிப்பார்.



இவருக்குக் கீழே இரண்டாம் நிலையில் ஒரு அதிகாரி இருந்தார். இவரை நாம் யோண் என்று அழைப்போம் இவரும் ஒரு நல்ல கத்தோலிக்கர். இவரும் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் வீட்டில் இருந்தார்கள். மிகச் சிரமப்பட்டு இவர்கள் ஒரு வீடு கட்டினார்கள். சிறிய ஒரு மாடி வீடு. மாடி வீடு கட்டியது ஆடம்பரத்துக்காக அல்ல. இருந்த அந்தச் சின்ன இடத்தில் அப்படித்தான் கட்டலாம். வீடு கட்டியாயிற்று. முறைப்படி குடிபுக வேண்டும். பால் காய்ச்ச வேண்டும். யோண் திணைக்களத் தலைவரை அழைத்தார். அவரும் சம்மதித்தார்.

நாளும் குறித்தாயிற்று அடுத்த சனிக்கிழமை மாலை நாலுமணிக்கு குறித்த நேரத்துக்குத் தலைவர் வந்தார். யோண் மனைவியை அழைத்தார் மகனை அழைத்தார். இருவரும் வந்து விட்டார்கள் செபத்தை ஆரம்பிக்கத் தயாரானபோது “மகளையும் அழையுங்கள்” என்றார் தலைவர். அவள் வரமாட்டாள்” யோண் தலையைக் குனிந்து கொண்டார். தலைவருக்கு ஆர்வம் குன்றியது இச் செபத்துக்காக நான் பத்துக் கிலோமீற்றர் தொலைவில் இருந்து வருகின்றேன், மகளால் வரமுடியாதா? சிறிது தயக்கத்தின் பின் செபவழிபாடு நடந்தது. நால்வரும் தேனீர் அருந்தினார்கள். தலைவர் புறப்படத் தயாரானார். யோண் அவரிடம் வேண்டுகோள் ஒன்றை வைத்தார். எங்கள் மகளையும் பார்த்துவிட்டுப் போங்கள். தலைவர் ஒரு கணம் தடுமாறினார். என்னை வந்து பார்க்காத அந்தப் பிள்ளையை நான் போய்ப் பார்க்க வேண்டுமா? ஐயா! தயவு செய்து வாருங்கள். தலைவர் மேல் மாடிக்குச் சென்றார். அங்கே ஒரு கட்டில். அதில் படுக்கைப் போர்வைக்கு வெளியே ஒரு சின்னஞ் சிறிய தலை மட்டும் தெரிந்தது. யோண் பிள்ளையை மூடியிருந்த போர்வையை நீக்கினார். இரண்டு முழம் நீளமான ஒரு சின்னஞ்சிறு உருவம் கண்களின் அசைவினால் தான் உயிரோடு இருக்கின்றேன் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தாள். தலைவரின் நெஞ்சிலே யாரோ அடிப்பது போலிருந்தது. யோண் சொன்னார் ஐயா! இந்தப் பிள்ளையின் வயது இருபது. தலைவர் கலங்கினார். தன் சிந்தனை ஓட்டங்களில் இருந்த தவறை உணர்ந்தார். உச்சத்திலிருந்து இறங்கி வந்தார். கண்களில் நீர் நிறைந்திருந்தது. அவர் சொன்னார் நண்பா இது ஒரு சாபமா? அல்லது தலைவர் முடிப்பதற்குள் யோண் சொன்னார் “ஐயா இது ஒரு சாபமில்லை இது ஒரு கொடை, இது ஒரு துன்பமில்லை இது ஒரு வரம். ஐயா கடவுள் இந்தப் பிள்ளை உருவாகியபின் யாரிடம் கொடுத்தால் இந்தப்பிள்ளை நன்றாகப் பராமரிக்கப்படும் என இந்த உலகிலுள்ள எல்லாக் குடும்பங்களையும் கூர்ந்து தேடிப்பார்த்து எங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார். நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லவா? அதற்காகக் கடவுளுக்கு நன்றி சொல்கின்றோம். யோண் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கின்றார் என்பது அப்போது தலைவருக்குத் தெரிந்தது. ●

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.



# தவக்காலச் சிறப்பிதழ்



## மனமாற்றம் அடைவோம் இன்றே!

'மனந்திருந்துங்கள்' வழியை மாற்றித் தவம் செய்யுங்கள். தருணம் வந்தது கடவுளின் அரசு காத்திருக்கின்றது' (காண்: மாற்கு 1:15). என்ற நற்செய்தி முழக்கத்தோடு தவக்காலம் தொடங்கிவிட்டது. அருட்காலம் அரும்பிவிட்டது. மாந்தர் அனைவரின் பாவங்களுக்காகவும், இயேசு தன்னையே சிலுவைச் சாவுக்கு கையளித்து, தனது உயிர்ப்பின் வழியாக நம் அனைவர்க்கும் புதிய விடியலான மீட்புக் கொண்டு வந்த நிகழ்வினைக் கொண்டாட, நினைவுகூர நமது பாவங்களுக்காக மனம் வருந்தி மனமாற்றம் அடைய ஓர் அருமையான காலம் ஆரம்பமாகிவிட்டது.

இறைவாக்கினர் யோவேலின் வழியாக, இறைவன் நம்மையும் கண்டிக்கின்றார். "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள். (யோவே 2:13) என்று அழைப்பும் விடுக்கின்றார்.




### மனமாற்றம் என்றால் என்ன?

நமது பாவ வாழ்விலிருந்தும், குற்ற வாழ்விலிருந்தும் மனம் மாறி, ஒழுக்க நெறிக்கும், நன்னெறிக்கும் வருவதுதான் மனமாற்றம் என்கின்றோம். ஒருவனின் பாவம் தனிப்பட்ட முறையில் அவனையும், அவன் வாழும் சமூகத்தையும் பாதிக்கின்றது. இதனால், மனதிற்குள் அமைதியில்லாமல், தனது ஆளுமை வளர்ச்சியிலே பிளவை உணர்கின்றான். இறைச் சாயலான சக மனிதர்களோடு அவன் உறவை முறித்துக் கொள்ளும்போது இறைவனோடு கொண்டுள்ள உறவையும் முறித்துக்கொள்கின்றான். இத்தகைய உறவு முறிவின் வெளிப்பாடுகளாக வேதனைகளும், குழப்பங்களும், மனப்போராட்டங்களும், அமைதியற்ற ஆரோக்கியமற்ற சமுதாயச் சூழல்களும் தோன்றி அவனை அலைக்கழிக்கின்றன. இத்தகைய இழிநிலையை உணர்ந்து ஏற்று மனம்மாறி இறைச்சாயலான ஒவ்வொரு மனிதனையும் மதித்து, மனித மாண்பு காத்து, அன்பு, அமைதி, நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் போற்றி வாழ நாம் எடுக்கும் முயற்சியே மனமாற்றம்.

### இஸ்ரயேலரின் வாழ்வில் 'மனமாற்றம்'

இஸ்ரயேலரின் வரலாற்றுத் துவக்கத்தில், தனிப்பட்ட பாவ உணர்வினைவிட குழு பாவ உணர்வே மேலோங்கியிருந்தது எனலாம். எனவே, அவர்களுக்கு அன்னியர்களிடமிருந்து தீங்கு வந்தபோதெல்லாம், தாங்கள் இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டதை உணர்ந்து, மக்கள் சமூகமாக இணைந்து உண்ணாநோன்பிருந்து, சாம்பல் பூசி, கோணி உடுத்தி, மனம் வருந்தி, தங்கள் பாவத்திற்காக அழுது புலம்பினர்.

பல சமயங்களில் இதை ஒரு சடங்கு ஆச்சாரமாகவும் ஆக்கினர். இத்தகைய சடங்கு ஆச்சாரங்களைத்தான் கி.மு. எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்பு வந்த இறைவாக்கினர்கள் சுட்டிக்காட்டி, உண்மையான மனமாற்றத்தை நோக்கிப் பயணமாக அழைப்பு விடுத்தார்கள்.

மத ஆச்சாரங்களைவிட்டு உண்மையான மனமாற்றம் அடையாததை ஆமோஸ் கண்டிக்கின்றார். (ஆமோ 4:6, 8,9-11) இஸ்ரயேலரின் போலி மனமாற்றத்தை 'காலை நேர மேகம்' எனக் கண்டிக்கின்றார். (ஒசே 6:4) வெற்றுச் சடங்கு முறைகளைக் கைவிட்டு, தீமை செய்தலை விட்டொழித்து, நீதியை நாடித்தேட எசாயா அறிவுறுத்துகின்றார். (எசா 1:10-17). நேர்மை, இரக்கம், பணிவு, தாழ்ச்சி இவையே இறைவனுக்கு விருப்பமான மனமாற்ற வாழ்வு என்பதைத் தெளிவாக்குகின்றார். (மீக் 6:6-8)

உன் குற்றத்தை நீ ஏற்றுக்கொண்டால் போதும் (எரே 3:13) என்று இறைவன் விரும்புகின்றார். ஒவ்வொருவரும் தனது தனிப்பட்டப் பாவத்திற்குப் பொறுப்பேற்கவும் (எசே 3:16-21) இறைவன் அறிவுறுத்துகின்றார். இவ்வாறு குற்றத்தை ஏற்று மனம் வருந்தி, தங்கள் முழு உள்ளத்தோடு தம்மிடம் திரும்பி வர வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம் (எரே 24:7, எசே 36:26-31). சுருங்கக் கூறின் இறைவாக்கினர்கள் காட்டும் மனமாற்றம் என்பது வெறுமையான சில சடங்கு ஆச்சார முறைகளை அல்ல. மாறாக ஒவ்வொருவரும் தனது தீய செயலுக்காக மனம் வருந்தி (எரே 3:16-21) திருந்தி (எரே 24:7) இறைவனிடம் வரவேண்டும். இதன் வெளிப்பாடாக நீதிக்காக, ஒடுக்கப்பட்டோருக்கு உழைக்க வேண்டும் (எசா 1:10-17) என்பதே.

### இயேசு காட்டிய "மனமாற்றம்"

திருமுழுக்கு யோவானின் போதனையும், செயற்பாடும், அன்றைய சமூகத்தை, மனமாற்றத்தை நோக்கி அழைப்பதாகவே இருந்தது. தங்களது சிந்தனையையும், வாழ்வையும் முழுவதுமாய் மாற்றிக்கொள்ள அழைப்பு விடுத்தார். (மத்தேயு 3:9-10, மாற்கு 1:4, லூக்கா 3:3).

இயேசுவின் தொடக்கப் போதனையே, "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1:14-15) என்பதாகவே உள்ளது. ஒவ்வொருவரும் மனம்மாற அவர் விரும்பினார். மனம்மாறாத இழிநிலையைக் கண்டித்தார். (மத்தேயு 11:20-24, 12:40-42). மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள் (லூக்கா 13:5) என்றும் எச்சரித்தார். இயேசு காட்ட விரும்பிய மனமாற்றம் ஏதோ மதச்சடங்கு ஆச்சார முறையைச் சார்ந்ததல்ல. மாறாக வாழ்வையும், சிந்தனையையும் மாற்றி அமைத்து முழுமையான மானுட மாண்பு போற்றி வாழ்வதற்கான ஓர் உன்னத அழைப்பு ஆகும். (காண்க மத் 5-7 அதிகாரங்கள்). இத்தகைய உயரிய மனமாற்றம் அடைய மனமில்லாத பரிசேயர், சதுசேயர் கூட்டம் மக்களை அடக்கிப் பிழிந்த இழிநிலை கண்டு கொதித்து எழுகின்றார். (மத் 23ஆம் அதிகாரம்). இத்தகைய போதனைதான் அவரைச் சிலுவைச் சாவுக்கும் அதன் வழியாக மகிமைக்கும் மீட்புக்கும் அழைத்துச் சென்றது எனலாம்.

### இன்றைய மனமாற்றம்

நாமும் நமது பாவ வாழ்வைவிட்டு, இறைவன் விரும்பும் நன்னெறிக்குத் திரும்பிவர இதோ தவக்காலம் தொடங்கிவிட்டது. நாம் எத்தகைய மனமாற்றத்திற்கு நமது இதயத்தைத் தயார்படுத்தி வைத்திருக்கின்றோம். நாற்பது நாளும் நோன்பிருந்துவிட்டு கடுகளவும் வாழ்வை மாற்றிக் கொள்ளாத சடங்கு முறைகளால் தவக்காலத்தைச் சந்திக்கப் போகின்றோமா? பிறர் மனமாற்றமடைய வேண்டும் என்பதை உரக்க அறிவித்துவிட்டு, நமது வாழ்க்கையை அணுவளவும் மாற்றிக் கொள்ளாமல் புரட்சி பேசப்போகின்றோமா? சமூக அவலங்களைக் கண்டும் காணாமல், அமைதியாக இருந்து புனித வாரத்தைக் கொண்டாடப் போகின்றோமா? சமூக அமைப்பு முறைகளைக் குற்றம் சாட்டிவிட்டு, நமது குற்றங் குறைகளை நியாயப்படுத்தி அவற்றையே வணங்கப் போகின்றோமா?

இயேசு மேற்கொண்ட நாற்பது நாள் நோன்பு அவரை ஒரு புதிய மனிதராக சமூகத்திற்குத் தனது வாழ்வால் சாட்சியாக விளங்கக்கூடிய மனிதராக வார்த்தெடுத்தது, வளர்த்தெடுத்தது. நம்மிலும் உண்மையான மனமாற்றம் ஏற்படின், எத்தகைய தடுமாற்றங்களாலும், சமூக மாற்றத்தை தடுத்து நிறுத்திட முடியாது. மனமாற்றம் அடைவோம் இன்றே! இயேசுவில் ஏற்றம் பெறுவோம் நன்றோ!! ●

## அருளின் காலமாம் தவக்காலம்


– அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான். –

ஆண்டொன்று கழிந்தால் ஆரம்பத்தில் வருவது அருளின் காலமாம் தவக்காலம். இந்த அருளின் காலத்திற்குள் கால்பதிக்கப்போகும் நமக்கு இக்காலம் விடுக்கும் அழைப்பு மிக அழகானது! அற்புதமானது! ஆனந்தமானது! ஏனென்றால், இக்காலம் எமக்கெல்லாம் ஒரு பசுமையான காலம். எம் வாழ்வை சற்று திரும்பிப்பார்த்து பசுமைப்படுத்த, செம்மைப்படுத்த, வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தி, வழமையையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்த எமக்கு பல வழிகளை சொல்லித்தரும் காலமே தவக்காலமாகும்.

வருடத்தில் வரும் நாட்களில் நாற்பது நாள் மட்டுமே எம் வாழ்வை வளப்படுத்த அருளப்பட்ட நாட்களாகும். ஆண்டவர் இந்த நாற்பது நாளை முக்கியமான பல நிகழ்வுகளுக்கு பயன்படுத்தியுள்ளார். பழைய ஏற்பாட்டில் இந்த நாற்பது நாள் பல இடங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது. இக்காலம் பல சவால்கள் நிறைந்த காலமாகவும், பல சோதனைக் காலமாகவும் காணப்படுகின்றது. எமது ஆன்மீக வாழ்வை செம்மைப்படுத்தவும், சீராக்கவும், உருவாக்கவும் ஒரு பயிற்சி அளிக்கும் காலமாக இத்தவக்காலம் அமைகின்றது என்பது கண்கூடு.

இந்த நாற்பதுநாள் அனுபவத்தின் பின் ஏற்பட்ட பசுமையான, வழமையான செயற்பாடுகளை விவிலியத்தின் கூடாக நாம் பார்ப்போமேயானால் நாற்பது இரவும், நாற்பது பகலும் மழைபெய்து ஏற்பட்ட வெள்ளத்தின்பின் புதிய வாழ்வும், புதிய படைப்பும் உருவாகின்றது. இறைவனோடு மோசே நாற்பது பகலும், நாற்பது இரவும் நோன்பிருந்து உரையாடியபின் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. நாற்பது ஆண்டுகள் இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்த பின் வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைகின்றார்கள். நாற்பது நாட்கள் பாலைவன அனுபவத்தின் பின்னர் தனது பணிவாழ்வை இயேசு ஆரம்பிக்கின்றார்.

இயேசு உயிர்த்த நாற்பதாம் நாள் விண்ணகம் சென்றபின் தூய ஆவியின் அருட்பொழிவோடு திருச்சபை உதயமாகின்றது. நாற்பது நாட்கள் அடங்கிய தவக்காலத்தின் முடிவில் நாம் உயிர்ப்பு விழாவை பெருவிழாவாகக் கொண்டாடுகின்றோம். இப்படியான பசுமை நிறைந்த நிகழ்வுகள் இந்த நாற்பதுநாள் அனுபவத்தின்பின் ஏற்பட்டவை ஆகும். அதேபோன்று வருடாவருடம் நாம் எத்தனை நாற்பது நாட்களைக் கடந்து சென்றிருப்போம். எம்மில் ஏதாவது பசுமையான, வளமையான மாற்றங்கள் ஏற்பட்டதா? வெளிப்பட்டதா? தென்பட்டதா? என்று சிந்திக்கும் நேரமிது.



ஒருவேளை ஏற்பட்டிருக்கலாம். ஓரிரண்டு நாட்களோடு அது மறைந்து போயிருக்கலாம். ஏன் இந்த மாற்றம் என்று எம்மை நாமே கேட்டுப்பார்ப்போம். நாம் செய்த பாவங்கள், அநீதியான செயற்பாடுகளுக்காக உண்மையாகவே மனம்வருந்தி அவற்றிலிருந்து விடுதலையும், பாவமன்னிப்பும் பெற இந்த நாற்பது நாட்களில் நாம் உண்ணாநோன்பிருக்கின்றோம். சிலர் நாற்பதுநாள் முழுவதுமே ஒருசந்தியும், மாமிசத்தவிர்ப்பிலும் ஈடுபடுவார்கள். ஆனால் அவர்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமுமே தென்படாது. நாள் முழுவதுமே நோன்பிருந்து நம் வாழ்வு மாற்றம் பெறவில்லையெனில் நாம் செய்வது அனைத்துமே வீணிலும் வீண்.

"ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா நான் உண்ணாநோன்பின் நாளாகத் தெரிந்து கொள்வது? ஒருவன் நானலைப் போல தன் தலையைத் தாழ்த்தி சாக்கு உடையையும், சாம்பலையும், அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நோன்பு என்றும், ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கின்றீர்கள்? "எசா. 58:5 என்று நோன்பு பற்றி உரைக்கும் எசாயா எது உண்மையான நோன்பு என்று விரித்துரைக்கின்றார்.

"கொடுமை தழைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவுதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பது அன்றோ நான் தேர்ந்கொள்ளும் நோன்பு. பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்துகொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடை அற்றோரை காணும்போதும் அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு." எசா. 58:6-7 இதைத்தான் ஆண்டவர் விரும்புகின்றார். பசி, பட்டினி கிடந்து உடலை வருத்தி விட்டு வாழ்க்கை முறையில் ஏழைகளையும், நலிந்தோரையும் நசுக்கிவிட்டு நான் என்ற மமதையும் வாழ்வதால் எந்தப் பலனையும் நாம் ஆண்டவரிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது. "நேர்மையும், உண்மையும் இல்லாத நோன்பு பயனற்றது" என்பது தெளிவு. மேலும் நம் வாழ்வில் ஆண்டவர் இயேசு பட்ட பாடுகளையும், மரணத்தையும் தியானித்து எமக்காக அவர்பட்ட காயங்களையும், இரத்த வியர்வைகளையும் பார்த்து எம் வாழ்வில் ஓர் மாற்றத்தை உருவாக்க எத்தணிக்க வேண்டும். தவக்காலம் என்பது தபம் செய்யும் காலம். எம் பாவங்களுக்கு மன்னிப்புக் கிடைக்குமா? என்று தவமிருக்கும் காலம். நாம் செய்த அநீதி, அக்கிரமங்கள், பொய், களவு, வஞ்சகம், சூது, வெளிவேடம் போன்ற தீய செயல்களுக்கு தண்டனை கிடைக்குமா? மன்னிப்புக் கிடைக்குமா? என்று தவம் கிடந்து எம்மை நாமே திரும்பிப்பார்க்கும் காலம். எம்மை ஒறுத்து, ஒடுக்கி ஆண்டவரின் அழப்பரிய அன்பிற்கு ஏங்கித்தவிக்கும் காலமிது. இக்காலத்தில் நாம் செய்யும் பரித்தியாகங்கள், செபதவங்கள், ஒறுத்தல் முயற்சிகள் போன்ற காரியங்களினூடாக ஆண்டவரின் அருளையும், இரக்கத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். ஆண்டவரின் அருளை ஆனந்தமாய் பெற்றுக்கொள்ள ஆக மொத்தம் அவர்தந்த நாட்களோ நாற்பது. அந்த நாற்பது நாட்களில் எப்படி நாம் அவரில் இரக்கத்தைப் பெறப்போகின்றோம். என்பது எம் ஒவ்வொருவரினதும் கைகளில்தான் உள்ளது என்பது நிஜம்.

ஆகவே அருளின் காலத்தில் கால்பதித்துள்ள நாம் இருளில் வாழ்ந்த நாட்களை எண்ணிப்பார்த்து ஒளியின் பாதையில் நடந்திட எம் மனங்களைத் தயார்படுத்துவோம். மன்னிப்பு, அன்பு, தியாகம், விட்டுக்கொடுப்பு, இரக்கம், தூய்மையான எண்ணங்கள், சிந்தனைகள் போன்ற நற்செயல்களில் எம்மை ஈடுபடுத்தி ஆண்டவர் இயேசு எமக்காகப்பட்ட கசையடிகளையும், முள்முடிகளையும், சிலுவை மரணத்தையும், இரத்த வியர்வைகளையும் எண்ணிப்பார்த்து அயலவர் படும்வேதனை, கஷ்டங்கள், துன்பங்களில் எம்பிரான் இயேசுவைக் கண்டுணர்ந்து அவர்களுக்காக எம்மை அர்ப்பணித்து வாழ்வோம். எமக்கு வாழ்வளித்த வானகத்தந்தையை வாழ்த்திப் போற்றுவோம். ●

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# கேளுங்கள் கொடுக்கப்படும் கேட்டேன் கொடுக்கவில்லையே! ஏன்?

இறைவனால் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் இவ்வுலகில் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பதே முக்கியம். கடவுள் மனிதனை ஏன் படைத்தார்? கடவுளை அன்பு செய்து நேசிக்கவும் அதனால் விண்ணகம் அடையவுமே என்பதுதான் மறைக்கல்வி வகுப்பில் கற்பிக்கப்பட்டது.

இன்றைய மனிதன் இறைவனை நேசிக்க மறந்து, இந்த உலக மாயையில் மயங்கி வாழ்ந்துகொண்டிருக்கின்றான். மனிதனுடைய ஆசைக்கு அளவே இல்லை. எவ்வளவு இருந்தாலும் இன்னும் அவன் தேவைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. தனது தேவைகளை அடைய அவன் தவறான வழிகளைப் பின்பற்றுகின்றான். எனக்குப் போதும், அடுத்தவனுக்குக் கொடு என்கின்றவன் இல்லை. தன் தேவைகளை கேட்டுப் பெறுவதற்காக இறைவேண்டுதல் வைக்கின்றான். செபம் செய்வது, தவம் செய்வது, தருமம் செய்வது, காணிக்கை செலுத்துவது, பாதையாத்திரை செல்வது, திருப்பலிக்குச் செல்வது அனைத்துமே ஏதேனும் ஒரு கோரிக்கையை முன்வைத்தே செய்கின்றான். இவ்வளவு செய்தும் கேட்டது கிடைக்கவில்லையே என்ற விரக்தி பலருக்கு உண்டு. கேட்பதற்கு சில முறைகள் உண்டு. கொடுப்பதற்கு சில விதிகள் உண்டு.

### கேட்பதின் முறைகள் (செபத்தின் முறைகள்)

இறைவனைப் புகழ்தல், நீர் ஒருவரே ஆண்டவர் என ஏற்றுக்கொள்ளுதல், இயேசு வழியாகக் கேட்டல், நமக்காக மட்டுமின்றி, பிறருக்காகவும் முக்கியமாக நம் பகைவருக்காகவும் கேட்டல், நன்றி கூறுதல், நாம் கேட்பது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கேட்டல். இப்படிப் பல படிகள் நமது செபத்தில் அமைய வேண்டும்.

### கொடுப்பதின் விதிகள்

செபம் என்பது என்ன? ஒரு பிள்ளை தன் தந்தையிடம் பேசுவதுபோல் நாம் இறைவனிடம் பேசவேண்டும். இறைவன் தன் இரு கரங்களை நீட்டி நம்மை அரவணைத்துக் கொள்கின்றார். நாம் அவரைப் பார்க்கின்றோம். அவர் நமது தேவைகளை அறிந்தவராய், கருணைக் கண்கொண்டு நம்மைப் பார்க்கின்றார் என்ற உணர்வுடன் செபிக்க வேண்டும்.

கேட்பதெல்லாம் பெற்றுக் கொள்வதில்லை காரணம் கேட்பவரின் மனநிலையை இறைவன் அறிவார். தூய உள்ளத்தோடு கேட்க வேண்டும். இறைவனை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அவரின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவருக்கு உகந்தவராக



வாழவேண்டும். ஒரு தந்தை தன் பிள்ளைகளுள் எந்தப்பிள்ளை பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அவர்களின் விருப்பப்படி நடக்கின்றதோ அந்தப்பிள்ளை மீது மிகுந்த அன்பும், பாசமும் கொண்டிருப்பார். கேட்பதெல்லாம் வாங்கித்தருவார். அதுபோலதான் தந்தையாம் இறைவனும் நமக்கு என்ன தேவை என்பதை தந்தை அறிவார். (லூக். 9:11) "பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாக பாம்பைக் கொடுப்பாரோ? முட்டை கேட்டால் தேளைக் கொடுப்பாரோ?" (லூக்11-13) "தீயவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகளை அளிக்க அறிந்திருக்கின்றீர்கள் அப்படியானால் விண்ணகத்தந்தை தம்மிடம் கேட்பவருக்கு தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி" இறைவன் எவ்வளவோ நல்லவர் நம்முடைய விருப்பத்தையும், நம் தேவைகளையும் அறிந்தவர். நம்மைப்படைத்தவர் நம்மைக் காப்பவர். ஆனால் அவர் விருப்பத்தின்படி நாம் நடக்க வேண்டும்.

அவருக்கு வெறுப்பைத் தரக்கூடிய காரியங்களாக பொறாமை, பகைமை, வஞ்சகம், பழிவாங்குதல், பரத்தமை, குடிவெறி, காமவெறி இப்படி தீய எண்ணங்களுடன் வாழ்ந்துகொண்டு கேட்டேன் கிடைக்கவில்லை எனச் சொல்வது நியாயமா? அழுக்கு சுத்தமானால் வாசனை தானே வெளிவரும் என்பார்கள். இவர்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகு தொலைவில் உள்ளது என்ற இயேசுவின் வாக்குப்படி நாம் நடந்து கொண்டிருக்கின்றோம் என்றால் கேட்பது எப்படிக் கிடைக்கும். (மத்.7:21) என்னை நோக்கி "ஆண்டவரே! ஆண்டவரே எனச் சொல்பவர் எல்லாம் விண்ணரசுக்குள் செல்ல முடியாது. மாறாக விண்ணுலகில் உள்ள என் தந்தையின் திருவுளப்படி செயற்படுபவரே செல்வர்." என்பதை சிந்திப்போம். (லூக்.12:28) நம்பிக்கை குன்றியவர்களே இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எறியப்படும். காட்டுப்புல்லுக்கு கடவுள் இவ்வாறு அணிசெய்கின்றார் என்றால் உங்களுக்கு இன்னும் மிகுதியாய் செய்வார் அல்லவா? இறைவன் வாக்கு மாறாதவர் எனவே இடைவிடாது செபிக்கவேண்டும்.

(லூக்.11:8) அவர் தம் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும் அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து கொடுப்பாரல்லவா இறைவனிடம் விடாப்பிடியாகக் கேட்டால் நிச்சயம் தருவார் என்ற நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும்.

### நம்பிக்கை தேவை.

லூக் 17:19 – குணம்பெற்ற 10 பேரில் ஒருவர் வந்து இயேசுவுக்கு நன்றி கூறுகின்றார். "உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது." என்கின்றார். மத்.8:13 இயேசு நூற்றுவர் தலைவனை நோக்கி "நீர் போகலாம் நீர் நம்பிய வண்ணமே உமக்கு நிகழும்" என்றார். நூற்றுவத்தலைவனின் நம்பிக்கை நம்மில் இருக்க வேண்டும். இறைவனிடம் வேண்டும்போது நமக்காக மட்டும் வேண்டாமல் பிறருக்காகவும் நம் பகைவருக்காகவும் வேண்டவேண்டும். மத்.5:44 "உங்களுக்குச் சொல்லுகின்றேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" நம்மில் எத்தனைபேர் நம் பகைவருக்காக நமது செபத்தில் செபிக்கின்றோம். பகைவருக்காக செபித்தால்தானே கேட்டது கிடைக்கும்.

லூக். 6:31 "பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகின்றீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" பிறர் நம்மை மதிக்கவேண்டும். நம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும். அன்புசெய்ய வேண்டும். உதவிகள் பல செய்யவேண்டும் என்று விரும்புகின்றோம். நாம் அவர்களுக்கு என்ன செய்கின்றோம். சிந்திப்போம். நடந்ததை நினைத்தால் நஷ்டம்தான் மிஞ்சும் இனி நடக்கவிருப்பதை நினைக்கவேண்டும். கேட்டது கிடைக்க வேண்டுமானால் தூய வாழ்வு வாழ வேண்டும். பகைவரை அன்பு செய்யவேண்டும். கட்டளைகளைக் கடைப்பிடித்து நம்பிக்கையுடன் இடைவிடாது செபிக்க வேண்டும். பாவ வாழ்வை விட்டு தூய வாழ்வுக்கு மாற வேண்டும். இறை அன்பிலும் பிறர் அன்பிலும் மகிழ்ந்து வாழ்வோம்.●

# இறைவாக்கினர் பார்வையில் மனமாற்றம்

"வாருங்கள், ஆண்டவரிடம் நாம் திரும்புவோம். நம்மைக் காயப்படுத்தியவர் அவரே, அவரே நம்மைக் குணப்படுத்துவார்" என்று அறைகூவல் விடுத்தார் இறைவாக்கினர் ஓசே (6:1), இத்தகைய குரலை இஸ்ரயேலின் இறைவாக்கினர் அனைவரிலுமே நாம் கேட்கமுடிகின்றது. இவர்களின் பார்வையில் மனமாற்றம் என்றால் என்னவென்று ஆராயும் முன் உண்மையான மனமாற்றத்திற்கு மாறாக இருந்த இஸ்ரயேலரின் நிலையை இறைவாக்கினர்கள் எப்படிச் சுட்டிக்காட்டினர் எனக் காண்போம்.

### மனமாற்றத்தின் அடையாளம்

மக்களின் மனமாற்றத்தை உருவாக்க நோன்பு இருக்கவும் வழிபாட்டுக் கூட்டங்கள் நடத்தவும் அழைப்பு விடுக்கும் யோவேல் (2:15-16), இத்தகைய நோன்பின் அடையாளமாக, நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம் இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள் என்று எச்சரிக்கத் தவறவில்லை. (2:1) மனிதரும், விலங்குகளும் கூட சாக்கு உடை உடுத்திக் கொண்டு தங்கள் மனமாற்றத்தை வெளிப்படுத்தினர். (யோனா3:8) தண்ணீரைத் தலையில் ஊற்றிக்கொள்வதும் ஒரு முக்கிய அடையாளமாகத் திகழ்ந்தது. இஸ்ரயேல் மக்கள் சாமுவேலின் காலத்தின், "மிஸ்பாவில் ஒன்றுகூடி, தண்ணீர் மொண்டு ஆண்டவர் திருமுன் ஊற்றி, அன்று நோன்பிலிருந்து ஆண்டவருக்கு எதிராக நாங்கள் பாவம் செய்துவிட்டோம் என்று அறிக்கையிட்டார்கள்" (சாமு 7:6), இத்துடன் தங்களையே பிய்த்துப் பிடுங்கிக் கொள்வதும் மனமாற்றத்தின் வெளி அடையாளமாக இஸ்ரயேலர் கொண்டிருந்தனர் என்று நாம் அறிகின்றோம் (ஓசே.7:14)

ஆனால் இத்தகைய வெளி அடையாளங்களும், வழிபாட்டுச் சூழலில் எழுப்பப்படும் புலம்பல்களும் (எரே 3:21, நெகே 9, இச 9:4-6) வெறும் வெற்றுச் சடங்காகவே உள்ளன என்று இறைவாக்கினர்கள் எச்சரித்தனர். "பெத்தேலைத் (வழிபாட்டுத்தலம்) தேடாதீர்கள் ஆண்டவரைத் தேடுங்கள், நீங்கள் வாழ்வீர்கள்" என்று ஆமோஸ் அறைகூவல் விடுப்பது இதனால்தான் (5:5-6) நோன்பு என்பது வெறும் வெற்றுச் சடங்காக மாறிவிடக் கூடாது என்று செக்கரியாவும் எச்சரிக்கத் தவறவில்லை (7:5-6) ஆண்டவரிடம் முழு இதயத்துடன் திரும்பி வருவதே உண்மையான மனமாற்றம். இத்தகைய உள்ளுணர்வு மாற்றம் இல்லாமல் செய்யப்படும் எந்த நோன்பும் வெறும் வெளிவேடமே என்று இறைவாக்கினர்கள் போதித்தனர். (யோவே 2:12-16)

### (ii) மனமாற்றம் என்றால் என்ன?

இஸ்ராயேலின் இறைவாக்கினர் பார்வையில் மனமாற்றம் என்றால் திரும்பி வருதல் ஆகும். (யோவே 2:13) அதாவது மனித பலவீனத்தினால் கயமை உணர்வினால் தீயச் செயல்களினால் கடவுளை விட்டுப் பிரிந்தவர் தமது தீயச் செயல்களை உணர்ந்து அவற்றிற்காக மனம் வருந்துவது ஒருபுறம் அத்தகைய மனவருத்தத்துடன் கடவுள் பக்கம் மீண்டும் திரும்பி வந்து. இழந்த உறவை புதுப்பித்துக் கொள்வது மறுபுறம். மனமாற்றம் இறைவாக்கினர் பார்வையில் மூன்று தன்மைகளை வெளிப்படுத்தின.

1. மனமாற்றம் என்பது கடவுளின் திட்டத்திற்கு மனமகிழ்வுடன் கீழ்ப்படிவது ஆகும். (காண் ஓசே 6:1-3) இஸ்ராயேலர் மனம் வருந்தியதன் அடையாளமாக "என' திருமுன் நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்டீர்கள்" என்று கடவுள் எரேமியா மூலம் கூறுவது கவனிக்கத்தக்கது. (எரே 34:15)

2. இரண்டாவதாக மனமாற்றம் என்றால் கடவுள் மேல் நம்பிக்கை கொண்டு சிலை வழிபாட்டுச் செயல்களிலிருந்து திரும்பி வருவது. "எங்கள் கைவினைப் பொருள்களை நோக்கி, எங்கள் கடவுளே என்று இனிச் சொல்லமாட்டோம்." என்றும் (ஓசே 14:3)

"என்னைவிட்டு விலகிய மக்களே திரும்பி வாருங்கள் உங்கள் நம்பிக்கையின்மையிலிருந்து உங்களைக் குணமாக்குவேன்" (எரே 3:32) என்றும் உரைக்கும் கடவளின் வார்த்தை இங்கே பொருத்தமாயுள்ளது.

3. மனமாற்றம் என்றால் கடவுளுக்கு ஏற்காத அனைத்திலிருந்தும் விலகி நிற்பது. இந்தக் கருத்து எல்லா இறைவாக்கினர்களிலும் காணப்பட்டாலும் எசேக்கியேலும், எரேமியாவும் இதனை அதிகம் வலியுறுத்துவதைக் காணமுடிகின்றது. (காண் எரே 26:3, எசே 18:26) தீயச் செயல்களை விட்டொழிப்பதுதான் மனமாற்றத்தின் முதற்படி என்று எரேமியா கருத (2:8-9, 3:5), கடவுளின் மீட்புத் திட்டத்தின் வெளிப்பாடுதான் மனிதரின் மனமாற்றம் என்று வித்தியாசமாக நினைக்கின்றார். எசாயா (11:1-9) இத்தகைய மனமாற்றம் மனித முயற்சியினால் ஏற்படுவது அன்று, மாறாக கடவுளே அதற்கு வழிவகுக்கின்றார் என்று சுட்டிக்காட்ட விரும்பிய எரேமியா "என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிய வைப்பேன்.

அதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன்" என்ற இறைவார்த்தையை அறிவிக்கின்றார். (31:33) இதனையே எசேக்கியேல் இறைவாக்கினர் வழியாகக் கடவுள் அறிவிக்கும்போது "நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன் புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன்." என்று கூறுகின்றார் (36:26, காண் 18:21, 33:12). பொதுவாக கி.மு 587க்குப் பிறகு பணியாற்றிய இறைவாக்கினர்கள் மனமாற்றத்தின் வெளிப்பாடாக இறைச்சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று குறிப்பிட்டனர் (மலா 3:7-8, நெகே 9:29) இருப்பினும் உள்ளார்ந்த மனமாற்றமே மிகவும் அவசியம் என்ற கருத்து மேலோங்கி நின்றது. (யோவே 2:12-14, யோனா 3:8-9)

வெற்றுச் சடங்குகளைத் தவிர்த்து மனமாற்றத்தின் வெளிப்பாடாக வாழ்க்கை நிலையில் மாற்றத்தைக் காண முற்படுவோம். தீமை செய்தலை விட்டொழித்து நீதியை நாடித்தேட எசாயா அறிவுறுத்துகின்றார். (எசா 1:10-17). நேர்மை, இரக்கம், பணிவு, தாழ்ச்சி இவையே இறைவனுக்கு விருப்பமான மனமாற்ற வாழ்வு என்பதைத் தெளிவாக்குகின்றார் (மீக் 6:6-8) உன் குற்றத்தை நீ ஏற்றுக்கொண்டால் போதும் (எரே 3:13) என்று இறைவன் விரும்புகின்றார். ஒவ்வொருவரும் தனது தனிப்பட்ட பாவத்திற்குப் பொறுப்பேற்கவும் (எசே 3:16-21) இறைவன் அறிவுறுத்துகின்றார். இவ்வாறு குற்றத்தை ஏற்று மனம் வருந்தி, தங்கள் முழு உள்ளத்தோடு தம்மிடம் திரும்பிவர வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். (எரே 24:7, எசே 36:26-31) சுருங்கக் கூறின் இறைவாக்கினர்கள் காட்டும் மனமாற்றம் என்பது வெறுமையான சில சடங்கு ஆச்சார முறைகளை அல்ல. மாறாக ஒவ்வொருவரும் தனது தீய செயலுக்காக மனம் வருந்தி (எரே 3:16-21) திருந்தி (எரே 24:7) இறைவனிடம் வரவேண்டும். இதன் வெளிப்பாடாக நீதிக்காக ஒடுக்கப்பட்டோருக்கு உழைக்க வேண்டும் (எசா 1:10-17) என்பதே.

### இயேசு காட்டிய "மனமாற்றம்"

திருமுழுக்கு யோவானின் போதனையும், செயற்பாடும் அன்றைய சமூகத்தை, மனமாற்றத்தை நோக்கி அழைப்பதாகவே இருந்தது. தங்களது சிந்தனையையும், வாழ்வையும் முழுவதுமாய் மாற்றிக்கொள்ள அழைப்பு விடுத்தார். (மத்தேயு 3:9-10, மாற்கு 1:4, லூக்கா 3:3). இயேசுவின் தொடக்கப் போதனையே "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1:14-15) என்பதாகவே உள்ளது. ஒவ்வொருவரும் மனம்மாற அவர் விரும்பினார். மனம்மாறாத இழிநிலையைக் கண்டித்தார். (மத்தேயு 11:20-24, 12:40-42). மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள் (லூக்கா 13:5) என்றும் எச்சரித்தார். இயேசு காட்ட விரும்பிய மனமாற்றம் ஏதோ மதச்சடங்கு ஆச்சார முறையைச் சார்ந்ததல்ல. மாறாக வாழ்வையும் சிந்தனையையும் மாற்றி அமைத்து முழுமையான மானுட மாண்புபோற்றி வாழ்வதற்கான ஓர் உன்னத அழைப்பு ஆகும். (காண்க மத் 5-7 அதிகாரங்கள்). இத்தகைய உயரிய மனமாற்றம் அடைய மனமில்லாத பரிசேயர், சதுசேயர் கூட்டம் மக்களை அடக்கிப் பிழிந்த இழிநிலை கண்டு கொதித்து எழுகின்றார். (மத் 23ஆம் அதிகாரம்) இத்தகைய போதனைதான் அவரைச் சிலுவைச் சாவுக்கும் அதன் வழியாக மகிமைக்கும் மீட்புக்கும் அழைத்துச் சென்றது எனலாம்.

### இன்றைய மனமாற்றம்

நாமும் நமது பாவ வாழ்வைவிட்டு இறைவன் விரும்பும் நன்னெறிக்குத் திரும்பிவர இதோ தவக்காலம் தொடங்கிவிட்டது. நாம் எத்தகைய மனமாற்றத்திற்கு நமது இதயத்தைத் தயார்படுத்தி வைத்திருக்கின்றோம். நாற்பது நாளும் நோன்பிருந்துவிட்டு கடுகளவும் வாழ்வை மாற்றிக் கொள்ளாத சடங்கு முறைகளால் தவக்காலத்தைச் சந்திக்கப் போகின்றோமா? பிறர் மனமாற்றமடைய வேண்டும் என்பதை உரக்க அறிவித்துவிட்டு நமது வாழ்க்கையை அணுவளவும் மாற்றிக் கொள்ளாமல் புரட்சி பேசப்போகின்றோமா? சமூக அவலங்களைக் கண்டும் காணாமல் அமைதியாக இருந்து புனித வாரத்தைக் கொண்டாடப் போகின்றோமா?

சமூக அமைப்பு முறைகளைக் குற்றம் சாட்டிவிட்டு, நமது குற்றங் குறைகளை நியாயப்படுத்தி அவற்றையே வணங்கப் போகின்றோமா? இயேசு மேற்கொண்ட நாற்பது நாள் நோன்பு அவரை ஒரு புதிய மனிதராக சமூகத்திற்குத் தனது வாழ்வால் சாட்சியாக விளங்கக்கூடிய மனிதராக வார்த்தெடுத்தது, வளர்த்தெடுத்தது. நம்மிலும் உண்மையான மனமாற்றம் ஏற்படின் எத்தகைய தடுமாற்றங்களாலும் சமூக மாற்றத்தைத் தடுத்து நிறுத்திட முடியாது. மனமாற்றம் அடைவோம் இன்றே! இயேசுவில் ஏற்றம் பெறுவோம் நன்றே! ●

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# தனிமனித புதுப்பித்தல்

– அருட்பணி. நெவின்ஸ் யோகராச் பீரிஸ், மன்னார் மறைமாவட்டம் –

**திருநிலையினர்:**

1. திருத்தந்தை Francis, மகிழ்வின் நற்செய்தி (The Gospel of Joy- Evangelii Gaudium - 145) என்ற திருமடலிலே எந்த ஒரு மறை பணியாளரும் தகுந்த தயாரிப்பு இல்லாமல் மறையுரை ஆற்றும்போது அது ஆன்மீகமாக இருக்கமுடியாது என்று கூறுகின்றார். (APreacher who does not prepare is not spiritual – If he does not prepare well, he is dishonest and irresponsible with the gift he has received), ஏனென்றால் ஒரு குரு மறையுரை தயாரிக்கின்றபோது இறைவார்த்தை வாசித்து அதை உள்வாங்கி அதைத் தனது வாழ்வாக்கவும், அதை ஆவியானவரின் அருட்துணை கொண்டு தனது மக்களுக்கு எடுத்துரைக்கவும் வேண்டும். அவர் அவ்வாறு செய்யவில்லை என்றால் அவர் கடவுளை ஏமாற்றுபவராகவும், தான் பெற்ற அருளை வீணடிப்பவராகவும் கருதப்படுவார்.

2. எம் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றுகின்ற திருநிலையினரையும், அவர்கள் ஆற்றுகின்ற பணியினையும் அவர்களின் தியாக உணர்வினையும் இன்றும் இலங்கை முழுவதிலும், ஏன் புலம்பெயர் நாடுகளிலும் பெருமையாக பேசிக்கொள்வோர் ஏராளம். இருந்தபோதும் இன்று அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் அவர்கள் ஆற்றுகின்ற வழிபாடுகளுக்கும் இடையே வேறுபாடும், இடைவெளியும் காணப்படுகின்றது என்பதையும், பொது நிலையினரை அணுகும்போது அவர்களின் பேச்சுக்களில் நடவடிக்கைகளில் மனிதநேயம் என்பது குறைந்து போய்க்கொண்டிருக்கின்றது என்பதையும் முற்றாக மறுக்கமுடியாது. எமது குருப்பட்ட திருச்சடங்கின்போது ஆயர் எமக்கு அளித்த அறிவுரை வார்த்தைகளான "நீர் ஒப்புக்கொடுக்கும் பலியின் உட்பொருளை உணர்ந்துகொள்ளும். அதற்கேற்ப வாழ்க்கை நடத்தும்" என்ற வார்த்தைகளை மறுபடியும் நாம் நினைத்துப்பார்க்க அழைக்கப்படுகின்றோம். இதைத்தான் பவுலடிகளார் தனது திருமடலில் இவ்வாறு வலியுறுத்துகின்றார். "சகோதர சகோதரிகளே கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகின்றேன். கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள் இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு. இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக"
(உரோ 12:1-2).

3. நம்மை அழைத்த இயேசு பிறப்பிலும், வாழ்விலும், இறப்பிலும், ஏழ்மையை கடைப்பிடித்து நமக்கு முன்மாதிரி காட்டியுள்ளார். அவரின் அழைப்பைப் பெற்ற முதல் சீடர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்சென்றார்கள். ஆனால் இன்று அழைத்தவரின் வழியில் பயணம் செய்ய வேண்டிய குருக்கள், துறவிகளிடத்தில் ஏழ்மையும், தரித்திரமும் எந்தளவிற்கு வாழப்படுகின்றது என்பது எம்மை நாம் கேட்கவேண்டிய கேள்வியாக உள்ளது. இதைத்தான் இறையியலாளர் செபஸ்ரியன் காப்பன் கூறுகின்றார், 'காசே நம் தெய்வமாகி விட்டது. புதுப்புது சொகுசுகளையும், சுகங்களையும் வாங்கி அனுபவிப்பதே நமது வழிபாடாகி விட்டது. விளம்பரங்களைப் பார்ப்பதே காட்சி தியானம் அடுத்து என்ன பொருளை வாங்கலாம் (modern phone, new apps, new bike etc.) எனச் சிந்திப்பதே நமது செபமாகவும், வாழ்க்கை முறையாகவும் மாறிவருகின்றன. எதை இழந்தோம் இறையாட்சியின் பொருட்டு? எதை விட்டுவிட்டு வந்தோம் இயேசுவின் சீடராவதற்கு? என்று எம்மை நாமே கேட்கத் தோன்றுகின்றது.

4. உப்பாக, ஒளியாக சான்றுபகர்தலே இன்று நற்செய்தி அறிவிப்பாகும். உடைந்து உருக்கொடுத்தலே நற்கருணையில் இயேசு எங்களுக்கு விடுக்கும் அழைப்பாகும். இயேசு தன் முதற் சீடர்களை அழைத்தபோது உடனே அவர்கள் தங்கள் வலைகளையும், படகையும், தந்தையையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள் (மத்.4:18-22). அன்று அவர்களால் இயேசுவிற்குப் பின்னால் அவ்வாறு செல்லமுடிந்தது. இன்று அப்படியான ஒரு தாக்கத்தை, மனமாற்றத்தை, வாழ்வியற்பாடத்தை எனது பங்குச் சமூகத்திற்கு, இளையோருக்கு எங்களால் கொடுக்க முடிகின்றதா? சீடத்துவ வாழ்வு என்பது என் தலைவனது வாழ்வால் கவரப்படுவது அவரது வார்த்தையில் நம்பிக்கை கொள்வது. அதனை வாழ்வாக்குவதாகும். இந்த வகையில் எம் மறைமாவட்டத்தில் பணியாற்றி தனிமனித சமூக மாற்றங்களுக்கு வித்திட்ட அருட்பணி. மேரி பஸ்ரியன், அருட்பணி. பாக்கியரஞ்சித், குலாஸ் சுவாமி, அந்தோனிப்பிள்ளை சுவாமி இன்னும் எம் மறைமாவட்டத்தின் மூத்த குருக்களின் நல்வழித் தடங்களை நாம் பின்பற்றுகின்றபோது அது எம் எல்லோருடைய வாழ்க்கை மாற்றத்திற்கும், புதுப்பித்தலுக்கும் நிச்சயமாக வழிசமைக்கும். அன்னை திரேசா கூறியதைப்போன்று "எம் வாழ்வே மற்றவரது வாழ்க்கை மாற்றத்திற்கு காரணமாகவும் நற்செய்தி அறிவிப்பாகவும் மாறவேண்டும்" (My life is my preaching and teaching- Mother Teresa).

5. புதுப்பித்தல் என்பது எங்களிலே இருக்கக்கூடிய இறைவனின் சாயலை மீளப் பெற்றுக்கொள்வது அல்லது அதற்கு உயிரோட்டம் கொடுப்பதாகும். இறை சாயல் என்பது திரித்துவத்திலே காணப்படுகின்ற ஒற்றுமை உணர்வு, ஒருமித்து வாழ்தல், ஒருவர் மற்றவரை ஏற்றுநடத்தல் என்பனவாகும். ஆனால் இன்றைய திருச்சபையில், பிளவுகளுக்கும், பிரிவினைகளுக்கும் பஞ்சமில்லை. வெளிப்புறத்தில் ஒரே குடும்பம் என்ற தோற்றத்தை ஏற்படுத்தினாலும் அதன் உட்புறத்தில் பிரிவுகளும், சாதிய ஏற்றத்தாழ்வுகளும், அடக்குமுறைகளும் மலிந்து கிடக்கின்றன.

சென்ற மாதத் தொடர்ச்சி



ஆகவே மனிதத்தை உள்ளத் தூய்மையை நேசிக்கின்ற ஆன்மீகத்தை எங்களிலே வளர்க்கவேண்டும். இதனையே பவுல் அடிகளார் "சகோதர சகோதரிகளே நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் நான் உங்களை கெஞ்சிக் கேட்டுக் கொள்வது இதுவே! நீங்கள் ஒத்தகருத்துடையவர்களாய் இருங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம். ஒரே மனமும், ஒரே நோக்கமும் கொண்டிருங்கள்" (1கொரி 1:10), என்று கூறுகின்றார்.

6. இன்று மனப்பாங்கிலே மாற்றம் தேவை. திருச்சபையை இறையாட்சி இயக்கமாக கட்டி எழுப்பும் பணியில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் ஒன்றுபட்டு பணிபுரிய வேண்டும். ஏனெனில் அனைவருக்கும் ஆவியானவரின் அழைப்பு உண்டு. அதற்கேற்ற பணியும் பொறுப்பும் உண்டு. பல்வேறு அருட்கொடைகளும் உள்ளன. திருநிலையினர், பொதுநிலையினர் என இருவேறு வகுப்பினராக பிரிந்து நிற்காமல் ஆண்டவர் இயேசுவின் இறையாட்சித் தோட்டத்தில் நாம் எல்லோரும் பணியாளர்களே என்ற மனநிலை எம்மில் மலரவேண்டும். ஆனால் இன்று பெரும்பான்மையான அருட்பணியாளர்களிடம் காணப்படுவது Clericalism - குருமையம், அதாவது குருக்களின் மேன்மையை பிழையான கருத்தோட்டத்தில் பயன்படுத்துவது. அதாவது தங்களை எப்போதும் பிறரிடமிருந்து பிரித்துக்காட்டுவது. தங்கள் அதிகாரத்தை மற்றவர்கள்மேல் திணிப்பது, தாங்கள்தான் திருச்சபை என்ற எண்ணம் கொள்வது, தங்களை ஆன்மீகத்திலும், அறிவிலும், விசுவாசத்திலும் உயர்வாக கருதுவது, பொதுநிலையினருடைய கருத்துக்களுக்கும், அவர்களின் வயது, கௌரவம் இவற்றிற்கு மதிப்பளிக்காத நிலை போன்றவற்றை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

கிறிஸ்தவ நிறுவனங்களில் குறிப்பாக பாடசாலைகளில் பணிபுரிகின்ற குருக்கள், துறவிகளின் அர்ப்பணமும், ஈடுபாடும், மனிதநேயமும் எம் மறைமாவட்டத்தில் அழைத்தலுக்கும், சமூக அபிவிருத்தியில் ஆர்வம் செலுத்துகின்ற சிறந்த கல்விமான்களையும் ஒழுக்கமுள்ள இளம் தலைமுறையினரையும் உருவாக்கக் காரணமாக அமைந்துவருகின்றது. அருட் சகோதரர்கள் கில்லரி, சீசர், பப்ரிஸ்ட் போன்றோரும் அருட்சகோதரிகள் யூட், வேஜினியா போன்றோரின் எடுத்துக்காட்டான வாழ்க்கை முறையும், அர்ப்பணமும் பலரது வாழ்விலே மாற்றத்தையும், தாக்கத்தையும் இன்றும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. இன்று இத்துறையில் பணிபுரிகின்ற நாங்கள் எத்தகைய நேர்மறையான அதிர்வுகளை, இறை அனுபவத்தை, புதுப்பித்தலை எம் மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடியதாக உள்ளது என்பதை ஆராய்ந்து பார்ப்பது சாலச்சிறந்தது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் (பொதுநிலையினர்-08) உலகியல் அமைப்பை கிறிஸ்துவில் புதுப்பிக்கும் பணி ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் பணியென முன்னுரைக்கின்றது. இதில் ஆச்சரியம் என்னவென்றால் இந்த புதுப்பிக்கும் பணி திருநிலையினரிடம் அல்ல பொது நிலையினரிடமே ஒப்படைக்கப்படுகின்றது. சங்கம் யாரை மலையாக நம்புகின்றது என்றால் இயேசு கனவு கண்ட புதிய விண்ணகமும், புதிய மண்ணகமும் (திரு.வெ.21:5) உருவாவது பொது நிலையினராலேயே என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது என்று தெளிவாகக் கூறி நிற்கின்றது. இயேசு ஒரு பொது நிலையினர் ஆகவே திருநிலையினராகிய குருக்கள், துறவிகளின் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும். (எபே 4: 23) மனப்பாங்கு மாறாத மனிதர் தூய ஆவியாரால் புதுப்பிக்கப்பட்டவர் என்று சொல்ல முடியாது. இதனால்தான் தாவீது, "கடவுளே உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும் என்று வேண்டுகின்றார்" (தி.பா 51:10).

**பொதுநிலையினர்**

தனிமனித புதுப்பித்தல் என்பது இலகுவானதொன்றல்ல அத்தோடு இப்புதுப்பித்தல் நாளாந்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும். (Renewal is not an easy task, and it is a challenging one. Renewal is not an end but, it is an ongoing formation). சிறப்பாக தனிமனிதர்களாகிய நாம் எல்லோருமே மீட்படைய மனமாற்றம் அவசியம். ஆனால் மனமாற்றத்தை வாழ்வில் செயல்வடிவம் பெறச் செய்வது அதைவிட அவசியம். இயேசுவைப் பின்பற்றவந்த பணக்கார வாலிபன் ஓர் தனிமனிதனாக, கடவுளுக்குகந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தான் என்பது அவன் சிறு வயதிலிருந்து எல்லாக் கட்டளைகளையும் கடைப்பிடித்து வந்தான் என்பதிலிருந்து தெளிவாகின்றது. (மாற்10:17–22) கொலை, களவு, விபச்சாரம், பொய்ச்சான்று, வஞ்சித்துப் பறித்தல் எதுவுமே அவன் வாழ்வில் இருந்ததில்லை. இருந்தபோதிலும் அந்த இளைஞன் தன்னிடம் இன்னும் குறைவுபடுவது என்ன? என்று கேட்கின்றான். (மத்.19:20) அவனுக்கொன்று குறைவாக உள்ளது என்பதை ஆண்டவர் சுட்டிக்காட்டுவதை நாம் காண்கின்றோம். இப்படியாக எம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும் எது குறைவாக உள்ளதோ அதைக் கண்டுபிடிக்க முயலவேண்டும். அதிலிருந்து நாம் மாற்றம்பெற வேண்டும். இம் மனமாற்றம் அல்லது புதுப்பித்தல் இறை உறவிலும், அயலாரோடும் காண்பிக்கப்படவேண்டும். இப்புதுப்பித்தலானது பொதுநிலைப் பணியாளர்களாகிய ஒவ்வொருவருடைய அறநெறி ஒழுக்கவாழ்விலும், (Moral life) சிறப்பாக திருச்சபையின் சமூகப்பபிரிவினைகளுக்கமைய மாற்றப்பட வேண்டும். இப்புதுப்பித்தலின் வெளிப்பாடாக அமையக்கூடிய கருத்துக்கள் என்னவென்று பார்ப்போம்.

1. இறைவனுக்கும் அவரது மதிப்பீடுகளுக்கும் நமது வாழ்வில் முதலிடம் தருதல். (தவக்காலங்களில் ஒப்புரவு அருட்சாதனம், மனமாற்றத்திற்கான ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடுதல், தவக்கால தியானங்களில் பங்கெடுத்தல்)
2. இறைவன் விருப்பத்தை அறிந்து முனைப்போடு செயற்படுத்துதல். "உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக அப்போது கடவுளின் திருவுள்ளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள்." (உரோ 12:2)
3. இறைவார்த்தையையும், நற்கருணையையும் மையப்படுத்திய வாழ்வு வாழ முயலுவோம். (ஞாயிறு திருப்பலிகளில் முழுமையாக பங்கெடுத்தல், திறந்த மனதினராய் மறையுரைகளுக்கு செவிமடுத்தல்) "எங்களோடு தங்கும், ஏனெனில் மாலை நேரமாயிற்று பொழுதும் போயிற்று." (லூக் 24:29) எம்மாவுஸ் அனுபவம்.
4. சமுதாயத்தில் நல்ல மாற்றங்களுக்குத் தோள் கொடுத்தல் (சாதியம் அற்ற, பெண் அடிமைத்தனமற்ற சமத்துவமான சமுதாயத்தை வளர்க்க முனைப்போடு செயற்படுதல்)
5. நீதி, நேர்மை, மனித நேயம் ஆகியவை வளர பாடுபடுவோம். (காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர் இன்னும் போரினால் விதவைகள் ஆனோர் மட்டில் கரிசனையோடு நடந்துகொள்ளல், லஞ்சம், போதைவஸ்து, குடிவெறி இவற்றை ஒழிக்க முனைப்போடு செயற்படல்)
6. புதுமைகளை காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப சீர் தூக்கிப் பார்த்து சிந்தித்து வரவேற்போம். (பங்குப்பேரவை, பெண்கள் பணிக்குழு, சிறுமியர் பீடப்பணியாளர்கள், இளையோர் பாடகர் குழாம்...)
7. உடைந்த உறவுகளுக்கு உயிர்கொடுப்போம். (பெற்றோர் பிள்ளைகளை சந்திப்புக்கள் முதியோர் சங்கங்களை விரிவாக்கல்)
8. சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் நமது நம்பிக்கையை அடக்கம் செய்யாமல் வழிபாட்டை வாழ்வாக்குவோம். (ஏராளமான பொருட்செலவில் திருவிழாக்கள் அதீத சுரூப ஆராதனைகள் இவற்றிற்கு இடம்கொடுக்காமை)
9. சக்கேயுவைப்போல் நாமும் சுய ஆய்வை மேற்கொண்டு நமது வாழ்வில் மாற்றம் தேவைப்படும் இடங்களை இனம் கண்டு கொள்வோம். மாற்றம் காண முயல்வோம். நல்லதை சிந்திப்போம், நல்லவற்றிற்குத் துணை போவோம்.

**காலத்தின் தேவை**

திருச்சபை காலத்திற்குக் காலம் தன் பணியாளர்களாகிய திருநிலையினரையும், அதன் பிள்ளைகளாகிய பொதுநிலையினரையும் புதுப்பித்தலை நோக்கி வழிநடத்திக் கொண்டே வருகின்றது. இந்த வகையில் எம் மன்னார் மறைமாவட்ட திருச்சபையிலே புதுப்பித்தல் என்பது காலத்தின் கட்டாயத்தேவைகளில் ஒன்றாகும். நாம், தனிமனிதர்களாகிய எம்மிலே மாற்றத்தை, புதுப்பித்தலை கொண்டுவரவில்லை என்றால் பாரிய விசுவாச தளம்பலுக்கும் நெருக்கடிக்கும் ஆளாக நேரிடும் என்பது எம் எல்லோருடைய கவலையாக இருக்கின்றது. தனிமனித புதுப்பித்தல் என்பது ஓர் இரவிற்குள் அல்லது ஓர் இரண்டு கருத்தரங்குகளில் கலந்து கொள்வதால் வந்துவிடுவதல்ல மாறாக புதுப்பித்தல் என்பது அன்றாடம் எம்வாழ்விலே நிகழ வேண்டிய ஓர் ஆன்மீக தேடல் அல்லது பயிற்சி. இதைத்தான் திருத்தந்தை பிரான்சிஸ் 2015ஆம் ஆண்டு இலங்கைத் தீவிற்கு பிலிப்பைன்ஸ் நாட்டிற்குமான திருப்பயணத்தின்போது குருக்களையும், பொதுநிலைப்பணியாளர்களையும் பார்த்து கூறியவார்த்தைகள் Priests, consecrated persons and others! Bring conversion within you to the newness of the Gospel through the daily encounter with the Lord in prayer. உலகை புதுப்பிக்கின்ற பணியிலே எம்மை ஈடுபடுத்துகின்ற பொதுநிலையினராகிய நாம் எம் வேலைத்தளங்களையே எம் பலிப்பீடங்களாகவும், எம் அன்றாட பணிகளை பலிப்பொருட்களாகவும் மாற்றும்பொழுது நாம் எம்மையும், உலகையும் புதுப்பிக்கின்ற பணியிலே ஈடுபடுத்துகின்றவர்களாக மாறுகின்றோம். ஆக, எமது வாழ்வே செபமாக மாறுகின்றபோது அது ஒரு இறையனுபவமாகின்றது. அந்த இறையனுபவம் எம்மையெல்லாம் ஓர் புதுப்பித்தலுக்கு இட்டுச்செல்லுகின்றது.

தனிமனித புதுப்பித்தலைப்பற்றி சிந்திக்கும்போது, நான்மட்டும் மாறினால் போதும் என்று கூறுவது தவறானது. மாறாக மற்றவரையும் புதுப்பித்தல் அனுபவத்திற்கு இட்டுச்செல்ல வேண்டும். "நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியோ?" (தொ.நூல் 4:9), என்று காயின் கூறுவதைப்போல அல்லாமல் நான் வளர்வதோடு மற்றவரையும் வளர்க்க, மற்றவர் மட்டில் எனக்குள்ள கடமைகளை நிறைவேற்றுகின்றபோதுதான் எனது ஆன்மீக வளர்ச்சி முழுமையடைகின்றது.

➡ 14



# மாணவர் மன்னா



## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 09
## [யோவான் நற்செய்தி 11 – 20 வரை]

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.05.2019ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
7. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்தி விவிலிய மாதாந்த அஞ்சல் வழி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களே ‘நற்செய்தியாளர் விருது’ பெறும் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு தகுதிபெறுவார்கள்.
8. “விவிலிய வினாவிடைப் போட்டி - 09”, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### விவிலிய வினாக்கள்

01. ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான் என்று இயேசுவிடம் கூறிய பெண்மணி யார்?
02. நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன் என்ற வசனம் யோவான் நற்செய்தி எத்தனையாம் அதிகாரம், எத்தனையாம் வசனத்தில் குறிப்பிடப்படுகின்றது?
03. இயேசு சீடர்களிடம் தான் கொடுக்கும் புதிய கட்டளை எது என்று கூறினார்?
04. பிலாத்து இயேசுவை விசாரிக்க நடுவர் இருக்கை இருந்த இடத்தின் பெயர் யாது?
05. ஆண்டவரே நீர் எங்கே போகின்றீர் என்றே எங்களுக்குத் தெரியாது, அப்படியிருக்க நீர் போகுமிடத்திற்கான வழியை நாங்கள் எப்படி தெரிந்து கொள்வது என்று கூறிய இயேசுவின் சீடர் யார்?
06. நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கின்றது என்ற சொற்தொடர் யோவான் நற்செய்தி எத்தனையாம் அதிகாரம் எத்தனையாம் வசனத்தில் குறிப்பிடப்படுகின்றது?
07. உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன் நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், அப்போது உலகம் மகிழும் நீங்கள் துயருறுவீர்கள் ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் இவை கூறும் அதிகாரம் வசனம் எது?
08. எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும் இவ் வசனம் கூறும் அதிகாரம், வசனம் யாது?
09. படைப்பிரிவினரும், ஆயிரத்தவர் தலைவரும் யூதர்களின் காவலர்களும் இயேசுவை பிடித்துக் கட்டி யாரிடம் கொண்டு சென்றனர்?
10. உயிர்த்த இயேசு தம் சீடர்களிடம் “எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும், எவருடைய பாவங்களை மன்னியாது இருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா” என்று யோவான் நற்செய்தி எந்த அதிகாரம் வசனத்தில் குறிப்பிடப்படுகிறது?

### நற்செய்தியாளர் விருது

மன்னா பத்திரிகை ஊடாக விவிலிய வினாவிடைப் போட்டியில் பங்குபெற்றிய அனைத்து மாணவர்களும் இவ் விருதுப்போட்டியில் பங்குபெற தகுதி உள்ளவர்கள்.

**இப்போட்டி நடைபெறும்** :-

காலம்: 27.04.2019 நேரம்: காலை 10.00மணி

இடம்: புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை, மன்னார்

### விவிலிய வினாவிடைப்போட்டி இல. 07 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
மெ. மேரி றொசேன் குருஸ்,
9ம் வட்டாரம்,
வங்காலைப்பங்கு.

**இரண்டாம் பரிசு:**
மை. எரிக்ஷன்,
மோட்டைக்கடை,
நானாட்டான் பங்கு.

**மூன்றாம் பரிசு:**
சை. யேசுதாசன்,
காத்தான்குளம்,
கட்டைக்காடுபங்கு

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 69 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 44 பேர்.

### விவிலிய வினாவிடைப்போட்டி இல. 07இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. ச. டிலுசிக்கா, பாலைக்குளி, அடம்பன்பங்கு.
02. N. மேரி நிஷாலினி, பள்ளிமுனைப்பங்கு.
03. ஜெ. பிறின்ஸ்ரன் ஜோ பீரிஸ், பேசாலயப்பங்கு.
04. ஜெ. ஆன் பிறித்திக்கா பீரிஸ், பேசாலயப்பங்கு.
05. சி. டிலைக்ஷன், பெரியகமம், பேசாலயப்பங்கு.
06. கு. ஆன் சினேகா, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
07. அ. டன்சன், நானாட்டான்பங்கு.
08. மை. எரிக்ஷா, மோட்டைக்கடை, நானாட்டான்பங்கு.
09. சோ. யூடிற்லெற்றிஷியா, கீரி, எழுத்தூர்பங்கு.
10. S. நெகோமியா, முதலைகுத்தி, உயிலங்குளம்பங்கு.
11. கி. அ. ஆன் மல்சிக்கா, உயிலங்குளம்பங்கு.
12. அ. அனுசிஜா, பள்ளக்கமம், முருங்கன்பங்கு.
13. S. ஜெசிக்கா, காகல்ல, அப்புத்தளைபங்கு.
14. ர. மதுஷிகா, தோமையார் வீதி, பண்டாரவளைபங்கு.
15. எ.ஜெய்மென் ராஜா, புத்திரர்கண்டான், அளவக்கைப்பங்கு.
16. பி. டிலோசன், புத்திரர்கண்டான், அளவக்கைப்பங்கு.
17. S.டெல்சினா, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
18. ர. சர்மிலா, ஜோசவாஸ்நகர், தோட்டவெளிப்பங்கு.
19. ச. அபிஷேக், எழுத்தூர்பங்கு.
20. அ. மேரி அனோலின், கட்டைக்காடுபங்கு.
21. இ. ஆன் குளோடியா, கட்டைக்காடுபங்கு.
22. தி. தனுஜான், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
23. தி. அயந்தினி, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
24. அ. சயந்தினி, உக்குளாங்குளம், வேப்பங்குளம்பங்கு.
25. கி. அனுசியா, பொன்தீவுகண்டல்பங்கு.
26. ம. திருசாளினி, தாஸ்கோட்டம், வேப்பங்குளம்பங்கு.
27. ம. டெரினா, தாஸ்கோட்டம், வேப்பங்குளம்பங்கு.
28. A. பெபிஷா, புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
29. A. அபி, புதுக்கமம் உயிலங்குளம், வஞ்சியன்குளப்பங்கு.
30. B.S. ஜெய்சி, வடக்கு கெபிலவளை, பண்டாரவளைபங்கு.
31. B.S. மோஷி, வடக்கு கெபிலவளை, பண்டாரவளைபங்கு.
32. R. லெயூமி, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்பங்கு.
33. கு. நியுஸ்ரெலா, முதலைகுத்தி, உயிலங்குளம்பங்கு.
34. பி. மேரி ஜான்சலா, உயிலங்குளம்பங்கு.
35. S. அமிடா, 6/3 A, ஜாலாச வீதி, பண்டாரவளைபங்கு.
36. J. திவினா, காகல்ல தோட்டம், அப்புத்தளைபங்கு.
37. D. லீமா இஸ்பெல், காகல்ல தோட்டம், அப்புத்தளைபங்கு.
38. ஏ. சிஷாந்தியா, இனிகம்பெத்த பண்டாரவளைபங்கு.
39. P. விதுர்சிகா, இனிகம்பெத்த, பண்டாரவளைபங்கு.
40. அ. நிலாமதி, வெள்ளாங்குளம், தேவன்பிட்டிபங்கு.
41. ஜயபிரியா, செந்தோமையார் வீதி, பண்டாரவளைபங்கு.

# புனித வளனார்

“தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள்.” (எபே.6:4)

வளனார் என அன்புடன் அழைக்கப்படும் யோசேப்பு மரியாவின் கணவராவார். இயேசுவின் தந்தையாகக் கருதப்படும் இவர் பெத்லகேமைச் சேர்ந்த ஒரு தச்சர். நாசரேத்தில் குடியேறியவர். இவரைப் பற்றி மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்தியாளர்கள் தரும் செய்தியே முக்கிய ஆதாரமாக இருக்கின்றது. மாற்கு நற்செய்தியில் யாதொரு குறிப்பும் இல்லை. யோவான் நற்செய்தியில் இரண்டு இடங்களில் (யோவா.1:45, 6:42) யோசேப்பின் மகன் என இயேசுவைக் குறிப்பிடும்போது குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட திருச்சபை ஏற்றுக்கொள்ளாத நூல்களுள் ஒன்றான, புனித யாக்கோபு நற்செய்தியில், மரியா மண ஒப்பந்தம் ஆனபோது யோசேப்பு மனைவியை இழந்தவராகவும், தமது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசுவின் வளர்ச்சியில் தன்னையே கரைத்துக் கொண்டவராக யோசேப்பு திகழ்கின்றார். இதனை மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்திகள் அழகுற நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

லூக்கா நற்செய்தியாளர்: பேரரசர் அகுஸ்து சீசரின் கட்டளையை ஏற்று பெத்லகேம் சென்றது. பிறந்த குழந்தை இயேசுவை இடையர்கள் காண வந்தபோது யோசேப்புவையும் அவர்கள் கண்டது. மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கு நிறைவேற்றும் நாள் வந்தபோது விருத்தசேதனம் செய்ய கோவிலுக்கு இயேசுவைக் கொண்டு சென்றது.

ஆலயத்தில் அர்ப்பணித்தது மற்றும் ஒவ்வோர் ஆண்டும் பாஸ்காவிழா கொண்டாட மகனை அழைத்துச் சென்றது மேலும் காணாமல் போன இயேசுவை கண்டுபிடித்தல் (லூக்.2:1-51) ஆகியவற்றின் வழியாக யோசேப்பின் வாழ்வை காட்டுகின்றார்.

மத்தேயு நற்செய்தியாளர்: பிறந்த பாலன் இயேசுவைக் காண ஞானியர் வருகை. ஏரோதின் கொலை வெறியில் இருந்து குழந்தை இயேசுவைக் காப்பாற்ற வானதூதரின் கட்டளைப்படி எகிப்திற்கு ஓடுதல் பின் வானதூதரின் அறிவுறுத்தலின்படி பாலஸ்தீனத்துக்குத் திரும்புதல் (மத்.2:1-15, 19-25) போன்ற பதிவுகளின் வழியாக யோசேப்பின் வாழ்க்கையில் படம் பிடிக்கின்றார்.

நல்லதொரு வளர்ப்புத் தந்தையாக இருந்த யோசேப்பின் மரணம் எப்போது எப்படி நிகழ்ந்தது. என்பது பற்றி பல கருத்துக்கள் இருக்கின்றன. அதில் ஒன்று கிறிஸ்துவுக்குப்பின் நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட “தச்சராகிய யோசேப்பின் வரலாறு” என்னும் நூல் இதில் யோசேப்பு 110 வயதில் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.●

# பூமியில் புதுமை
## அண்டார்டிக் பனிப்பாறைகள்



அண்டார்டிக் பெருங்கடல் ஏறக்குறைய 2,600 கி.மீ. அகலத்தையும், நான்காயிரம் முதல் ஐந்தாயிரம் மீற்றர் வரை ஆழத்தையும், ஏறக்குறைய 17,968 மீற்றர் கடற்கரைப் பகுதியையும் கொண்டிருக்கின்றது. இப்பூமியின் தென்முனையின் கடைகோடியில் உள்ள அண்டார்டிக் பெருங்கடல், தெற்கு பெருங்கடல் அல்லது தென்முனை பெருங்கடல் அல்லது Austral பெருங்கடல் என அறியப்படுகின்றது. உலகின் நீர்நிலை பரப்பு (Hydrographic) குறித்த பன்னாட்டு ஆய்வு அமைப்பு உலகின் முக்கிய பெருங்கடல்களில் நான்காவது பெரிய நீர்ப்பரப்பாகவும் பெருங்கடல்களில் இருபது விழுக்காடு நீர்ப்பரப்பைக் கொண்டிருப்பதாகவும், மூன்றுகோடி ஆண்டுகளுக்கு முன் உருவான உலகின் மிக இளைய பெருங்கடல் எனவும் இதைக் கணித்துள்ளது.

இப்பெருங்கடலில் உள்ள கார்பன் புவி மண்டலத்தைவிட ஐம்பது மடங்குக்கு மேலாகவே உள்ளது. இதில் பெற்றோலியம், இயற்கை வாயு, மக்னீசியம் போன்ற கனிம வளங்கள் அதிகமாக உள்ளன. மேலும் பெங்குயின், சிப்பி மீன்கள், திமிங்கலம், சீல், மசடைட எனப் பல்வகை மீன் வகைகள் உட்பட பத்தாயிரத்திற்கு மேற்பட்ட உயிரின வகைகளும் இப்பெருங்கடலில் வாழ்கின்றன. 2006க்கும் 2007ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கெட்டியான மேல் ஓட்டைக் கொண்ட மசடைட மற்றும் கடல் மீன்கள் 1,26,976 மெட்ரிக் டன்கள் அளவில் பிடிக்கப்பட்டதாக ஒரு புள்ளி விவரம் கூறுகின்றது. தற்போது உலகை அச்சுறுத்திவரும் வெப்பநிலை உயர்வால் பெரிய பனிப்பாறை ஒன்று அண்டார்டிக்கா பனிமலையிலிருந்து உடைந்து விழ இருக்கின்றது என நாசா விண்வெளி ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இது குறித்து கூறியுள்ள நாசா ஆய்வாளர்கள் அன்டார்டிகாவின் ப்ரண்ட் ஐஸ் ஷெல்ஃப் (Brunt Ice Shelf) பகுதியில் இந்தப் பிளவு ஒக்ரோபர் 2016ஆம் ஆண்டில் முதன்முறையாக ஏற்பட்டுள்ளது. கிழக்கு நோக்கிப் பரவிய இந்தப் பிளவு மற்றொரு பிளவைச் சந்திக்க இருக்கின்றது. தற்போது இது ஆண்டுக்கு ஏறக்குறைய நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்குப் பரவி வருகின்றது. இன்னும் சில வாரங்களில் இந்த இரண்டு பிளவுகளும் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அப்படிச் சந்தித்தால் 660 சதுர மைல் பரப்பளவுடைய பனிப்பாறை உடைந்து விழும். பனிமலையிலிருந்து பனிப்பாறை உடைந்து விழும் நிகழ்வு இயற்கையாகவே நடைபெறக்கூடியதுதான். ஆனால் தற்போது நடைபெறும் மாற்றங்கள் இந்தப் பகுதியில் இதற்கு முன்பு நிகழ்ந்தது இல்லை. எனவே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சொல்கின்றனர். பனிப்பாறை உருகுதல், கடல் மட்ட உயர்வில் முக்கிய பங்காற்றுகின்றன. உலகப் பெருங்கடல்களில் கடந்த ஐந்து ஆண்டுகளில் பனிப்பாறை உருகும் வேகம் அதிகரித்துள்ளது. எனவே வெளியேற்றப்படும் பசுமை இல்ல வாயுக்களின் அளவு குறைக்கப்படாவிட்டால், 2070ஆம் ஆண்டுக்குள் 25 செ.மீ அளவுக்குக் கடல்மட்ட உயர்வு ஏற்படும் எனவும் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.●

### புதிய அலுவலக விலாசம்:

மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.



# இளையோர் மன்னா



## இயேசு என்ற இளைஞனின் "வாழும் கலைகள்"

அருட்பணி. ஜோசப் ஜஸ்டஸ், மாநிலச் செயலர், தமிழக அன்பியம், திண்டிவனம்

1. "நான்தான்" என்றார்.
2. தந்தையோடு தொடர்பு வைத்திருந்தார்.
3. தன்னுடைய பணியில் தெளிவாக இருந்தார்.
4. தன்னை நம்பினார்.
5. உள் மனதிற்கு செவி கொடுத்தார்.
6. தனது சக்தியை பாதுகாத்தார், பயன்படுத்தினார்.
7. கடினமானவைகளை செய்தார்.
8. நன்றி சொன்னார்.
9. வாழ்வைக் கொண்டாடினார்.
10. பிறரை தீர்ப்பிடுவதில் நேரத்தை செலவழிக்காதவர்.
11. தன்னைப் பற்றி தெளிவாக விளக்கினார்.
12. மேன்மையானவற்றிற்காக செபித்தார்.
13. அனைத்திற்கும் அடிப்படையாக அன்பை ஆக்கினார்.
14. தனது கலக்கத்தையும் கையிலெடுத்தார்.
15. தனது வளங்களை தெளிவாக தெரிந்து வைத்திருந்தார்.
16. விருட்சத்தை விட விதையை முக்கியமாக கருதினார்.
17. எல்லாமே உயிரோடு இருப்பதாக உணர்ந்தார்.
18. நடவடிக்கை எடுத்தார்.
19. அவர் திட்டம் வைத்திருந்தார்.
20. ஒரு குழாமை உருவாக்கினார்.
21. கேள்விகளை வரவழைத்தார்.
22. விஷயங்களை வித்தியாசமாகப் பார்த்தார்.
23. அதிகாரத்தோடு பேசினார் செய்தார்.
24. எல்லாரும் பார்க்கும் விதமாக இருந்தார்.
25. எல்லாவற்றையும் பெரியதாக பார்த்தார்.
26. தனது திட்டத்தை யாராலும் தடுக்க முடியாது என்பதை உணர்ந்தார்.
27. தனது அடிகளை படிப்படியாக எடுத்து வைத்தார்.
28. தனது குழாமை (நண்பர்களை) தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.
29. முதல் தரமான ரசத்தைக் கொடுத்தார்.
30. வித்தியாசமான அளவையினால் அளந்தார்.
31. பதில்களை உருவாக்கினார்.
32. தேவையில்லாத விமர்சனங்களை கண்டு கொள்ளாதவர்.
33. தேவையான விமர்சனத்தை கேட்டு பெற்றுக் கொண்டார்.
34. பல விஷயங்களில் சிறப்பு நிபுணராக இருந்தார்.
35. தான் தனியாக இல்லை என்பதை உணர்ந்தார்.
36. சீடர்களுக்கு பெரிய கனவுகளைக் கொடுத்தார்.
37. மக்களின் கருத்தை வரவேற்றார்.
38. பெண்களை அதிகாரப் படுத்தினார். (இற்றல்)
39. சீடர்களை நம்பினார்.
40. சீடர்களுக்கு கற்றுக்கொடுத்தார்.
41. சீடர்களுடன் அதிகமான நேரம் செலவழித்தார்.
42. தான் ஒரு முன் மாதிரியாக செயல்பட்டார்.
43. எல்லோருக்காக இறைவனிடம் வேண்டினார்.
44. குறையுடையோரை தேடினார்.
45. தேவையானவர்களை தேர்வு செய்தார்.
46. தொடர்ந்து உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார்.
47. மக்கள் கூட்டம் மீது பரிவிரக்கம் கொண்டிருந்தார்.
48. சீடர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.
50. நினைவில் வைத்துக்கொள்ள முடிந்ததை நினைவாகக் கொடுத்தார்.
51. எல்லோரும் எல்லாம் முழுமையாக பெற விரும்பினார். ●

## உலக கிறிஸ்தவ ஒன்றிப்பு இளையோர் மாநாடு

லெபனான் நாட்டில் மார்ச் 25 ஆம் திகதி கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு பெருவிழாவன்று கிறிஸ்தவ, இஸ்லாமிய இளையோர் இணைந்து அன்னை மரியாவுக்கு வணக்கம் செலுத்துவர். லெபனான் நாட்டின் பெய்ரூட் நகரில் மார்ச் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி முடிய நடைபெறும் உலக கிறிஸ்தவ ஒன்றிப்பு இளையோர் மாநாட்டில் 40 நாடுகளிலிருந்து வருகை தரும் 1600 இளையோர் கலந்துகொள்கின்றனர் என்று பீதேஸ் செய்தி கூறுகின்றது. லெபனான் நாட்டின் கிறிஸ்தவ சபைகள், மத்திய கிழக்குப் பகுதியின் சபைகள் மற்றும் Taize குழுமம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள இவ் மாநாட்டில் இஸ்லாமிய இளையோரும் பங்கேற்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 25ஆம் திகதி கிறிஸ்து அறிவிப்பு பெருவிழாவன்று கிறிஸ்தவ, இஸ்லாமிய இளையோர் இணைந்து அன்னை மரியாவுக்கு வணக்கம் செலுத்துவர் என்று இந்த மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர்கள் கூறியுள்ளனர். 2010ஆம் ஆண்டு முதல் லெபனான் நாட்டில் மார்ச் 25ஆம் திகதி அன்னை மரியாவின் சிறப்புத் திருநாளாகவும், ஒரு தேசிய விடுமுறையாகவும் கொண்டாடப்படுகின்றது என்றும் இத்திருநாளையொட்டி லெபனான் நாட்டின் பல்வேறு நகரங்களில் அன்னை மரியாவுக்கு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன என்றும் பீதேஸ் செய்தி கூறுகின்றது. ●

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்

## தொடக்ககால கிறிஸ்தவம் எதிர்கொண்ட சவால்களும், அவற்றின் மத்தியில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியும்

– அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி –

தூய ஆவியை பெற்றுக் கொண்ட திருத்தூதர்களின் விசுவாச வாழ்வும், நற்செய்தி அறிவிப்பும் செபமும் திருச்சபையை வளர்ச்சியுறச் செய்தது. அவர்கள் துன்பங்களையும், கசையடிகளையும் பொறுத்துக்கொண்டு திருச்சபை உலகெங்கும் பரப்பப்பட சாட்சிகளாய் விளங்கினார்கள். ஆதித் திருச்சபை எருசலேமில் எங்கும் விரைவாகவும், துரிதமாகவும் பரவி, ஒரு வலிமையான கவர்ச்சியான சமூகமாக விளங்கியது. இத்தகைய நிலையில் கலாபனைகளும், பேதகங்களும் திருச்சபையை பெரிதும் துன்புறுத்தின. எனினும் திருச்சபை உலகெங்கும் பரவி வளர்ந்தது.

**யூதக் கலாபனை பற்றி**

யூதர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்துப் பகைத்து அவர்களைத் துன்புறுத்தியமை யூத கலாபனை ஆகும். கிறிஸ்தவ சமூகத்தினருக்கும், யூதர்களுக்குமிடையே அடிக்கடி முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்பட்டு அவை ஒரு பெரிய யூத கலாபனையாக விஸ்வரூபம் எடுத்தது. யூதர்கள் என்ன காரணத்திற்காக இயேசுக் கிறிஸ்துவை வெறுத்து அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்களோ அதே காரணத்திற்காகவே அவர்கள் கிறிஸ்துவின் சீடர்களையும், கிறிஸ்தவர்களையும் வெறுத்துப் பகைத்தார்கள். ஆதித் திருச்சபை எருசலேம் எங்கும் அவ்வளவு விரைவாகவும் துரிதமாகவும் பரவியதும் அங்கு பெரும்பான்மையாக வாழ்ந்த யூதர்களுக்கு எரிச்சலையும், வெறுப்பையும், பகைமையையும் மூட்டி வளர்த்தது. யூதத் தலைவர்களான சதுசேயரும், பரிசேயரும், தலைமைக் குருக்களும் கிறிஸ்தவர்கள் பரவி வளர்ந்தால் சமுதாயத்தில் தங்கள் செல்வாக்கு அற்றுப் போய் தங்கள் பதவிகளும் பறிபோய்விடுமென அஞ்சினர். எனவே அவர்களும் கிறிஸ்தவர்களை எதிர்த்து வெறுத்துப் பகைத்தனர். ஆதிக் கிறிஸ்தவ சமூகத்திற்கும், யூத சமூகத்திற்குமிடையில் ஆரம்பத்திலிருந்து வளர்ந்து வந்த பகையே யூத கலாபனையாக மாறியது.

**யூதக் கலாபனை ஏற்பட்டமைக்கான காரணங்கள்**

யூதர்கள் ஒரு மெசியாவை எதிர்பார்த்திருந்தாலும் அவர் ஒரு மெசியாவாக தாவீது அரசனைப் போன்ற பலம் வாய்ந்த அரசனாக இருப்பாரென்றும் அவர் ஒரு பெரிய ஆயுதப் படையைத் திரட்டி உரோமையருடன் போர் தொடுத்து அந்நிய ஆதிக்கத்திலிருந்து தமக்கு அரசியல் விடுதலையைப் பெற்றுக் கொடுப்பாரென்றும் எதிர்பார்த்திருந்தனர். இயேசுவின் போதனைகளும், செயற்பாடுகளும், அவர்களின் எதிர்பார்ப்பிற்கு முரணாகவிருந்தபடியால் ஏழைத் தச்சனின் மகனாகப் பிறந்த இயேசுவை அவர்கள் மெசியாவாக ஏற்க மறுத்தனர். கிறிஸ்தவர்கள் இயேசுவின் இறைக் கொலைப் பழியை யூதர்மேல் சுமத்தினர். அவர்களின் முன்னோர்கள் வழியாகப் பேசிய தூய ஆவிக்குச் செவிகொடுக்கவில்லையென்றும் இறைவாக்கினரைக் கொலை செய்தனரென்றும் கூறி இயேசுவை உரோமையரைக் கொண்டு அவர்களே கொலை செய்தார்களெனக் குற்றம் சுமத்தினர். கிறிஸ்தவர்கள் யூதப் பரம்பரைப் பழக்கவழக்கங்களையோ மோயீசன் சட்டங்களையோ அவ்வளவு பெரிதாக மதிக்கவில்லை. கிறிஸ்துவின் அன்புக்கட்டளைக்கும், அன்புச் சமூகமென்ற கிறிஸ்தவ மனப்பான்மைக்குமே முக்கியத்துவம் கொடுத்தனர். யூதர்கள் எருசலேம் ஆலயம் உரோமையரால் தரைமட்டம் ஆக்கப்பட்டதற்கும் தாங்கள் உரோமையரால் துன்புறுத்தப்படுவதற்கும் கிறிஸ்தவர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்றுக் கொண்ட பாவமே காரணமென அவர்கள் மேல் பழிசுமத்தி என்ன காரணத்திற்காக இயேசுவை வெறுத்து அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்களோ! அதே காரணத்திற்காகவே கிறிஸ்தவர்களையும் வெறுத்துப் பகைத்துத் துன்புறுத்தினார்கள்.

**யூதக் கலாபனையின் விளைவுகள்**

எருசலேமில் ஒழிந்திருந்த கிறிஸ்தவர்கள் சிதறுண்டு வெளியே வந்து தாங்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து திருச்சபையை வளர்த்தனர். சவுல் தமது மனமாற்றத்தின் பின்பு கிறிஸ்தவத்திற்கு ஆற்றிய பணி கிறிஸ்தவத்தை வளர்ச்சியடையச் செய்தது. யூதர்களும் மனம் மாறிக் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர். கிறிஸ்தவம் புறவினத்தார் மத்தியில் செல்ல வழி வகுத்தது. கீழைத்தேய நாடுகளிலும் கலாபனையின் மூலம் திருச்சபை பரவியது.

**உரோமைக் கலாபனை**

உரோமையரால் புதிய நெறியைப் பின்பற்றுபவர்களுக்கு, (கிறிஸ்தவர்களுக்கு) எதிராக நிகழ்த்தப்பட்ட துன்புறுத்தல்கள் உரோமைக் கலாபனை ஆகும். இவை முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள் இடம் பெற்றது. பத்து உரோமைக் கலாபனைகளில் இறுதியான பத்தாவது கலாபனை மிகக் கொடூரமானது. இதனால் இவ் யுகத்தை மறைசாட்சிகளின் யுகம் என்பார்கள். இது மூன்று வகைப்பட்டது:

1. கொள்கைக் கலாபனை: உரோமையரின் பார்வையில் கிறிஸ்தவர்கள் சமூக விரோதிகளாகக் கருதப்பட்டார்கள். கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும் புறவினத்தவர்களுக்குமிடையில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படுவதை அவதானித்த அரச அதிகாரிகள் குழப்பங்களை அடக்க தலையிட வேண்டியிருந்தது. அதற்கு கிறிஸ்தவர்களின் அசாதாரண நடைமுறைகளே காரணம் என எண்ணினர். இவ்வளவு காலமும் உரோமையில் நிலவிய மத அமைதி அழிக்கப்படுவதையும் பேரரசின் மதக் கொள்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதையும் அறிந்திருந்தனர். கிறிஸ்தவர்களாக இருப்பதே குற்றமாக கருதப்பட்டு கலாபனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதுவே கொள்கைக் கலாபனை என அழைக்கப்பட்டது.

2. சந்தர்ப்பவாதக் கலாபனை: உரோமையில் கலாபனை வேளைகளில் ஆளுநர்களின் சிலர் கிறிஸ்தவர்களுக்குச் சாதகமாயிருந்தவர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவில்லை. அதே வேளை உரோமைய குழப்பக்காரர்கள் கிளர்ந்தெழுந்து கிறிஸ்தவர்கள் மேல் பழி சுமத்தி ஆளுநரின் கவனத்திற்குக் கொணர்ந்ததால் அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். எனவே கலாபனை இடத்துக்கிடம் வேறுபட்டதால் இதனைச் "சந்தர்ப்பவாதக் கலாபனை" என்றழைப்பர்.

3. அரச கலாபனை: உரோமையில் கிறிஸ்தவர்களின் தொகை அதிகரித்தமையினால் உரோமை அரச மதத்திற்கும் அத்தோடு இணைந்த உரோமைப் பேரரசுக்கும் ஆபத்து வரக்கூடும் எனப் பயந்து கிறிஸ்தவம் பரவுவது தடை செய்யப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பொதுச்சட்டம் கொண்டு வரப்பட்டது. கொள்கைக் கலாபனை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு பதிலாக "அரச கலாபனை" ஆரம்பமாகியது. இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பொதுப் பாதுகாப்பின் பெயரால் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள்.

**உரோமைக் கலாபனை ஏற்பட்டமைகான காரணங்கள்**

கிறிஸ்தவர்கள் கிறிஸ்து ஒருவரே ஆண்டவர், மீட்பர் என விசுவசித்ததால் பிற மத தெய்வங்களுக்கு வழிபாடு செய்யவோ, தூபம் காட்டவோ முன்வரவில்லை. கிறிஸ்தவர்கள் அந்நியத் தெய்வச் சிலைகளை வழிபடுவதைப் பாவமாக கருதியதால் சிலை செய்பவர்களும் பலி ஒப்புக் கொடுக்கும் குருக்களும் கிறிஸ்தவர்களை தங்கள் பகைவர்களாகக் கருதினார்கள். பிற மதத்தினரின் கோட்பாடுகள் தவறானவை என வெளிப்படையாகவே அறிவித்தனர். கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடுகளை இரகசியமாக இரவில் மேற்கொண்டனர். எனவே அவர்கள் துர் நடத்தைக்காகவே இவ்வாறு ஒன்று கூடுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டனர். கிறிஸ்தவர்கள் திவ்விய நற்கருணை உட்கொள்வதை பிற மதத்தினர் தவறாகப் புரிந்து கொண்டு அவர் குழந்தைகளைக் கொன்று அவர்களது உடலையும், இரத்தத்தையும் உண்கின்றார்கள் என பழி சுமத்தப்பட்டனர். இயேசுவின் வல்லமையால் அவர்கள் நோயாளியைக் குணமாக்கியதைக் கண்டு மாய வித்தைக்காரர்கள் எனப் பெயர் சூட்டப்பட்டனர். சக்கரவர்த்திகள் தெய்வீகத் தன்மையுடையவர்கள் உலக அரசே இறையரசை விட மேலானது என்ற உரோமையரின் கொள்கைகளை கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இறையரசு முடிவில்லாதது என்ற கிறிஸ்தவர்களின் நம்பிக்கை உரோமையர்களுக்கு எரிச்சலை மூட்டியது. உலகில் நடக்கின்ற அழிவுகளுக்கும், பஞ்சத்திற்கும் கிறிஸ்தவர்களே காரணம் என்று அவர்கள்மேல் பொய்க் குற்றம் சாட்டப்பட்டது. யூத மதத்தை விட்டு கிறிஸ்தவத்தைப் பின்பற்றிய யூதக் கிறிஸ்தவர்களைப் பொறுக்க முடியாத யூதர்களும், உரோமையரின் கோபத்தை மேலும் வலுப்படுத்தியமையினால் கிறிஸ்தவர்களுக்கும், உரோமையருக்கிடையே சந்தேகமும், வெறுப்பும், பகையும் நாளுக்கு நாள் வளர்ந்து கலாபனைக்கு வழிவகுத்தது. ஆனாலும் கிறிஸ்தவர்களின் விசுவாசம் உறுதிப்பட்டது. அவர்கள் மத்தியில் தாராள குணமும், தியாக வாழ்க்கையும் வளர்ந்தன. மறைசாட்சி மரணம் வழியாகக் கிறிஸ்தவர்கள் அளித்த சாட்சியம் மறை உண்மைகளின் உன்னதத்தையும், வலிமையையும் எடுத்துக்காட்டின. மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறித் திருச்சபையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது.

**பேதகக் கொள்கைகளும் அதற்கெதிராகக் கூட்டப்பட்ட திருச்சங்கங்களும்**

கிறிஸ்தவ நம்பிக்கைப் படிப்பினைகளுக்கு மாறான போதனைகள் பேதகமாகும். திருச்சபையின் ஆரம்பத்தில் தோற்றக் கொள்கை, சுவிகாரக் கொள்கை, மனிக்கேயவாதம், தோனாத்திய வாதம் போன்றவை தோன்றின ஆனால் இவை கிறிஸ்தவ கோட்பாட்டுப் போதனைகளைப் பெரியளவில் பாதிக்கவில்லை. ஆனால் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் தோன்றிய ஆரிய வாதம், நெஸ்தோரிய வாதம், இயுத்திக்கேய வாதம், மசதோனிய வாதம் போன்ற தப்பறைகளே கிறிஸ்வ நம்பிக்கைக் கோட்பாடுகளைப் பெரிதும் பாதித்தன. ●

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### இருகரம் கூப்பி இறைவனிடம் வேண்டிடு....!

அ. ஜஸ்மின் ஷரோன், ஆவணம், நானாட்டான்.

நாதியற்ற ஏழைகள் நலமுடன் வாழ...!
வீதியில் உள்ள உறவுகள் வெளிச்சத்தைக் காண...!
ஆதியந்தம் இல்லா அவனியில் மாந்தர்...!
ஆனந்தமாய் வாழ அனுதினமும் வேண்டிடு...!

கருவிலே கரையும் குழந்தைகள்
தெருவிலே மடியும் செல்வங்கள்
விலையாகிப் போகும் விழுதுகள்
நிலையாக நின்று நிலைத்திட நிமலனிடம் வேண்டிடு

மதுவிலே மடியும் மானிடர்கள்
மாதுவிலே மயங்கும் மனிதர்கள்
மனமாற்றம் பெற்று மறுவாழ்வு காண
மன்னிக்கும் தேவனிடம் மனமார வேண்டிடு...!



கண்ணிருந்தும் காணா கயவர்கள்
காதிருந்தும் கேட்கா காவலர்கள்
வாயிருந்தும் பேசா வல்லவர்கள்
வாழ்விலே மாற்றம் பெற வல்லவனை வேண்டிடு..!

மாறாத நோயால் மாரடித்துப் புலம்புவோர்
தீராத வலியால் தினம் தினம் வாடுவோர்
தேடாத தெய்வத்தை நாளெல்லாம் தேடுவோர்
தேற்றரவு பெற்று ஏற்றமுறவாழ தேவனிடம் வேண்டிடு...!

காணாமல் போனோரின் கலக்கங்கள் தீர
வீணாக மரித்தோரின் உறவுகள் வாழ
காணாத சோகங்கள் கலைந்து மனம் மகிழ
கண்கண்ட தெய்வத்திடம் கவனமாய் வேண்டிடு...!

படிக்கின்ற பருவத்தில் பழுவேலை சுமப்பவர்
துடிக்கின்ற இதயத்தில் துயரத்தை அடைந்தவர்
நடிக்கின்ற உலகத்தின் நடுவிலே வீழ்ந்தவர்
எடுக்கின்ற முடிவுகள் இதமாக இருந்திட
இருகரம் கூப்பி இறைவனிடம் வேண்டிடு...!

### வாழ்க்கை என்னும் பாடம்

அ. வேதநாயகம், பிச்சகுளம்.

மனிதா நீ விரும்பியோ
இந்த மண்ணில் பிறந்தாய்
இல்லையே சமூகத்திற்கு நீ
பயன் உள்ளவனாக வேண்டும்
என்றுதான் இறைவன் உன்னைப் படைத்தான்.



வஞ்சகம், சூது, பொறாமை
கூடவே இருந்து குழி பறித்த
குள்ளத் தனங்களை நீ சிந்தித்துப்பார்
அப்போது தெரியும் உந்தனின்
கீழ்த்தரமான வாழ்க்கையின் இலச்சணம்

பிச்சைப் பாத்திரம் ஏந்தி
உன்னிடம் வந்து விட்டானே
ஏதாவது போட வேண்டும் என்று எண்ணிவிடாதே
பிச்சை இடும் தரம் உனக்கு
இருக்கின்றதா என்று சிந்தித்துப்பார்
அப்போது அவன் உணர்ந்து கொள்வான்
யாரிடம் பாத்திரம் ஏந்த வேண்டும் என்று

விதைப்பவன் விதைத்ததில்
சில விதை மட்டும் நல்ல
நிலத்தில் விழுந்து பத்து மடங்கு
பலனைத் தந்தது இது உவமை
நீ எதனை விதைக்கின்றாயோ
அதனையே அறுவடை செய்வாய் இது உண்மை.

உரிமையை தயங்காமல் கேள்
அநீதியை தட்டிக் கேள்
உன்னிடம் தவறு இல்லை என்றால்
எதிர்த்து நில்
காலம் மாறும் நீ நினைத்ததை சாதிப்பாய்
இது வாழ்க்கை எனக்கு கற்றுத்தந்த பாடம்



## கொஞ்சம் சிரிங்க

**நோயாளி:** டாக்டர் நீங்க சொன்ன மாதிரி தினமும் அல்வா சாப்பிடுறேன். தொப்பை குறையவே மாட்டேங்குது.
**டாக்டர்:** நாசமாப் போச்சு. தினமும் அளவா சாப்பிடுங்கன்னு சொன்னது உங்க காதுல தப்பா விழுந்திடுச்சே!

* * * * *


**பல்லு:** நாக்கைப் பார்த்து சொல்லுச்சாம், "நாங்க 32 பேரு எல்லோரும் சேர்ந்து ஒருதடவை இறுக்கி அழுத்துனா நீ காலி..!"
**நாக்கு:** சிரிச்சிட்டே சொல்லுச்சாம், "நான் தனி ஆளு தான். ஆனா, நான் ஒருவார்த்தை மாத்தி பேசுனா நீங்க 32 பேரும் காலி...!"

* * * * *

**அம்மா:** டேய் ஏண்டா முடிய நீளமா வளர்த்துக்கிட்டு றபர் பேண்டெல்லாம் மாட்டிட்டு அலையிறே...?
**பையன்:** இதுதாம்மா இப்போ ∴பேஷன்
**அம்மா:** நாயே.. உங்க அக்காவ பொண்ணுபாக்க வந்தவங்க உன்ன பிடிச்சிருக்குண்ணு சொல்லிட்டு போயிருக்காங்க.

* * * * *

**கமலா:** என்ர புருஷன் எல்லாவற்றிலும் சிக்கனமாக இருந்து மிச்சம் பிடிப்பார்.
**விமலா:** எப்படி?
**கமலா:** இரவு படுக்கும்போது ஓடுகின்ற மணிக்கூட்டையே நிற்பாட்டி விடுவார்.



**அண்ணா:** டேய்! ராமு இந்த பெரிய யானையில எப்படி ஏறுவாங்க?
**தம்பி:** தெரியாதே அண்ணா.
**அண்ணா:** இது தெரியாம இருக்கிறியாடா? நான் சொல்லுறன் கேளு. யானை குட்டியாக இருக்கும்போதே ஏறிடுவாங்க.

.....................................

**மாமி:** பக்கத்து வீட்டு மருமகளைப் பாரு. தினமும் அவ மாமியாரை நமஸ்காரம் பண்றா.
**மருமகள்:** எனக்கும் ஆசையாகத்தான் இருக்கு. மாமியாரின் படத்தை நமஸ்காரம் பண்ண!!!

.......................................

**பெண்:** ஹலோ இது கஸ்டமர் கெயார் தானே?
**கஸ்டமர் கெயார்:** ஆமாம் சொல்லுங்க மேடம்.
**பெண்:** என் அஞ்சு வயசுப் பையன் சிம் கார்டு ஐ விழுங்கிட்டான்.
**கஸ்டமர் கெயர்ர்:** அப்படினா டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு போங்க மேடம்.
**பெண்:** இல்லை... அதுல 95 ரூபா பலன்ஸ் இருந்துச்சி. அவன் பேசும்போது காசு போகுமா சார்?
**கஸ்டமர் கெயார்:** ????

## மன்னா விளம்பரப் பலகை

"எவன் ஒருவன் தனக்குத்தானே மனக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கின்றானோ, அவனே சுதந்திர மனிதனாவான்."

"மற்றவர்கள் தவறுகளைத் திருத்த முன்னர் நாம் எமது தவறுகளைத் திருத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்."

......................

வாழ்வில் முன்னேறுவதற்கு நெஞ்சில் தைரியமும், உதட்டில் உண்மையும் இருந்தால் போதும்

......................

நல்லவரைப் பார்க்கும் போது பின்பற்ற நினையுங்கள். கயவரைப் பார்க்கும்போது உங்கள் இருதயத்தை பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

"நீங்கள் எதை செய்தாலும் உங்கள் உள்ளத்திற்கும், உலகத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள்."

......................

வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்.

......................

எனக்கு ஒரு பிரச்சனை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். பிரச்சனை என்று சொன்னாலே கவலையும், பயமும் கட்டாயம் வரும். எனக்கு ஒரு சவால் என்று சொல்லிப் பாருங்கள் தைரியமும், தன்னம்பிக்கையும் தானாகவே வரும்.

பிறர் உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றாயோ, நீயும் அப்படியே நடந்துகொள்.

அனைவரையும் நம்பு. ஆனால், அனைத்து சூழ்நிலைகளையும் நம்பாதே! இங்கு வீரமாக வீழ்த்தப்பட்டவர்களைவிட சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டவர்களே அதிகம்!

## மாரடைப்பு ஏன் வருகின்றது?



கொழுப்புப் பண்டங்கள், பால் பொருள்கள், புலால் வகைகள் போன்றவைகளை அதிகமாக உண்டு வருவதால் இது ஏற்படுகின்றது. இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிந்து இரத்தக் குழாய்களை அடைத்துக் கொள்கின்றது. ஏற்கெனவே சீராகச் சென்ற இரத்தமானது தடைப்படுகின்றது. அடைத்துக் கொண்ட இரத்தக் குழாயில் இரத்தமானது ஒரு வேகத்துடன் உந்துகின்றது. அதே சமயம், இரத்தத்தில் அழுத்தம் (Pressure) தாங்காமல் இரத்தக்குழாய் வெடித்துப் போகின்றது. மேலும் இதே கொழுப்புச் சத்தானது, இதய உறையை (Pericardium) நாசமாக்கி, இதயத்தின் சுருங்கி விரிதல் (Systole and Diastole) தன்மையையும் நிறுத்தி இறுதியில் இதயத்தின் இயங்குதசையை (Heart Involuntary musele) செயலிழக்கச் செய்து விடுகின்றது. பிறகு இதயத்துடிப்பு நின்று நம் நாடி துடிப்பும் அடங்கிப் போகின்றது. மரண விரைப்பு (Regor mortin) ஏற்பட்டு மரணம் நம்மை ஆட்கொள்ளுகின்றது. உடல் மண்ணில் சாய்கின்றது. இதுவே மாரடைப்பு (Heart failier) என்பது.

ஆகவே, இப்படிப்பட்ட அவலநிலை வராமல் இருப்பதற்கு நாம் அதற்கு வேண்டிய இதயப் பாதுகாப்பு முறையை கைக்கொள்ள வேண்டும். கொழுப்பு சம்பந்தமான அனைத்து உணவுப் பண்டங்களையும் நீக்கி, தினம் தவறாமல் கீரைகள், காய்கள், பழங்கள் அதிகம் எடுத்துக் கொண்டு வரவேண்டும். அதே நேரம் பிராணிகளின் பால் மற்றும் பால் பண்டங்கள், புலால் வகைகள், எண்ணெய்ப் பண்டங்கள் வறுத்த பொரித்த உணவுகள், நெய், டால்டா, வனஸ்பதி முதலியவைகளை உணவில் நீக்கி உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற உணவை உண்டு வந்து இந்நோயை வரவிடாமல் தடுத்து விடலாம்.

அடிக்கடி நெஞ்சுவலி வருகின்றவர்களுக்கு மாரடைப்பு வரவாய்ப்புண்டு, இப்படிப்பட்டவர்கள் விளக்கெண்ணெயை மார்பிலும், முதுகிலும் நன்கு பூசிக் கொண்டு அனல் காய வேண்டும். அப்படி அனல் காயும்பொழுது அடுத்தவர் உதவி கொண்டு மார்பிலும், முதுகிலும் நன்கு மசாஜ் செய்துவிட வேண்டும். பிறகு முப்பது நிமிட நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு இதமான வெந்நீரில் குளித்துவிடவேண்டும். பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படித் தொடர்ந்து 10, 15 நாட்கள் செய்துவரவேண்டும். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால் நெஞ்சுவலி வராது. மாரடைப்பு வராது. ஆகவே நம் இதயத்தை என்றும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். இதயத்தை நாம் பாதுகாத்தால் அது நம்மைப் பாதுகாக்கும்.●

## கண் அழகுக் குறிப்புக்கள்



♦ பெண்களுக்கு புருவம் வில் போல் அமைந்து இருந்தால் தான் அழகு சுமாராகக் காணப்படும். பெண்கள் கூட புருவம் பராமரித்து வந்தால் அழகாக தெரிவார்கள். கண்கள் அழகாக இருந்தும் புருவம் சரியாக இல்லையானால் அது கண்களின் அழகையும் கெடுத்து விடும்.

♦ புருவமே இல்லாதவர்களுக்கு, சிறு வயதிலிருந்தே நல்ல தரமான மையை புருவத்தில் வைத்து வந்தால் புருவம் அதே வடிவத்தில் அழகாக வளரும். ஐ ப்ரோ பென்சிலால் இரவில் தூங்குவதற்கு முன் விளக்கெண்ணெய்யால் தொட்டு புருவத்தில் வரைந்து கொண்டு தூங்கினால் புருவம் அடர்த்தியாக வளரும்.

♦ விளக்கெண்ணெய்: தினமும் தூங்குவதற்கு முன்பு புருவங்களில் விளக்கெண்ணெய் தேய்துவந்தால் இரண்டு மாதங்களில் புருவம் அடர்த்தியாக மாறுவதைக் காணலாம்.

♦ தேங்காய் எண்ணெய் ஒரு பாத்திரத்தில் சிறிதளவு ஊற்றி இளஞ்சூட்டில் புருவத்தில் மசாஜ் செய்து வர பலன் தெரியும்.

♦ வெங்காயச் சாற்றினை ஒரு பஞ்சில் நனைத்து தினமும் படுப்பதற்கு முன்பு தடவி வந்தால், புருவத்தில் விரைவில் முடிவளர்வதை நம்மால் காணமுடியும்.

♦ கற்றாழை சதைப் பகுதியை எடுத்து புருவத்தில் தேய்த்து வந்தால், அங்கு ஏற்பட்டுள்ள தொற்று நீங்கி, முடி வளர ஆரம்பித்துவிடும்.

♦ சீரம்: புருவ சீரம் கடைகளில் கிடைக்கும் அதனை வாங்கி, இரவு தூங்குவதற்கு முன் முகத்தை கழுவிய பின், சீரத்தை ஒரு பிரஷினால் புருவத்தில் தடவ வேண்டும். மறுநாள் காலையில் கழுவுங்கள். இப்படி செய்வதால் புருவ முடிகள் தூண்டப்பட்டு, முடி வளர ஆரம்பிக்கும்.●

# மன்னார் வேதசாட்சிகளும், மீட்கப்பட்ட மனித எச்சங்களும்

மன்னார் புதைகுழி 1404 முதல் 1450இற்கு உட்பட்டது சங்கிலிய மன்னனால் வெட்டிக் கொல்லபட்ட கத்தோலிக்க மக்களுடையதாக இருக்கலாம். மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் 1499 முதல் 1719ஆம் ஆண்டிற்கு உட்பட்டவையாக இருக்கலாம் என அமெரிக்க ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது. மன்னார் மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களை ஆய்வு செய்த புளோரிடா ஆய்வுகூடம் இதனைத் தெரிவித்துள்ளது. மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் 1404 முதல் 1450ஆம் ஆண்டிற்கு உட்பட்டவையாக இருப்பதற்கான 95சதவீத சாத்தியக்கூறுகள் உள்ளன என புளோரிடா ஆய்வுகூடம் தெரிவித்துள்ளது. அதேவேளை 1417 முதல் 1440ஆம் ஆண்டிற்குட்பட்டவையாக இருப்பதற்கான 68சதவீத வாய்ப்புக்கள் உள்ளதாகவும் புளோரிடா ஆய்வுகூடம் தெரிவித்துள்ளது.

மன்னார் மனித புதைகுழி தொடர்பான சட்டபூர்வமான ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்ற நிலையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவில் இடம்பெற்ற கார்பன் மாதிரிப் பரிசோதனைகள் குறித்த சட்டபூர்வ அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னாரில் மீட்க்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் சங்கிலிய மன்னனால் வெட்டிக் கொல்லபட்ட கத்தோலிக்க மக்களுடையதாக இருக்கலாம்.

### வரலாற்றுப்பின்னணி

சங்கிலியன் அல்லது சங்கிலி என்பவன் 1519 தொடக்கம் 1560 ஆண்டு வரை யாழ்ப்பாண அரசை ஆண்ட அரசன் ஆவான். போர்த்துக்கேயருடைய குறிப்புக்கள் இவனை ஒரு கொடூரமான அரசனாகக் காட்டுகின்றன. இறுதிவரை பல வழிகளிலும் யாழ்ப்பாணத்துக்குள் புக முயன்ற போர்த்துக்கீசரைத் துணிந்து எதிர்த்து நின்றவன் என்பதால் சங்கிலியனைப் பற்றி அவர்கள் நல்ல கருத்துக் கொண்டிருப்பார்கள் என்பதை எதிர்பார்ப்பதற்கு இல்லை. இவனையும், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பின் சிறுவனான அரச வாரிசு ஒருவனுக்காகப் பகர ஆளுநராக (Regent) இருந்த சங்கிலி குமாரனையும் ஒன்றாக எண்ணிப் பலர் மயங்கினர். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் யாழ்ப்பாண வரலாற்று நூலான யாழ்ப்பாண வைபவமாலையை எழுதிய மயில்வாகனப் புலவர், பெயர் ஒற்றுமையால், இவ்விருவருக்கும் இடையில் ஆட்சி செய்த அரசர்களைக் குறிப்பிடாது விட்டுவிட்டார். ஆனால், போர்த்துக்கேயருடைய குறிப்புக்கள் இவர்கள் இருவரையும் தெளிவாக வேறுபடுத்துகின்றன. சங்கிய மன்னன் 1440 தொடக்கம் 1450 வரையும், பின்னர் 1467 தொடக்கம் 1478 வரையும் யாழ்ப்பாணத்தை ஆண்ட கனகசூரிய சிங்கையாரியனின் மகனாவான். இவனுக்கு இரண்டு மூத்த சகோதரர்கள் இருந்தபோதும், அரசை முறையற்ற விதத்தில் இவன் கைப்பற்றிக் கொண்டான்.

சங்கிலியன் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலம், போர்த்துக்கேயர் இலங்கையில் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த காலமாகும். இலங்கையின் அரசியலிலும் தலையிடத் தொடங்கியிருந்தனர். இவர்களுடன் வந்த கத்தோலிக்க அருட்பணியாளர்கள் மன்னார்ப் பகுதிகளில் பெருமளவில் விசுவாச ஆழமிக்க இறைமக்களைக் கண்டு இன்னுமதிகமாக இப்பகுதிகளில் இறைபணியாற்றி அவர்களை உறுதிப்படுத்தினார். மன்னாரில் புனித சவேரியாரின் அருட்பணியாளர்களால் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த வழிபாடுகள் நடைபெறுவதை அறிந்து தானே நேரில் சென்று அவற்றில் ஈடுபடுபவர்களை வெட்டிக் கொன்றான். போர்த்துக்கேயர் அந்த இடத்தில் வேதசாட்சிகள் கோயில் என்ற தேவாலயத்தைக் கட்டினார்கள், அது இன்றும் மன்னாருக்கும், பேசாலைக்குமிடையிலுள்ள தோட்டவெளி என்னுமிடத்திலுண்டு.●

## திருத்தந்தையின்....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

### திருத்தந்தையின் அணுகுமுறைகள்

திருத்தந்தையின் சில அணுகுமுறைகளை உற்று நோக்கினோமென்றால் ஒழுக்கநெறிக் கோட்பாடுகள் என்பவை சட்டத்தின் அடிப்படையில் எழுதப்பட்டவைகளாக இல்லாமல் பகுத்தறிதலின் வழியாகப் பிறந்தவைகளாக இருக்க வேண்டும என்பதை வலியுறுத்தி வருகின்றார். இதைத்தான் அவரின் Amoris Laetitia என்ற ஏட்டின் 8ஆம் பிரிவில் காண்கின்றோம். எந்த திருத்தந்தையும் மேற்கொள்ளாதவகையில் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை கிறிஸ்தவ விசுவாசத்தின் மையப்பகுதிக்கு இத்திருத்தந்தை கொண்டுவந்துள்ளது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று. இறைவனின் படைப்பைப் பாதுகாக்கும் பொறுப்புடையவர்கள் என்பதை வலியுறுத்தியே Laudato Si என்ற சுற்றுமடலை வரைந்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### திருப்பீடத்தின் சீரமைப்புகள்

திருப்பீடத்தின் அமைப்பு முறைகளில் அவர் கொணர்ந்துள்ள மாற்றங்கள் இந்த ஆறு ஆண்டுகளில் ஏராளம் எனக் கூறலாம். சிறு சிறு அமைப்புக்களை ஒன்றாக இணைத்தது வத்திக்கான் வங்கியை சீரமைத்தது பல்வேறு துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்க புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கியது, கர்தினால்கள் நியமனத்தில் அனைத்துக் கண்டங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கியது, அருட்பணியாளர்களும், ஆயர்களும் இறைமக்களின் பணியாளர்கள் என்ற கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவது என கடந்த ஆறாண்டு கால சீர்திருத்தங்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போகலாம்.

### அமைதி முயற்சிகள்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எளிமையானவர் என்பதும், ஏழை மக்கள் மீது அளவுகடந்த பாசமுள்ளவர் என்பதும், மதங்களிடையே நல்லுறவை வளர்க்க விரும்புபவர் என்பதும் இவ்வுலகம் முழுவதும் அறிந்த ஒன்றே. ஆனால் அவரின் கீழ் திருஅவை ஆற்றியுள்ள அமைதி முயற்சிகள், அதனால் பயனடைந்தவர்கள் உலகிற்குச் சொன்ன பின்னரே தெரியவந்துள்ளது. நல்ல செயல்களுக்கு விளம்பரம் தேவையில்லை என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவர் நம் திருத்தந்தை. 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கியூப அரசுத்தலைவர் Raul Castro அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து கியூபக் கைதிகள் விடுவிக்கப்படுவதிலும், கியூபாவுக்கு எதிரான அமெரிக்க பொருளாதாரத்தடைகள் அகற்றப்படுவதற்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் முயற்சியைப் பாராட்டியபோதுதான் திருஅவையின் இரகசிய நல் முயற்சிகள் பலருக்குத் தெரியவந்தன.

1959ஆம் ஆண்டு முதல் கியூபாவுக்கும், அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையே இருந்த பனிப்போர் திருத்தந்தையின் தளராத முயற்சியால் 2015ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் முடிவுக்கு வந்தது. இதே கியூபா நாட்டில்தான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரஷ்ய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபைத் தலைவர் கிறில் அவர்களை 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சந்தித்து இரு கிறிஸ்தவ சபைகளுக்கும் இடையே நிலவிய ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான முரண்பாட்டை முடிவுக்குக் கொணர்ந்தார். இரஷ்ய ஆர்த்தடாக்ஸ் வழிபாட்டுமுறை தலைவரை ஒரு திருத்தந்தை சந்தித்தது அதுவே முதன்முறை. இரண்டு இலட்சத்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்டோரை பலிவாங்கி 50 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து கொண்டிருந்த கொலம்பிய நாட்டு உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்த்தைகளை ஊக்குவித்ததுடன் 2017ஆம் ஆண்டு அந்நாட்டில் திருப்பயணம் மேற்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அமைதிக்கான ஆவலையும் நாம் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

### புரிந்து செயற்படுதல்

அரசுச் சட்டங்கள் வழியாக மணமுறிவுப் பெற்று பிரிந்து வாழும் தம்பதியரையும் கருக்கலைப்பு செய்துள்ள தாய்களையும், ஒரே பாலின நாட்டமுடையோரையும் தீர்ப்பிடாமல் அவர்களைப் புரிந்துகொண்டு அவர்களின் பிரச்சனைகளை உணர நாம் முன்வரவேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கடந்தகால 6 ஆண்டுகளை மொத்தமாக நம் கண்முன் கொணர்ந்து நோக்கும்போது நமக்குத் தெரிவதெல்லாம் 1936ஆம் ஆண்டு அர்ஜென்டினாவில் பிறந்து. இன்று 120 கோடிக்கும் மேற்பட்ட கத்தோலிக்கர்களை வழிநடத்திச் செல்லும் இந்த திருத்தந்தை ஏழைகள் மீது காட்டும் ஆர்வம் புலம்பெயர்ந்தோரை வரவேற்கும் நிலை கைதிகளைச சந்திப்பது குற்றக் கும்பல்களுக்கு எதிராக குரலெழுப்புவது சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அக்கறை காட்டுவது மதங்களிடையே கிறிஸ்தவ சபைகளிடையே ஒற்றுமைக்கு பாடுபடுவது உலகில் அமைதியை நிலைநாட்ட முயல்வது குழந்தைகளைக் கண்டதும் வாரியணைத்து முத்தமிடுவது, திருஅவை அதிகாரிகளால் பாலியல் முறைகேடுகளுக்கு உள்ளாக்கப்பட்ட சிறார்களைச் சந்தித்து அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட முயற்சிகளை எடுத்தது திருஅவையில் இரக்கத்தின் யூபிலி ஆண்டை சிறப்பித்தது உலக வறியோர் நாளை உருவாக்கியது உலகில் மரணதண்டனையை எதிர்த்து வருவது எனப் பல நல்ல நடவடிக்கைகள் வந்து செல்கின்றன.

### புனிதர்கள்

எல்லாவற்றிற்கும் முக்கிய நோக்கமாக இருப்பது நாம் இன்னும் சிறந்ததொரு உலகைப் படைக்க வேண்டும் என்பதே. இந்த திருத்தந்தையின் காலத்தில்தான் திருத்தந்தையர்கள் 23ஆம் ஜான் இரண்டாம் ஜான் பால், ஆறாம் பவுல், அன்னை தெரேசா, Euphrasia Eluvathingal, Kuriakose Elias Chavara, Joseph Vaz, பேராயர் Oscar Romero, போர்த்துக்கல் பாத்திமாவில் அன்னைமரியை காட்சி கண்ட Jacinta Marto மற்றும் Francisco Marto, புனித குழந்தை தெரேசாவின் பெற்றோர் Marie-Azélie Guérin Martin மற்றும் Louis Martin உட்பட, 49 இறை ஊழியர்கள் மற்றும் அவர்களின் 841 உடன் உழைப்பாளர்கள் புனிதர்களாக அறிவிக்கப்பட்டனர்.

கடந்த ஆறு ஆண்டுகால பணியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்பம், இளையோர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றங்கள் உட்பட மூன்று உலக ஆயர்கள் மாமன்றங்களையும், திருஅவையில் சிறியோர் பாதுகாப்பு என்ற தலைப்பில் ஒரு மாமன்றத்தையும் நடத்தியுள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த ஆறு ஆண்டுகளில் உலகின் நாற்பது நாடுகளில் 27 திருத்தூதுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

மேலும் இந்த மார்ச் 30, 31 ஆகிய திகதிகளில் மொராக்கோ வருகின்ற மே 5 முதல் 7 வரை, பல்கேரியா வட மாசிடோனியா என இந்த ஆண்டில் மேலும் திருத்தூதுப் பயணங்களை மேற்கொள்ளவிருக்கின்றார் திருத்தந்தை பிரான்சிஸ். புவனோஸ் அய்ரெஸ் பேராயராகப் பணியாற்றிய கர்தினால் Jorge Mario Bergoglio அவர்கள் 2013ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி திருஅவையின் 266வது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் திருத்தந்தை பிரான்சிஸ் என்ற பெயரையும் ஏற்றார். இவர் 1936ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி ஆர்ஜென்டினா நாட்டின் புவனோஸ் அய்ரெஸ் நகரில் பிறந்தார்.வத்திக்கானின் சிஸ்டீன் சிற்றாலயத்தில் கூடிய கர்தினால்கள், கர்தினால் ஹோர்கே மாரியோ பெர்கோலியோ அவர்களை அடுத்த திருத்தந்தையாகத் தேர்ந்தெடுத்தபோது பல்வேறு ஆச்சரியங்கள் அங்குப் பொதிந்திருந்தன. இயேசு சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை என்பதுடன் இவர் அமெரிக்கக் கண்டத்திலிருந்து வரும் முதல் பாப்பிறையுமாவார்.●

## ஆண்டவரின்....

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஒவ்வோர் அழைப்பும் வலைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு கரையில் நிற்பதல்ல மாறாக இயேசு நமக்கென குறித்து வைத்துள்ள பாதையில் பின்செல்வதாகும் என்று கூறியுள்ள திருத்தந்தை ஒருவரின் இறையழைப்பு தனக்காக அல்ல அது தனது சமுதாயம் மற்றும் கலாச்சாரங்களுக்குப் பணியாற்ற வேண்டியதாகும் என உரைத்துள்ளார். ஆண்டவரின் அழைப்பு நம் சுதந்திரத்தில் அவர் தலையிடுவதாக இல்லை. மேலும் இந்த அழைப்பு நம்மை ஒரு கூண்டுக்குள் வைப்பதோ அல்லது சுமையானதோ அல்ல மாறாக இது கடவுள் நம்மைச் சந்திப்பதற்கு எடுக்கும் அன்பின் முயற்சி என்றும் அவரது பணியில் நம்மை நாம் ஈடுபடுத்த வேண்டும் என்றும் திருத்தந்தையின் செய்தி கூறுகின்றது. நம் வாழ்வுக்கு ஆண்டவர் வைத்துள்ள திட்டத்தைக் கண்டுபிடிப்பதற்கு உதவும்படியாகவும் அவர் நமக்காகத் தேர்ந்தெடுத்துள்ள வாழ்வுப் பாதையில் தொடக்கமுதல் நடப்பதற்கு துணிவைத் தரும்படியாகவும் இந்த உலக நாளில் செபத்தில் இணைந்திருப்போம் என்று தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.●

## மன். அடம்பன்....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

மன்னார் மடு வலயத்தினைச் சேர்ந்த மன். அடம்பன் றோ.க.த.க. பாடசாலையின் தரம் 03 ஆண்கள் அணியினர் மூன்றாம் இடத்தினையும், தரம் 05 ஆண்கள் அணியினர் மூன்றாம் இடத்தினையும் அகில இலங்கை ரீதியில் வெண்கலப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். (2017ஆம் ஆண்டு வெள்ளிப்பதக்கம் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.) மன்.அடம்பன் றோ.க.த.க.பாடசாலை அதிபர்.S.மரியதாஸ் அவர்களுக்கும் பயிற்சி ஆசிரியர்கள் திரு. J.J. கிரிசேந்திரா ஆசிரியை K.உதயகோகிலா, மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.●

## பள்ளிமுனைப்....

03ஆம் பக்கத் தொடர்.

மேலும் பத்துக்கட்டளைகள் தூய ஆவியாரின் கொடைகள், நற்கருணை ஆராதனை, குடும்ப உறவுகள், திருமண தம்பதியினரின் மீள் வாக்குறுதிகள், குணமாக்கல் வழிபாடுகளுடன் மக்கள் கொண்டுவந்திருந்த உணவுப் பொதிகளும் ஆசீர்வதிக்கப்பட்டு மக்களுக்கு பரிமாறப்பட்டது. இவ் அன்பு விருந்து வழிபாடானது 01.03.2019 இரவு 11.00மணிக்கு இந்நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவடைந்தது.

இவ் வழிபாடுகள் மூலம் நாம் பெற்றுள்ள பயன்கள்.

பரிசுத்த வேதாகமம் வாசிப்பதில் ஆர்வம் காட்டியமை. திருப்பலிக்கு வராதவர்கள் கூட அதிகமாக திருப்பலியில் பங்கேற்றமை, அனைத்து மக்களினதும் முழுமையான பங்களிப்பு, முறிந்துபோன உறவுகள் இணைக்கப்பட்டுள்ளமை, மனித சக்தியில் நம்பிக்கை வைத்தவர்கள் தெய்வ பக்தியில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.●

## மடு மறைக்கோட்ட....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

இதனைத் தொடர்ந்து தேவன்பிட்டி திருப்பாலர்சபை மாணவ மாணவிகள் 150 பேருக்கும், அந்தோனியார்புரம் திருப்பாலர் சபை மாணவிகள் 69 பேருக்கும், விடத்தல்தீவு திருப்பாலர் சபை மாணவ மாணவிகள் 64 பேருக்கும் சின்னம் சூட்டும் நிகழ்வு மிகவும் மகிழ்ச்சியாக நடை பெற்றது. இன் நிகழ்வில் சில சிறார்களுடைய பெற்றோரும் கலந்து கொண்டு திருப்பலியை சிறப்பித்தார்கள். சின்னம் சூட்டப்பெற்ற அனைத்து மாணவியர்களையும் ஆண்டவருடைய பணியை துணிவோடும், விசுவாசத்தோடும் செய்ய ஆசிர் வதிக்கப்பட்டார்கள். இத்துடன் மறைக்கோட்ட முதல்வரின் ஆசியுடனும், இயக்குநர் அவர்களின் அறிவுரையும் ஆசியுரையுடனும் திருப்பலி நிறைவுற்றது. இறுதியாக இயக்குநரின் நன்றியுரையுடன் அனைவரும் தமது ஊர்களுக்கு மகிழ்ச்சியுடன் சென்றார்கள். இன் நிகழ்வு மாலை 7.00 மணியுடன் நிறைவுற்றது.●

## மடு மண்ணில்....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

இதுவே ஊக்குவிப்பாளர்களின் முதல் பணி. நல்ல காரியத்தைப் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்து அவர்களை கிறிஸ்துவிற்குள் ஒன்றிணைக்க உதவி செய்ய வேண்டும்" எனக்கூறினார். அதனைத் தொடர்ந்து மூன்று நாட்களும் ஊக்குவிப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாக பல தலைப்புக்களில் உரைகள் நிகழ்த்தி ஊக்குவிப்பாளர்கள் அனைவரையும் போசனைப்படுத்தினர்.

விசேடமாக பயிற்சிப் பாசறையின் கடைசி நாள் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி மேதகு கிறிஸ்ரி நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் இரண்டாம் பயிற்சிப்பாசறையின் சின்னம் சூட்டும் திருப்பலியானது தலைமை தாங்கி சிறப்பிக்கப்பட்டு பின்னர் அனைத்து ஊக்குவிப்பாளர்களுக்கும் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.●

## தவக்காலம்....

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

### வாழ்வின் வெளிவேடம்

ஒவ்வொருவரும் வெளிவேடம் போடுவதற்கு சோதிக்கப்படுகின்றோம் எனவும் உண்மையாக வாழாதவர் இளையோரிடம் நல்தாக்கம் ஏற்படுத்துவதில்லை எனவும் உரைத்த திருத்தந்தை இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவை நோக்கிய இக்காலம் இந்த முரண்பாடுகளைக் கண்டறிவதற்கு ஏற்றது எனவும் கூறினார். எளிமையாக வாழ்வதன் அழகையும் எதார்த்தமான வாழ்வு வெளித்தோற்றத்தோடு ஒன்றிணைந்து செல்ல வேண்டுமென்பதையும் இந்த தவக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் கண்டுணர வேண்டுமென்று அழைப்பு விடுத்த திருத்தந்தை நம்மால் இயன்ற அளவில் தாழ்மையுடன் முன்னேறிச் செல்வதற்கு ஆண்டவரிடம் அருள் வேண்டுவோம் என்று கூறினார்.●

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar

பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'

வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.200

## நெகேமியா (அதிகாரம் 01 முதல் 06 முடிய)

உங்கள் விடைகளை ஏப்ரல் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | 03 | | 04 | | | | ✱ | |
| | | | | 05 | | 06 | | | 07 | |
| | 08 | | | | | ✱ | | | | |
| | | | | | 09 | | | | | |
| ✱ | | | | 10 | | | | | | |
| | | 11 | | | | | | 12 | ✱ | |
| | | | 13 | | | | 14 | | | |
| | 15 | | | | 16 | | | | ✱ | |
| | | | | 17 | | 18 | | | | 19 |
| 20 | | | | ✱ | 21 | | | | | 22 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார், மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அடிமைத்தனத்திற்குத் தப்பித்துக்கொண்டு அம்மாநிலத்தில் உயிரோடிருப்பவர்கள் பெருந்துயரம் ................ அடைகிறார்கள்.
3. இது .................... அன்றி வேறொன்றுமில்லை.
6. மக்களும் பணி ............ முழு உள்ளத்துடன் ஈடுபட்டனர்.
8. இவ்வாறு அவர்கள் நமக்காக ............ காவலும், பகலில் வேலையும் செய்வார். (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
9. மற்றப் பாதிப்போர் ஈட்டி, கேடயம், வில், மார்புக் கவசம் இவைகளை ................ கொண்டு நின்றனர்.
11. என்னை அச்சுறுத்த முயன்ற ............ இறைவாக்கினர்களையும் மறந்து விடாதேயும்.
14. நற்பணி செய்யத் தங்களைத் ......... செய்துகொண்டனர்.
16. அவருடைய ஊழியர்களாகிய நாங்கள் ............ வேலையைத் தொடங்கப் போகிறோம். (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
20. இஸ்ரயேல் மக்களாகிய நாங்கள் உமக்கு ..............கச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிறேன்.

### மேலிருந்து கீழ்

1. உங்களுக்கு எருசலேமில் பங்கில்லை, உரிமையில்லை, நினைவுச் ............... இல்லை என்றேன்.
2. சபாயின் மகன் பாரூக்கு அந்த மூலையிலிருந்து பெரிய குரு எலியாசின் வீட்டு ........... பழுது பார்த்தார்.
3. ஆனால் “ஒரு நரி அதன்மேல் ஏறிச்சென்றால்கூட அந்தக்கல் ............. இடிந்து விடும்” என்று ஏளனம் செய்தான்.
4. அவருடைய ஊழியர்களாகிய நாங்கள் கட்டட ..........த் தொடங்கப் போகிறோம்.
7. எப்பொழுது நீ .................. வருவாய்?
8. அவர்களிடமிருந்து காத்துக்கொள்ள ............... பகலும் காவலர்களை அமர்த்தினோம்.
9. நாட்டில் அவர்கள் ............ களாகிக் கொள்ளையடிக்கப் படட்டும்.
11. இம்மக்களுக்கு நான் செய்த எல்லா நன்மைகளுக்கும் ........... எனக்கு ஆதரவாயிரும்.
13. பெத்தக்கரேம் மாவட்டத்தின் ஆளுநரும் ......... பின் மகனுமான மல்கியா குப்பைமேட்டு வாயிலைப் பழுது பார்த்தான்.

### வலமிருந்து இடம்

2. உம் ஊழியரான மோசேக்கு நீர் அளித்த .............. நினைவு கூர்ந்தருளும்.
3. இவர்கள் எருசலேமின் பெரிய .......... வரை புதுப்பித்தார்கள்.
5. கெயிலா மாவட்டத்தின் மறு ......... ஆளுநரும் ஏனதாக்கின் மகனுமான பல்வாயும் பழுதுபார்த்தார்.
9. கடவுளின் ............. என்னோடு இருந்ததால் மன்னரும் அவ்வாறே கொடுத்தார்.
10. இதுவரை நான் ............... வாயில்கள், கதவுகள், அமைக்கவில்லை.
11. நாங்கள் நிலம் ................ வாங்கிச் சேர்க்கவில்லை (2வது எழுத்து 3வதாக உள்ளது)
17. ஏனெனில் யூதாவில் பலர் அவனுக்கு ........... தந்திருந்தார்கள்.
19. ஏனெனில் ................ நம் கடவுளின் உதவியால் நிறைவேறியது என்று கண்டனர்.
22. மேலும் நான் ............... விண்ணகக் கடவுளின் முன் மன்றாடினேன்.

### கீழிருந்து மேல்

5. அப்பொழுது நான் மன்னருக்குப் ............ பரிமாறுவோனாக இருந்தேன்.
12. எக்காளம் ........... என் அருகிலேயே இருந்தான். (குழம்பியுள்ளது)
14. அவர்கள் கைகள் வேலை செய்வதில் ................... விடும்.
15. மேயா காவல் .................. வரையும், அனனியேல் காவல் மாடம் வரையும் அர்ப்பணம் செய்தனர்.
17. எனவே நாங்கள் உண்டு உயிர் .................... பொருட்டு எங்களுக்குத் தானியம் கிடைக்கும்படி செய்யும்.
18. என்னை அச்சுறுத்தும்படி தோபியா ............... அனுப்பிக் கொண்டிருந்தார்.
19. நாம் கடவுளின் ............ கோவிலின் உள்ளே சந்திப்போம்.
20. எல்லாத் திரைகளிலிருந்தும் நம்மை ........... வருகிறார்கள் என்று அறிவித்தனர்.
21. பல நாள்கள் ............. கொண்டாடினேன்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 198

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
M. நிமல்றாஜ்,
கர்த்தர்கோவில் 1ம் வீதி,
கீரி, மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
ஜீவரெட்ணம் யசிந்தா,
6ம் வட்டாரம்,
விடத்தல்தீவு.

**மூன்றாம் பரிசு:**
மை. எரிக்ஷா,
மோட்டைக்கடை,
நானாட்டான்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 85 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 198ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ச. துவாரகா, எழுத்தூர், மன்னார்.
2. அ. செபஸ்தியாம்பிள்ளை, சாளம்பன், ஆண்டாங்குளம்.
3. ரூ. கஸ்ரியா, வன்னிக்கோட்டம், சிதம்பரபுரம், வவுனியா.
4. D.P. பிறிஸ்ரா, மாவிலங்கேணி, முருங்கன்.
5. ஜெ. அனோஜினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
6. S. செபமாலை மார்க், 7ம் வட்டாரம், வங்காலை.
7. M. பிளண்ரீனா, கன்னியர்மடவீதி, மன்னார்.
8. வ. அருண் கிரித்தி துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
9. செ. வன் நிலுஜன் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
10. தேவிகா பத்மராஜா, மடுமாதாவீதி, பெற்றா, மன்னார்.
11. ச. அபிஷேக், எழுத்தூர், மன்னார்.
12. டெபோறா மோகன்ராஜ், தபாலகவீதி, மன்னார்.
13. கே. துளசிகா, சிதம்பரபுரம், வவுனியா.
14. ஞா. வினோதர்சினி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
15. செ. ஜெபறாஜ், சாளம்பன், ஆண்டான்குளம்.
16. எ. ஜெய்மென் புத்திரர்கண்டான், முருங்கன்.
17. ச. சகாயமலர், எழுத்தூர், மன்னார்.
18. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
19. வயலட்யோண், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
20. N. நிதின்சன், சாளம்பன், ஆட்காட்டிவெளி.
21. செபஸ்ரியாம்பிள்ளை, கன்னாட்டி, அடம்பன்.
22. யோ. மேரி சுவேதா, சவேரியார்புரம், சிலாவத்துறை.
23. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
24. மரிய கொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை.
25. P. அனற்ஜீவிதா, பாப்பாமோட்டை, மாந்தை.
26. கிருபாகரன் அக்சயன், சிவபுரம், பம்பைமடு.
27. செறோன் பாப்பாமோட்டை, மாந்தை.
28. E. நிறொக்சன், ஜோசவாஸ் நகர், தோட்டவெளி.
29. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
30. S. கிறிஸ்ரா, தோட்டவெளி, மன்னார்.
31. A. சரணியா பெரேரா, சவேரியார்புரம், சிலாவத்துறை.
32. கிறிஸ்ரி ஜொல்ட், பெற்றா, மன்னார்.
33. T. அபிநயா, மாதிரிகிராமம், நறுவிலிக்குளம்.
34. D.A. ஜய்டன் குரூஸ், தலைமன்னார் கிராமம்,
35. N. திவிசனா, முள்ளிக்குளம், மன்னார்.
36. யே. மலர்விழி, புனிதவவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
37. J. டெலைக்சன், தேவன்பிடடி, மன்னார்.
38. J. அருள் கிப்சி, தேவன்பிட்டி, மன்னார்.
39. நெ. கவிஷன் பெனாண்டோ, சிலாவத்துறை.
40. செ. தனுஜன், கன்னாட்டி, அடம்பன்.
41. K. தரணியா, சாளம்பன், ஆட்காட்டிவெளி.
42. ஜீன்போள் லக்மினி குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
43. இசக்கியேல் நகர், தோட்டவெளி.
44. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
45. J. பிரவின் சவேரியார்புரம், சிலாவத்துறை.
46. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
47. செ. பிறீடா, கன்னாட்டி, அடம்பன்.
48. M. சரன் டயஸ், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
49. செ. தனுஜினி, கன்னாட்டி, அடம்பன்.
50. N. கரிஸ், பாசையூர், யாழ்ப்பாணம்.

## தனி மனித.....

### 09ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஏனென்றால் நான் வாழுகின்ற சமூகத்தின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அக்கறைகொள்ளாத ஆன்மீகம் இயேசு இவ்வுலகில் கட்டியெழுப்ப விரும்பிய இறையரசிற்கு முறனானது. எனவேதான் இயேசு கூறுவதைப்போன்று நான் பசியாய் இருந்தேன் எனக்கு உண்ணக்கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் குடிக்கக்கொடுத்தீர்கள். ஆடையின்றி இருந்தேன் உடுத்தினீர்கள். சிறையில் இருந்தேன் என்னை பார்க்கவந்தீர்கள் என்று கூறுகின்றபோது அவர்கள் எப்போது நீர் பசியாகவோ, தாகமாகவோ, ஆடையின்றியோ இருந்தீர் என்று கேட்பார்கள். அப்போது ஆண்டவர், சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்பார். (மத். 25:35-40) அதுபோலவே ஆக ஒவ்வொருவருடைய மீட்பு என்பது எம் தனிப்பட்ட சமயம் சார்ந்த பக்தி முயற்சிகளில் மட்டுமல்ல மாறாக பிறர்மட்டிலான ஆன்மீக, சமூக கடமைகளிலும் தங்கியுள்ளது என்பதை ஆண்டவர் இயேசு வலியுறுத்துகின்றார்.

இன்று எம் ஒவ்வொருவருடைய தனிமனித புதுப்பித்தலுக்கும் அடிப்படையான தேவையாக இருப்பது ஆன்மீக அனுபவம். இன்று எம் வழிபாடுகளிலும் அன்றாட வாழ்க்கையிலும் சத்தங்களும், சலசலப்புக்களும் அதிகமாக காணப்படுகின்றதே ஒழிய மௌனத்திற்கு இடம் கொடுப்பது குறைவாக உள்ளது.

அதிகாலையிலே பாடல்களோடு தொடங்குகின்ற எமது வாழ்வு மாலை வரை பல்வேறு சத்தங்களால் நிறைந்து போய் எம் ஆன்மாக்கள் அமைதியில் இறைவனைச் சந்திக்க உள்ளார்ந்த தியானத்தை மேற்கொள்ள நாம் இடம் கொடுப்பதில்லை. (What we need today, is the contemplative prayer life – Pope Francis). “அமைதி கொண்டு நானே ஆண்டவர் என உணர்ந்து கொள்ளுங்கள்” (திபா.46:10) என்று திருப்பாடல் ஆசிரியர் அழைப்பதைப்போன்று அமைதியில் ஆண்டவரை சந்திக்கின்ற இந்த ஆழ்நிலை ஆன்மீகம்தான் எங்களை தன்னிலை உணர்தல் நிலைக்கு இட்டுச்செல்கின்றது. அதுவே மனிதனை இயற்கையோடும், அயலாரோடும், இறைவனோடும் உறவிலே வளரச்செய்கின்றது.

### இறுதியாக

கடவுளின் படைப்பாகிய இயற்கை முழுவதுமே தன்னை தினம் தினம் புதுப்பித்துக் கொண்டே இருக்கின்றது. இந்த வகையில் கடவுள் தாமே ஓர் புதுப்பித்தலுக்கு எமக்கெல்லாம் அழைப்பு விடுக்கின்றார். தூய ஆவியார் தாமே எம்மையெல்லாம் ஓர் புதுப்பிக்கப்பட்ட வாழ்வை நோக்கி வழிநடத்துகின்றார். (It is God who effects the change -Thomas Merton) ஆகவே நாம் கடவுளுடைய அருளோடு இந்த புதுப்பித்தல் பயணத்தை தொடங்க வேண்டும். ஆண்டவர் இயேசுவின் பகிரங்க பணியின்போது அவர் தம்மை அடிக்கடி இறைத்தந்தையுடனான உறவிலே புதுப்பித்துக் கொண்டேயிருந்தார்.

“அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைமேல் ஏறினார்” (மத் 14:23). “இயேசு விடியற்காலை கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்கு புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்” (மற்1:35) என்று வாசிக்கின்றோம். அதுமாத்திரமல்ல அவர் பகல் முழுவதும் மக்களோடு தன்னை கரைத்துக்கொண்டார். தனது அப்பா மகன் உரையாடலிலே பெற்ற இறைஅனுபவம் அவரை இறையாட்சியை இவ்வுலகில் நிறுவ புதியதொரு வாழ்க்கை முறையை மக்கள் மத்தியில் கொண்டுவரவும் அர்ப்பணிப்போடு செயற்படத்தூண்டியது.

ஆகவே தனிமனித புதுப்பித்தலுக்கு அடிப்படையான தேவை என்னவென்றால் ஆழ்நிலை செபவாழ்வு (Contemplative prayer life). பவுலின் பார்வையில் கூறவேண்டும் என்றால் இயேசுவின் மனநிலையை (பிலி:2:5) கொண்டவர்களாக மாறுவது. மாற்றங்கள் மனிதவாழ்வில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இவைகள் அனைத்தையும் இயேசுவின் மனநிலையோடு சந்திந்து அனைவருக்கும் நல்வழி காட்டும் சீடத்துவ வாழ்வில் பக்குவமுள்ள கிறிஸ்தவர்கள் எமக்குத் தேவை.

இவர்கள், பொதுநிலையினராக இருக்கலாம் அல்லது பணி அழைப்புக்கென தங்களை அர்ப்பணித்துள்ள இறை பணியாளராக இருக்கலாம். நாம் அனைவரும் மாற்று சமுதாயம் படைக்கும் பணியில் இயேசுவைப்போல வாழ வேண்டும் என்றால் எங்களையே புதுப்பித்துக் கொள்வோம். இப்புதுப்பித்தல் தயாரிப்புக்களிலே, எம்மை முழு மனதோடு ஈடுபடுத்த முன்வருவோம். நேற்று உண்டோம்! இன்றும், நேற்று உடுத்தினோம்! இன்றும் நேற்று பிறந்தோம்! ஏன் இன்றும் பிறக்க முடியாது?’ மறைமாவட்டத்தின் அருட்பணி இலக்காகிய “அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி” மறைமாவட்ட மேற்புப்பணி புதுப்பித்தல் ஆண்டில் மாற்றம் (தனிமனிதன், இளையோர் குடும்பம், அன்பியம்) காணுவோம். எம்வாழ்வில் மறு கிறிஸ்துக்களாக மாறுவோம்.●

*(முற்றும்)*

## நோயைக் குணமாக்குவது....

### 05ஆம் பக்கத் தொடர்ச்சி.

நம் ஆண்டவர் மனித சமுதாயத்திற்கு வழங்கியுள்ள மாபெரும் கொடை பற்றிக் கூறும் சீராக் நூலிலிருந்து (சீராக்.17,1-13) வாசிக்கப்பட்ட இந்நாள் திருப்பலியின் வாசகம் பற்றியும் குறிப்பிட்ட திருத்தந்தை ஆண்டவர் மனிதரைப் படைத்தபின் அவர்களை அறிவாலும், கூர்மதியாலும் நிரப்பினார் நன்மை தீமையையும் அவர்களுக்குக் காட்டினார். அறிவை அவர்களுக்கு வழங்கினார். வாழ்வு அளிக்கும் திருச்சட்டத்தை அவர்களுக்கு உரிமையாக்கினார் என்று கூறினார்.

நீங்கள் தனியாய் இல்லை, நீண்ட காலமாக புற்றுநோய்களால் துன்புறும் மக்கள் இவ்வுலகிலிருந்து உறவுகளிலிருந்து மற்றும் அன்றாட வாழ்விலிருந்து பிரித்து வைக்கப்பட்டதாக உணரலாம் அவர்களின் நோய்களும் வழங்கப்படும் சிகிச்சைகளும் எதிர்காலம் பற்றிய கேள்வியை எழுப்பலாம். ஆயினும் இவர்கள் தனியாக இல்லை, வேதனைகளை அனுபவித்து சிலுவையில் இறந்த ஆண்டவர் அவர்களுக்கு அருகில் இருக்கின்றார் என்றும் திருத்தந்தை கூறினார்.

இந்நோயாளர்களின் துன்ப காலத்தில் இவர்களுக்கு அருகில் இருக்கும் பல மக்கள் இயேசு மற்றும் நோயாளரின் அன்னையாகிய அன்னை மரியின் பிரசன்னம் மற்றும் ஆறுதலின் காணக்கூடிய அடையாளமாக உள்ளனர் எனவும் திருத்தந்தை ஆறுதல் தெரிவித்தார்.●

# நீங்காத நினைவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 08 1978



உதிர்வு 29 03 2018

### அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் தவராஜா (தவம்)

(முருங்கன் கமம், முருங்கன்)

**"உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோவா. 11:25)**

எம் அன்பின் மகனே எம்மவர் சோதரனே கரை திரண்டு ஓராண்டு ஓடினாலும் ஆறவில்லையே எம்மனதின் காயங்கள் கற்பனையில் கூட எண்ணவில்லை கணப்பொழுதில் எம்மை விட்டு பிரிவாய் என்று தவம் என்ற மூன்றெழுத்தை தினந்தோறும் உச்சரிக்கின்றோம். எங்கள் நினைவில் இன்னொரு தடவை உன் முகத்தை காண ஏங்குகின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,**
அன்புத்தாய் சகோதரங்கள், மைத்துணர்மார், மருமக்கள், பெறாமக்கள், உற்றார், உறவினர்.

## 02 ஆண்டு, 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி





### சுவானி அருள்வாசகம் | அருள்வாசகம் மேரி அம்மா

(பெரியமுறிப்பு, மடுறோட்)

மலர்வு : 11 - 02 - 1937
உதிர்வு : 13 - 03 - 2017

மலர்வு : 04 - 09 - 1944
உதிர்வு : 13 - 01 - 2018

**"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ நமக்கே சொந்தம்" (எசாயா 43:1).**

என்பும், சதையும் போல் இணைந்திருந்து வாழ்ந்தவரே
அன்பாலே அனைவரையும் கவர்ந்தென்றும் மகிழ்ந்தவரே
துன்பம் வரும் போது தூயவனின் தாள் பணிந்தீர்
இன்பமுடன் இறைவன் உம்மை இணைத்தருள
வேண்டுகின்றோம்.

***உம் பிரிவால் துயருறும்:***
*குடும்பத்தினர்.*
*தகவல் : அ. அந்தோனிமுத்து*

## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 10 1955



உதிர்வு 25 03 2016

### திரு. சூ. சிப்பிரியான் லெம்பட்

(மூர்வீதி, மன்னார்)

உறங்காத உள்ளமென்று உணர்வோடு போராடி உறைவிடம்
தேடியிங்கே இறை மடி சேர்த்ததேனோ?
மெய்யான அன்பினிலே எம்மோடு இரங்கி நின்றாய்!
பொய்யான வாழ்வென்று புறப்பட்டு போனதெங்கோ!
ஆண்டுகள் மூன்று கடந்தாலும் நெஞ்சை விட்டு
அழியாதது உங்கள் வதனம்
உங்கள் ஆன்மா சாந்தி பெற உள்ளத்தால் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்;**
குடும்பத்தினர்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 05 1968



உதிர்வு 24 03 2009

### திரு. செ. கொன்சாலஸ்

(ஆண்டாங்குளம்)

வாழ்வின் ஓட்டம் வான்மட்டும்.
உயரும் என நாம் நினைத்தோம் - அப்பா
உம் வாழ்வின் வீழ்ச்சிக்கு வித்தாகிப் போனதே
கோர யுத்தம் பிறப்பில் இருந்து உன் இதயத்தை
துடிக்க வைத்த இறைவனுக்கு - உன்
இறப்பிற்கும் உன் இதயம் தேவை என்றாரே!
இம் மண்விட்டு மறைந்து நீங்கள் மாயமாய் போனாலும் - எம்
மனம் விட்டு மறையவில்லை அப்பா
உன் உடல் விதைத்த கல்லறைத் தோட்டத்தில்
ஓர் நாளில் உயிர்பூவாய் கலங்கிடுவீங்க அப்பா
உமக்காய் செபிக்கின்றோம் ஆண்டவரில் துயில் கொள்ளுங்கள்.

**பிரிவால் நினைந்துருகும்;**
மனைவி, பிள்ளை, அப்பா, அம்மா, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 08 1942



உதிர்வு 10 03 2018

### திருமதி. அன்னம்மா சிலூவைராஜா

(தங்கமான அம்மா, தங்கம்மா)
(பனங்கட்டுகொட்டு, மன்னார்)

**"மண்ணில் வாழ்ந்து சென்ற நல் இதயமோ விண்ணில் இறைவன் இன்பம் தருவார்"**

ஆண்டுகள் இரண்டு அல்ல இருபது ஆண்டுகள் கடந்தாலும் மனதை விட்டகலுமோ அம்மா. உம் பாச மழையில் நனைந்து வளர்ந்தோம் அம்மா துன்பத்தை நாம் உணராதிருக்க சுமைதாங்கியாய் இருந்த அம்மா உங்கள் தோள்மீது சாய்ந்து நாங்கள் துயில் கொள்ள நினைத்தது கனவாகிப்போய் விட்டதே. அம்மா நீங்கள் என்றும் அமைதி பெற்று வாழ்ந்திட தினமும் எமது செபத்தில் வேண்டுகின்றோம். அம்மா! அம்மா!

**பிரிவால் நினைந்துருகும்;** அருமைப் பிள்ளைகள், மருமகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
தகவல்: மகன் பீ. நேசன்.

## 07ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 16 1958



உதிர்வு 08 03 2012

### திருமதி. கொன்சால் சந்தானான் (மலர்)

(பொன்தீவுகண்டல், முருங்கன்)

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோ.11:25)**

அன்பு முகம் மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள் ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே. உங்கள் நினைவுகள் எம் உயிரோடு உணர்வோடு கலந்து இதயத்தில் என்னும் எங்களோடு வாழ்கின்றீர்கள். எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும் என்றும் உங்கள் நினைவுடன்

**பிரிவால் நினைந்துருகும்;**
குடும்பத்தினர், கணவன், பிள்ளைகள், மருமகன்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. பெஞ்சமின் ஜோர்ஜ் விமல்ராஜன்

Music Director Indian Cinema)

(எமில்நகர், மன்னார்)

மலர்வு : 29-04-1967
உதிர்வு : 19-02-2019

**"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய்த் திகழ்வாய் உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்" (எசா. 62:3)**

அன்புப் பெற்றோர் பாசம்நிறை சகோதரருடன்
அன்பின் சுடரால் வாழ்ந்தாயே!
அன்பு இறைவனிடம் நீ பெற்றது, கற்றது
அளவிடமுடியா அரும்பெரும் கொடைகள் அன்றோ
அவனியில் நீ விட்டுச் சென்ற இசை
அங்குமிங்கும் காற்றோடு கலந்து
அனைவர் உள்ளத்திலும் தொட்டுச் செல்லுமே
அமைதியுடன் விண்ணுலகில் நிலைகொள்ள
அருள்புரிய வேண்டுகின்றோம் - இறைவா
அமைதி! அமைதி! என்றும் அமைதி பெறுக.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்.

## தவக்காலம் :

ஆண்டவரோடும்
அயலவரோடும்
ஒப்புரவாகி,
உறவைப்
புதுப்பித்துக்
கொள்ளும்
அருமையான
காலம்!

## இலங்கை மண்ணில்....

01ஆம் பக்கத் தொடர்ச்சி

இங்கு தங்கியிருக்கும் இச்சபைக் குருக்கள் பொப்புலர் மிஷன் தியானத்தை எமது மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும், ஏனைய மறைமாவட்டங்களிலும் சிறப்பாக நடத்த இருக்கின்றார்கள். இத்தியானத்தில், பொதுத் தியானம், செப ஊர்வலம், வீடு தரிசிப்பு, உடல் உளநோயிலிருந்து விடுதலையளிக்கும் வழிபாடு போன்ற வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும்.

17ஆம் நூற்றாண்டில் புனித வின்சென்டீபோல் அவர்களால் பொப்புலர் மிஷன் தியானம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தியாவில் பல மாநிலங்களில் இத்தியானம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ் இல்லத் திறப்புவிழா சிறப்பாக நடைபெற ஒழுங்கமைத்த பங்குத்தந்தை அருட்பணி. ச.மாக்கஸ் அவர்களுக்கும், உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. அ.மரியகிளைன் C.M. அவர்களுக்கும் வருகைதந்த குருக்கள், துறவியர்கள் மற்றும் பங்குமக்களுக்கும், சிறப்பாக இவ் இல்லத்தை வழங்கிய திருமதி. ஆன்மேரி குரூஸ் (ரஜனி) அவர்களுக்கும் அருட்பணி. றெபாயேல் கூத்தூர் V.C. அவர்களால் நன்றி கூறப்பட்டது. இச்சபைக் குருக்களால் நடத்தப்படும் இறைபணிகள் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.●

தகவல். ஜதஸ், வங்காலை.

# நீங்காத நினைவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
09
01
1966



உதிர்வு
30
03
2018

### திருமதி. R. இராஜேஸ்வரி பள்ளங்கோட்டை
(நானாட்டான்)

எம் குடும்பத்தின் குலவிளக்கே, பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய், அன்பிற்கு இலக்கணமாய்
வாழ்வின் வழிகாட்டியாய், எம்மை வழிநடத்திய
எங்கள் அன்பு தெய்வமே!
ஒரு போதும் உம்மை மறவாமல் நாமிருந்தோமம்மா
ஓயாது உம் குரல் இனிமை எதிரொலிக்க
ஒவ்வொரு கணமும் நினைத்து நினைத்து அழுகின்றோமம்மா!
அம்மா என்றழைக்க அம்மா நீங்கள் இல்லையே
அடிமனதில் வலி துடிக்க உயிரோடு வாழ்கின்றோமம்மா
உம் ஆன்மா இறைவனில் இளைப்பாற நிதமும் பிராத்திக்கின்றோம்
கண்ணீருடன்

**பிரிவால் நினைந்துருகும்,** கணவன், பிள்ளைகள், குடும்பத்தினர்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
13
08
1934



உதிர்வு
27
03
2015

### திரு. பாவிலுப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்
(இளைப்பாறிய அதிபர் - முத்தரிப்புத்துறை)

நீளும் இரவில் உங்களை நினைக்கும் போதெல்லாம்
விழியின் ஓரம் உங்கள் நினைவுத் துளிகள்
கண்ணீராய் கரைகின்றது.
இறுகப் பிடிக்கும் உங்கள் கைகளில் ஸ்பரிசத்துக்காய்
ஒவ்வொரு நொடியும் ஏங்குகின்றோம் ஐயா,
எம் வாழ்வின் வழிகாட்டியே எம் ஐயா
விண்ணகம் வாழும் நீர்
எமக்காய் இறைவனை இறைஞ்சுடுவீரே!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், பெறாமக்கள், உறவினர்கள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12
06
1958



உதிர்வு
30
03
2018

### திரு. சு. வைத்தியநாதன்
(மாவிலங்கேணி)

ஓராண்டு கடந்திடினும் இன்னும் ஆறாத் துயரில் நாமுள்ளோம்.
ஆறுதல் வார்த்தை பல கேட்டினும் ஆறுதலில்லையே எம் உள்ளம்
மனைவியையும், பிள்ளைகளையும் மூத்த மகனிடம் ஒப்படைத்து
அவன் மடியினில் உயிர் துறந்தாயே இயேசு இறந்த நாளினிலே.
நீங்கள் எங்களை விட்டு சென்றாலும்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும்
உம் நினைவுகள் எம்மை கண்ணீர் விட வைக்குதே
உம்மை நினைத்து நாங்கள் தலை நிமிர்ந்து வாழ வழி செய்தீர்
தாங்க முடியவில்லை உங்கள் பிரிவுதனை அடுத்த பிறவியிலும்
உம் பிள்ளைகளாய் பிறக்க இறைவனை கேட்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** மனைவி, பிள்ளைகள், மருமகள், சகோதரங்கள் மற்றும் உறவுகள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி





### திரு. அ. ஆரோக்கியம்   திருமதி. அ. மடுத்தீனாள்
(ஆண்டாங்குளம்)

மலர்வு 15-08-1942   மலர்வு 31-03-1941
உதிர்வு 29-03-2018   உதிர்வு 25-03-2018

இறைவன் இணைத்த இனிய ஜோடியே
நிறைந்த அன்பின் நிஜமானவர்களே
ஒன்றை விட்டு ஒன்று பிரியாத
ஒற்றுமையின் அன்றில் பறவைகளே
ஓர் இரு நாட்களில் ஒன்றாகப் போன
உன்னதமான உயரிய சின்னங்களே
உங்களை எங்களால் ஒருபோதும்
மறக்க முடியாது பரமன் அடியில்
மகிழ்ந்திருங்கள் மன்றாடுவோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
24
10
1940



உதிர்வு
05
02
2019

### திருமதி. கு. அன்னபுஸ்பம் லெம்பேட் (ராணி)
(9ஆம் வட்டாரம், வங்காலை)

பத்துமாதம் பக்குவமாய் பரிந்து எம்மை நீர் சுமந்து
பாரினில் யாம் நனி சிறக்க பாகாய் உனை கரைத்தவளே
பரிசுத்தமாய் நாம் வாழ பாதை காட்டி அமைந்தவளே
பந்தயத்தின் ஓட்டம் முற்றி பரமன் பதம் நீர் சென்றனையோ
முப்பத்தொரு தினங்கள் உந்தன் முகங் காணாமல் முடிந்ததம்மா
முப்பொழுதும் நின் நினைவே எங்கள் மூச்சில் நீயே நிறைந்தாயம்மா. உன் நினைவு உள்ளந்தாங்கி யாம் உலாவருவோம் பணி வாழ்வினில் உன்னதன் தன் அருகமர்ந்து
உத்தம நற்பேறு பெற்று இறைப்பாறம்மா
இளைப்பாறு இறைவன் பாதம் இளைப்பாறு...!

**பிரிவால் நினைந்துருகும்,** அன்புப்பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01
08
1942



உதிர்வு
28
03
2017

### திரு. கிறிஸ்தோ மேரியன் அன்ரனிதாஸ்
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், படவரைஞர் பெற்றா, மன்னார்)

ஈராண்டுகள் கழிந்து போனாலும்
என்றும் மறந்து போகாத அன்பைக் காட்டி
சென்றவரே அப்பா. உம் அன்பைத் தோற்கடிக்கக் கூடிய
இன்னுமொரு அன்பை இந்த உலகில் யாராலும் தர முடியாதப்பா
சொந்தக் காலில் நிற்கும்போதுதான் தெரிகின்றது
உமது கால்கள் எவ்வளவு வலித்திருக்குமென்று

அப்பா வரங்களுக்காக ஏங்கிய பொழுதுதான் தெரிகின்றது
கடவுள் தந்த மிகப்பெரிய வரம் நீங்களென்று.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்.